# தமிழரசு

ஆகஸ்ட் 2009

விலை ரூ.10/-




செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு







சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா அரங்கத்தில் நடைபெற்ற
சென்னை–அண்ணா பல்கலைக்கழகத்தின் பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு
சிறப்புப் பட்டமளிப்பு விழாவில், மேதகு தமிழக ஆளுநர் திரு.சுர்ஜித் சிங் பர்னாலா அவர்கள்,
மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு
மதிப்புறு முனைவர் பட்டத்தை வழங்கினார். (1–8–2009)



# தமிழரசு

செய்தி-மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2040

ஆடி - ஆவணி

ஆகஸ்ட் 2009

மலர் : 41 இதழ் : 2



**ஆசிரியர் குழு**

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர் :

திரு. **சி.காமராஜ்,** இ.ஆ.ப.,
இயக்குநர் மற்றும்
அலுவலால் அரசு துணைச் செயலாளர்
செய்தி-மக்கள் தொடர்புத்துறை

நிருவாக ஆசிரியர்

**துரை. தாமரைச்செல்வம்**
துணை இயக்குநர் (வெளியீடுகள்)

பொறுப்பாசிரியர்களான
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

**க. குமாரவேலு**
**டி.எஸ்.சுப்பிரமணியம்**
**த. ஹரிராம்**

உதவி ஆசிரியர்கள்

**வீ.இரா. நவநீதகிருஷ்ணகுமார்**
**இரா.இளவரசி**

நிருபர்கள்

**கோ. சண்முகம்**
**மாய குமரேசன்**

இதழ் உதவியாளர்கள்

**தி.பெரியார் சாக்ரடீசு**
**ஜெ. ஜெயசிம்ஹன்**

புகைப்படக்காரர்

**வி.இராதாகிருஷ்ணன்**

கணினி வடிவமைப்பு

**அ. மதன்,** உதவி ஒளியச்சுக்கோர்வையாளர்
**ஆர். பாலாஜி**
(ஒப்பந்த தொகுப்பூதிய கணினி இயக்குபவர்)



சென்னை - தமிழரசு அச்சகத்தில்
அச்சிடப்பட்டது.

தமிழரசு அலுவலகம்,
110,அண்ணாசாலை, சென்னை-600 002.



தொலைபேசி : 28520407/28520408
நிகரி : 28520407
மின் அஞ்சல் : tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tn.gov.in




**கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்**
**உடையானாம் வேந்தர்க் கொளி.**

நலவாழ்வுக்கு வேண்டியவற்றை வழங்கியும், நிலையுணர்ந்து கருணை காட்டியும், நடுநிலை தவறாமல் ஆட்சி நடத்தியும், மக்களைப் பேணிக் காப்பதே ஓர் அரசுக்குப் புகழொளி சேர்ப்பதாகும்.

**கலைஞர்** திருக்குறள் உரையிலிருந்து...



## இந்த இதழில்...

மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்களின் உரை


- ஏழை எளியோர் வாழ்வு வளம்பெற இடைவிடாது உழைப்போம்! .......... 2
- அன்புக்கரம் நீட்டுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை ஆரத்தழுவி வரவேற்பதுதான் எங்கள் இயல்பு .......... 10
- திருவள்ளுவர், சர்வக்ஞர் சிலைகள் - இரு மாநில மக்களுக்கான ஒற்றுமை சிலை .......... 17
- எனது கோபாலபுரம் இல்லம்-அஞ்சுகம் முத்துவேலர் பெயரில் இலவச மருத்துவமனையாக மாற்றப்படும்!.......... 36
- தமிழகமே சமத்துவபுரமாக வளர்ச்சி அடைய அனைவரும் பாடுபடுவோம்! பணியாற்றுவோம் .......... 46

மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின் உரை

- ரூ.616 கோடியில் இராமநாதபுரம் கூட்டுக்குடிநீர்த் திட்டம் .......... 58
- உலகளாவிய பொருளாதாரத்தில் நாடு முதன்மைபெற பல்கலைக்கழகங்கள் ஆராய்ச்சிக்கு முக்கியத்துவம் தரவேண்டும் .......... 62
- தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட இரட்டைமலை சீனிவாசன் திருவுருவச்சிலை - மணிமண்டபம் .......... 69
- 30 தொழில் திட்டங்கள் மூலமாக 38,700 கோடி ரூபாய் முதலீட்டில் 2,07,000 பேருக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படவுள்ளன .......... 71
- 5ஆவது கட்டமாக ரூ.500 கோடி நிதிஒதுக்கீட்டில் 25 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படவுள்ளன 77


முதலாம் அட்டை : மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் சுதந்திரத் திருநாளன்று, சென்னை கோட்டை கொத்தளத்தில் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். (15-8-2009)



# ஏழை எளியோர் வாழ்வு வளம்பெற இடைவிடாது உழைப்போம்!

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களின்**
**சுதந்திரத் திருநாள் உரை - 15.8.2009**

அருமைத் தாய்மார்களே!

அன்புப் பெரியோர்களே!

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே!

அமைச்சர் பெருமக்களே!

நாடாளுமன்ற, சட்டப்பேரவை உறுப்பினர்களே!

தமிழக அரசின் தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசு அதிகாரிகளே!

என் உயிரினும் மேலான அன்பு உடன் பிறப்புகளே!

அனைவருக்கும் எனது இனிய வணக்கம்; இதயம் கனிந்த சுதந்திர தின நல்வாழ்த்துகள்.

இந்த ஆகஸ்டுத் திங்கள் 15ஆம் நாள், ஏறத்தாழ 200 ஆண்டுகள் நமது நாட்டினை அடிமைப்படுத்தி ஆண்ட ஆங்கிலேயர்கள் வெளியேறிய நாள்! நமது நாட்டை நாமே ஆளும் உரிமை பெற்ற உன்னதமான நாள்!

"தாயின் மணிக்கொடி பாரீர்–அதைத்

தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்!"

என்ற மகாகவி பாரதியார் பாடலை நாம் இன்றும் இதயத்தில் ஒலி அலைகளாக்கி அந்தத் தேசியக் கொடிக்கு வணக்கம் செலுத்திடும் திருநாள்!

இந்நன்னாளில் – பதினெட்டு ஆண்டுகளாக என் நெஞ்சைச் சுட்டெரித்துக் கொண்டிருந்த கவலைக்கு மாமருந்தாக கருநாடகத் தலைநகரான பெங்களூரு மாநகரில் திறக்கப்படாமல் இருந்த அய்யன் திருவள்ளுவர் சிலையை – அருமைச் சகோதரர் மாண்புமிகு கருநாடக மாநில முதலமைச்சர் திரு.பி.எஸ்.எடியூரப்பா அவர்களின் சீரிய ஒத்துழைப்பின் பயனாக கடந்த 9.8.2009 அன்று நடைபெற்ற மாபெரும் விழாவில் திறந்து வைத்த மனநிறைவோடு;


திராவிட மொழிக் குடும்பத்தின் முக்கிய மொழிகளில் ஒன்றாகிய கன்னட மொழியின் – புகழ் மிக்கக் கவிஞர் சர்வக்ஞர் அவர்களின் திருவுருவச் சிலையைச் சென்னை மாநகரில் – 13.8.2009 அன்று கருநாடக மாநில முதலமைச்சர் திரு.பி.எஸ்.எடியூரப்பா அவர்களைக் கொண்டு திறந்து வைத்து, தமிழகம்–கருநாடகம் ஆகிய இரு மாநில மக்களிடையே நல்லுறவு தழைக்கச் செய்திடும் திருப்பணிகளை நிறைவேற்றிய மனநிறைவோடு;

சுதந்திர தினத்தன்று அனைத்து மாநில முதலமைச்சர்களும் தேசியக் கொடியை ஏற்றி வைப்பதற்கான உரிமையை 1974ஆம் ஆண்டில் அன்றைய பிரதமர் இந்திராகாந்தி அவர்களிடம் வலியுறுத்திப் பெற்றுத் தந்தவன் என்னும் உணர்வோடும் இன்று பதின்மூன்றாவது முறையாக இந்தக் கோட்டைக் கொத்தளத்தில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து, சுதந்திர தின உரையை நிகழ்த்துவதில் நான் உவகை மிகக் கொள்ளுகிறேன்.

நமது நாட்டுச் சுதந்திரத்தை மீட்டிட உடல், பொருள், ஆவி அனைத்தையும் – இழந்த தியாகச்சுடர்களுக்குத் தமிழக மக்கள் சார்பில் எனது வீர வணக்கங்களை உரித்தாக்குகிறேன்.

கத்தியின்றி, ரத்தமின்றி ஆயுதம் ஏந்தாமல், அகிம்சா யுத்தம் ஒன்றை நடத்தி வெள்ளை ஏகாதிபத்தியத்தை விரட்டிய அண்ணல் காந்தியடிகள் தமிழ் மண்ணை நேசித்தவர்;

"எந்தத் தமிழரைக் கண்டாலும் தென்னாப்பிரிக்காவில் தன்னலமின்றி தம்மையே அர்ப்பணித்துப் பணியாற்றிய தமிழர்களின் நினைவு எனக்கு வருகிறது. அவர்களுக்கு நன்றியறி தலைக் காட்டுவதற்காகத் தமிழர் களுடன் பழக வேண்டும் என்று விரும்புகிறேன்"



எனக் கூறி 14 முறை தமிழகத்திற்கு வந்த அண்ணல் காந்தியடிகளுக்கு விடுதலை இயக்கத்திற்கான போர் முறைகளை வகுப்பதில் தமிழகமும் ஒரு களமாகவே பயன்பட்டிருக்கிறது என்பதை வரலாறு எடுத்துரைக்கிறது.

**ஓய்வூதியம் அதிகரிப்பு**

விடுதலைப் போர்க்களத்தில் பல தியாக முத்திரைகளைப் பதித்த தமிழகம், நாடு சுதந்திரம் பெற்றபின் – சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்குத் திருவுருவச் சிலைகள், மணி மண்டபங்கள் போன்ற பல நினைவுச் சின்னங்களையும் ஏராளமாக அமைத்துத் தியாகிகளைப் போற்றி வருகிறது. சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கு 15.8.1997 முதல் வழங்கப்பட்ட ஓய்வூதியம் மாதம் 3 ஆயிரம் ரூபாய் என்று இருந்ததை 4 ஆயிரம் ரூபாய் என்றும், அவரது வாரிசுகளுக்கு வழங்கப்பட்ட குடும்ப ஓய்வூதியம் மாதம் 1,500 ரூபாய் என்று இருந்ததை 2,000 ரூபாய் என்றும் 1.5.2007 முதல் இந்த அரசு உயர்த்தி வழங்கி வருகிறது.

இந்த ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு விழா என்பதையும் – தியாகி கக்கன் அவர்களின் நூற்றாண்டு விழா என்பதையும் மனதிலே கொண்டு சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் ஓய்வூதியம் மாதம் 4 ஆயிரம் ரூபாய் என்பதை 5 ஆயிரம் ரூபாய் என்றும், அவரது வாரிசுகளுக்கு வழங்கப்பட்டு வரும் குடும்ப ஓய்வூதியம் மாதம் 2,000 ரூபாய் என்பதை மாதம் 2,500 ரூபாய் என்றும் 1.9.2009 முதல் உயர்த்தி வழங்கிட இந்த அரசு முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழக அரசியலில் தன்மான உணர்வுகளை மீட்டி எழுச்சியை ஏற்படுத்திய அறிவு ஆசான், இந்த ஆண்டின் நூற்றாண்டு விழா வேந்தர் பேரறிஞர் அண்ணா அவர்கள், தொடர்ந்து சுட்டிக்காட்டி வந்த

பொறுப்புணர்ச்சியோடு, திராவிட முன்னேற்றக் கழக அரசு தமிழக மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திட பல்வேறு திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றது.

**மக்கள் நலத்திட்டங்கள்**

2006க்குப்பின் இதுவரை புதிய வரிகள் எதுவும் விதிக்கப்படாமல், பல்வேறு வரிச் சலுகைகளை வழங்கி இந்தியாவில் எந்த ஒரு மாநிலமும் நிறைவேற்றாத பல புதிய திட்டங்களை நிறைவேற்றி; தமிழக மக்களின் அரசியல், சமூக, பொருளாதார நிலைகளை மேம்படுத்தி வருகிறது இந்த அரசு.

1 ரூபாய்க்கு 1 கிலோ அரிசி வழங்கும் திட்டம்;

ஏழைப் பெண்களின் திருமணங்களுக்கு 20 ஆயிரம் ரூபாய் வீதம் உதவித் தொகை வழங்கும் திட்டம்;

ஏழை கர்ப்பிணிப் பெண்கள் ஊட்டச் சத்து பெற 6 ஆயிரம் ரூபாய் உதவித் தொகை அளிக்கும் திட்டம்;

50 வயது கடந்தும், திருமணமாகாத ஏழைப் பெண்களுக்கு மாதம் 400 ரூபாய் உதவித் தொகை வழங்கும் திட்டம்;

முதியோர், ஆதரவற்ற விதவைகள், ஊனமுற்றோர்க்கு வழங்கப்படும் உதவித் தொகை மாதம் 200 ரூபாய் என்பது 400 ரூபாய்; கடும் ஊனமுற்றோருக்கான உதவித் தொகை மாதம் 200 ரூபாய் என்பது 500 ரூபாய் என அளிக்கும் திட்டம்;

வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாத குடும்பங்கள் அனைத்திற்கும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம்;

ஏழைத் தாய்மார்களுக்கு எரிவாயு இணைப்புடன் கூடிய இலவச எரிவாயு அடுப்புகள் வழங்கும் திட்டம்;

1 இலட்சத்து 75 ஆயிரத்து 798 நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர்கள் – விவசாயிகள் குடும்பங்களுக்கு 2 இலட்சத்து 10 ஆயிரத்து 747 ஏக்கர் இலவச நிலம் வழங்கிய திட்டம்;

6 இலட்சத்து 73 ஆயிரத்து 486 ஏழைக் குடும்பங்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கிய திட்டம்;

விவசாயத் தொழிலாளர் நல வாரியம், அரவாணிகள் நல வாரியம், தூய்மைப் பணிபுரிவோர் நலவாரியம் உட்பட 27 அமைப்புசாராத் தொழிலாளர் நல வாரியங்கள் மூலம் 10 இலட்சத்து 10 ஆயிரத்து 959 அமைப்புசாராத் தொழிலாளர் குடும்பங்களுக்கு 439 கோடியே 43 இலட்சம் ரூபாய் உதவித் தொகை அளித்து, மேலும் தொடர்ந்து நடைபெறும் திட்டம்;

7 ஆயிரம் கோடி ரூபாய் கூட்டுறவுக் கடன் தள்ளுபடி செய்த திட்டம்;

விவசாயக் கடனை முறையாகத் திருப்பிச் செலுத்தினால் பயிர்க்



கடனுக்கு அறவே வட்டி ரத்து செய்யும் திட்டம்;

பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் விவசாயிகளுக்கு அரசு மானியமாக 50 சதவீத காப்பீட்டுத் தொகை வழங்கும் திட்டம்;

பண்ணைசாராக் கடன்களுக்கு வட்டி, அபராத வட்டி தள்ளுபடி செய்யும் திட்டம்;

தலவரி, தலமேல்வரி, தண்ணீர்த் தீர்வை அனைத்தும் ரத்து செய்யப்பட்டு ஏக்கர் ஒன்றுக்கு புன்செய் நிலங் களுக்கு நிலவரி 15 ரூபாய் என்பது 2 ரூபாய் என்றும், நன்செய் நிலங்களுக்கு 50 ரூபாய் என்பது 5 ரூபாய் என்றும் குறைத்துள்ள திட்டம்;

இந்தியாவிலேயே முதல் மாநிலமாக – மாநிலத்திற்குள் பாயும் ஆறுகளை இணைக்கும் திட்டத்தின் கீழ் 165 கோடி ரூபாய் மதிப்பீட்டில் காவிரி – குண்டாறு இணைப்புத் திட்டம்;

369 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தாமிர பரணி – கருமேனியாறு – நம்பியாறு இணைப்புத் திட்டம் – என விவசாயிகள் பயன்பெற பல்வேறு புதிய திட்டங்கள்;

பள்ளிக் குழந்தைகளுக்கு சத்துண வுடன் வாரம் 3 முறை முட்டைகள், வாழைப்பழங்கள் வழங்கிடும் திட்டம்;

காமராஜர் பிறந்த நாள் ''கல்வி வளர்ச்சி நாள்'' எனப் பிறப்பித்துள்ள சட்டம்;

தமிழ் செம்மொழி என அறிவிக்கப்பட்டு செம்மொழித் தமிழாய்வு மையம் சென்னையில் நிறுவப்பட்டுள்ளதுடன், தைத் திங்கள் முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு தொடங்கும் நாள் என சட்டம்;

அரசு ஊழியர்களுக்கு நான்காண்டுகளில் 2 இலட்ச ரூபாய் வரை மருத்துவ உதவி நல்கும் "புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்";

ஒரு கோடி குடும்பங்கள் பயன்பெறும் "உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம்"

ஆகிய திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டு அனைவருக்கும் தரமான மருத்துவ வசதிகள் கிடைத்திட ஆவன செய்யப்பட்டுள்ளது.

ஏறத்தாழ 3 இலட்சத்து 44 ஆயிரம் இளைஞர்களுக்கு அரசுத் துறைகளில் பணி நியமனங்கள்;

மேலும், 2 இலட்சத்து 13 ஆயிரத்து 692 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் 38 ஆயிரத்து 941 கோடி ரூபாய் முதலீட்டில் 32 புதிய தொழிற்சாலைகள் அமைக்கும் திட்டம்;

சமூகநீதி வலுப்பெற இஸ்லாமியர் களுக்கு 3.5 விழுக்காடும், அருந்ததியர் களுக்கு 3 விழுக்காடும் தனி உள் இட ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டு;

சமதர்மச் சிந்தனைகள் மிளிர ஏற்கெனவே அமைக்கப்பட்ட 145 பெரியார் நினைவு சமத்துவபுரங்களுடன், மேலும் 95 சமத்துவபுரங்கள்;

சென்னைக் கோட்டூர்புரத்தில் உலகத்தரத்தில் 166 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அண்ணா நூற்றாண்டு மாநில நூலகம்;

இந்த அரசினால் "ஓமந்தூரார் வளாகம்" எனப் பெயரிடப்பெற்ற அரசினர் தோட்ட வளாகத்தில் 450 கோடி

**"நம் நாடு பெற்றுள்ள சுதந்திரத்தின் பயன்கள் தமிழக மக்களுக்கு, குறிப்பாக ஏழை எளியவர் களுக்குத் தடையின்றிக் கிடைத்திட வேண்டும்; அவர்கள் வாழ்வு மேலும் மேலும் வளம் பெற வேண்டும்; சமூக, அறிவியல், பொருளாதார நிலைகளில் தொடர்ந்து முன்னேறி எல்லா வகையிலும் இந்தியாவில் தமிழகமே முதல் மாநிலம் எனும் நிலை உறுதி செய்யப்பட வேண்டும் என்னும் விழைவோடு, ஒவ்வொரு நொடி நேரத்தையும் ,,ஏண்ணி எண்ணிச் செலவிட்டு வருகிறது இந்த அரசு**



ரூபாய் செலவில் புதிய சட்டமன்ற தலைமைச் செயலகம்;

100 கோடி ரூபாய் செலவில் அடையாறு பூங்கா;

சென்னை மாநகரின் குடிநீர்ப் பற்றாக்குறையை முற்றிலும் தீர்த்திட, வட சென்னை மீஞ்சூரிலும், 908 கோடி ரூபாய் மத்திய நிதியுதவியுடன் தென் சென்னை நெம்மேலியிலும் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டங்கள்;

ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கி நிதியுதவியுடன் 14 ஆயிரத்து 600 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னை மாநகரில் மெட்ரோ இரயில் திட்டம்;

சென்னைத் துறைமுகத்திலிருந்து மதுரவாயல் வரை 19 கிலோமீட்டர் நீளத்திற்கு 1,655 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பறக்கும் சாலைத் திட்டம்;

தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்திட, 1,334 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம்; முதலிய திட்டங்கள் விரைவில் பயனளிக்கும் வகையில் நிறைவேற்றப் படுகின்றன.

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவுவதற்காகத் தமிழக அரசு விடுத்த வேண்டுகோளை ஏற்றுத் தமிழக மக்கள் வழங்கிய நிதியுதவி 52 கோடி ரூபாயிலிருந்து இதுவரை நான்கு கட்டங்களில் 38 கோடியே 83 இலட்ச ரூபாய் மதிப்பீட்டிலான அரிசி, பருப்பு, சர்க்கரை, தேயிலை, துணிவகைகள், சமையல் பாத்திரங்கள் முதலான பல்வேறு பொருள்கள் தமிழக அரசின் சார்பில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதுதவிர, இலங்கையில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் நிவாரண உதவிக்கென இந்தியப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் அறிவித்த 500 கோடி ரூபாயுடன் தமிழக அரசின் சார்பில் 25 கோடி ரூபாய் நிதியுதவி அளிக்கப்படும் என ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு கோடி குடும்பங்கள் பயன்பெற உயிர்காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தை 23.7.2009 அன்று சென்னையில் தொடங்கி வைத்த மாண்புமிகு மத்திய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. குலாம் நபி ஆசாத் அவர்கள்,

"ஒவ்வொரு சாமானிய மனிதனின் வீட்டு வாசலுக்கும் சென்றடையத் தக்க வகையில் இத்திட்டம் வடிவமைக்கப் பட்டுள்ளது" என்று கூறியதுடன், "மருத்துவ சேவையை வழங்குவதில் தமிழ்நாடு இதர மாநிலங்களுக்கெல்லாம் முன் மாதிரியாகத் திகழ்கிறது" என்று பாராட்டினார்.

உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி திரு. கே. ஜி. பாலகிருஷ்ணன் அவர்கள்,

"இந்தியாவின் மற்ற மாநிலங்களை விட தமிழக அரசு நீதித் துறைக்கு அதிக நிதி ஒதுக்கீடு வழங்கியிருப்பது பாராட்டுக்குரியது; அதற்காக தமிழக அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்"

என்று 25.7.2009 அன்று சென்னை உயர்நீதிமன்ற விருந்தினர் மாளிகை திறப்பு விழாவில் பாராட்டினார்.

13ஆவது நிதி ஆணையத்தின் தலைவர் டாக்டர். விஜய்கேல்கர்,

"தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தி திண்டுக்கல், சிவகங்கை, கடலூர் ஆகிய மூன்று மாவட்டங்களுக்கு தேசிய விருது பெற்றுள்ள தமிழகம், ஊராட்சிகளின் வலிமையையும், திறமையையும் சுட்டிக் காட்டுகிறது என்றும், மற்ற மாநிலங்களெல்லாம் பின்பற்றப்பட வேண்டிய முன்னோடி மாநிலமாக விளங்கிக் கொண்டிருக் கிறது" என்றும் பாராட்டினார்.

இப்படிப் பலரது பாராட்டுகளையும், புகழுரைகளையும் தமிழக அரசு தொடர்ந்து பெற்று வருகிறது.

நம் நாடு பெற்றுள்ள சுதந்திரத்தின் பயன்கள் தமிழக மக்களுக்கு, குறிப்பாக ஏழை எளியவர்களுக்குத் தடையின்றிக் கிடைத்திட வேண்டும்; அவர்கள் வாழ்வு மேலும் மேலும் வளம் பெற வேண்டும்; சமூக, அறிவியல், பொருளாதார நிலைகளில் தொடர்ந்து முன்னேறி எல்லா வகையிலும் இந்தியாவில் தமிழகமே முதல் மாநிலம் எனும் நிலை உறுதி செய்யப்பட வேண்டும் என்னும் விழைவோடு, ஒவ்வொரு நொடி நேரத்தையும் எண்ணி எண்ணிச் செலவிட்டு வருகிறது இந்த அரசு என்பதனை நீவீர் நன்கு அறிவீர் எனும் நம்பிக்கையோடு, இத்தகைய பணிகள் தொடர இடைவிடாது உழைப்போம் என இத்திருநாளில் சூளுரைத்து என் அருமைத் தமிழக மக்களுக்கு மீண்டும் சுதந்திர தின நல்வாழ்த்துகளைத் தெரிவித்து விடை பெறுகிறேன்.

வாழ்க நமது தாயகம்! ★

# “அன்புக்கரம் நீட்டுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை ஆரத்தழுவி வரவேற்பது தான் எங்கள் இயல்பு”




**பெங்களூருவில் 9.8.2009 அன்று நடைபெற்ற விழாவில்**
**அய்யன் திருவள்ளுவர் சிலையைத் திறந்து வைத்து,**
**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை:**

பேரன்புக்கும் பெருமதிப்பிற்கும் உரிய கருநாடக மாநிலத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் பி.எஸ்.எடியூரப்பா அவர்களே,

கருநாடக சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு நண்பர் சித்தராமையா அவர்களே,

தமிழக செய்தித்துறை அமைச்சர் தம்பி பரிதி இளம்வழுதி அவர்களே,

சிவாஜிநகர் சட்டமன்ற உறுப்பினர் திரு. ரோஷன்பெய்க் அவர்களே,

பெங்களூரு மத்தியத் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. பி.சி.மோகன் அவர்களே,

மத்திய, மாநில அமைச்சர்களே மற்றும் பெங்களூரு தமிழ்ச்சங்கத்தினுடைய தலைவர் திரு. மீனாட்சி சுந்தரம் அவர்களே,

செயலாளர் திரு. தாமோதரன் அவர்களே,

நாடாளுமன்ற – சட்டப்பேரவை உறுப்பினர்களே, அரசு அதிகாரிகளே,

என்னுடைய நண்பர் வெங்கைய்ய நாயுடு அவர்களே, இல.கணேசன் அவர்களே,

கவிப்பேரரசு வைரமுத்து அவர்களே,

தாய்மார்களே, பெரியோர்களே, என் உயிரினும் மேலான தமிழக, கருநாடக மாநிலத்து உடன்பிறப்புக்களே,

## இதயங்களைத் திறந்த சிறப்பு விழா

நான் 18 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு சபதம் செய்திருந்தேன். கடந்த 18 ஆண்டுகளாக பெங்களூருவில் நடைபெறுகின்ற எந்த நிகழ்ச்சிக்கு யார் என்னை அழைத்தாலும் அது என்னுடைய கட்சி நிகழ்ச்சியாக இருந்தாலும், அல்லது தோழமைக் கட்சியினுடைய நிகழ்ச்சியாக இருந்தாலும் எந்தவொரு நிகழ்ச்சிக்கு என்னை அழைத்தபோதும் நான் அவர்களுக்குச் சொன்ன ஒரு செய்தி,

“பெங்களூருவில் திருவள்ளுவர் சிலை மூடப்பட்டுக் கிடக்கிறது, அது என்றைக்கு திறந்துவைக்கப்படுகிறதோ, அன்றைக்குத் தான் நான் பெங்களூருவுக்கு வருவேன்” என்று சொல்லியிருந்தேன். அந்த சபதத்தை நான் நிறைவேற்றவில்லை; நம்முடைய முதலமைச்சர் எடியூரப்பா அவர்கள் நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறார். என் சபதத்தை நிறைவேற்றுகின்ற பொறுப்பை அவர் ஏற்றுக் கொண்டதற்காக பக்கத்து மாநிலத்தினுடைய முதலமைச்சர் என்கின்ற முறையில் நீண்ட நாளாக கருநாடக மாநிலத்தோடு தொடர்புடையவன் என்கின்ற முறையில் என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இன்றைக்கு நடைபெற்றிருப்பது திருவள்ளுவருடைய சிலை திறப்பு விழா; இன்னும் சில நாட்களுக்குப் பிறகு சென்னை மாநகரத்திலே நடக்க இருப்பது சர்வக்ஞர் சிலை திறப்பு விழா. இந்த இரண்டும், இரண்டு சிலை திறப்பு விழாக்களை குறிப்பது அல்ல. இரு மாநில மக்களுடைய இதயங்களைத் திறந்திருக்கின்ற சிறப்பு விழாக்கள் என்பதை நான் இங்கே எடுத்துக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.

வள்ளுவருடைய சிலையை இங்கே திறக்கிற அதே நேரத்தில், தமிழகத்திலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற ஆட்சி சர்வக்ஞருடைய, அவர் கன்னட மொழியிலே படைத்துள்ள உரைப் பாக்களையெல்லாம் இறையடியார் என்னும் தமிழறிஞரைக் கொண்டு, தமிழில் மொழிபெயர்த்து, அவர் கவிதை நடையிலே தந்துள்ள உரைப்பா என்ற சர்வக்ஞருடைய நூலை வெளியிட்டு மகிழ்ந்ததுதான் தமிழ்நாடு அரசு என்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## பொதுமைக் கருத்துகளைச் சொன்னவர்

சர்வக்ஞருடைய உரைப்பா நூலை வெளியிடக் கூடாது என்று அங்கே எந்தத் தமிழனும் சொல்லவில்லை. அவர் கன்னட நாட்டிற்குரியவர்; கன்னட மாநிலத்தவர்; ஆகவே அவருடைய புத்தகங்களை தமிழகத்திலே வெளியிடக் கூடாது என்றோ, மொழிபெயர்க்கக் கூடாது என்றோ எந்தத் தமிழனும் அங்கே சொல்லவில்லை.

நான் எந்த அளவிற்கு சர்வக்ஞருடைய நூல்களையெல்லாம் படித்திருக்கிறேன் என்பதற்கு, நான் இரண்டொரு ஆதாரங்களைக் கூறமுடியும். கன்னட மொழியிலே கூறவேண்டுமேயானால்,

“ஆடு முட்டத சொப்பில்ல; சர்வக்ஞ
பரெயத விஷயவில்ல”

அதாவது ஆடு முட்டாத இலையுமில்லை, சர்வக்ஞர் சொல்லாத விஷயங்களும் இல்லை.

சர்வக்ஞர் பெரும்பாலும் புரட்சிகரமான கருத்துகளை, முற்போக்குக் கருத்துகளை, ஜாதி, மத பேதங்களற்ற பொதுமைக் கருத்துகளை நாட்டிற்கு, உலகத்திற்கு எடுத்துச் சொன்னவர். அவரை இன்றைக்கு இந்த உலகத்திலே பலருக்கும் அறிமுகப்படுத்தாதற்கு காரணம், பாவம்! அவர் ஜாதியின் பெயரால் – முற்போக்கு ஜாதியை சேர்ந்தவர் அல்ல. பிற்படுத்தப்பட்ட, அதைவிட மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தை சேர்ந்தவர் சர்வக்ஞர். அதனால்தான் அவருடைய எழுத்துகள், கவிதைகள் வீறுகொண்டு இன்றைக்கு நம்முடைய உள்ளத்திலே பதிவாகக்கூடிய அளவிற்கு வெளியிடப் பட்டிருக்கின்றன.

அவர் சொல்லுகிறார்,

"காசி பயணத்தின் காரணம் என்னய்யா!

மாசிலான் மனத்துள் இருக்க; அலைவது
காசினியில் ஏனோ சர்வக்ஞ"

காசியினுடைய கருத்துகள் மாசில்லாத வனுடைய உள்ளத்திலே பதிந்திருக்கும்பொழுது காசிக்கு பயணம் செய்தால்தான் புண்ணியம் கிடைக்கும் என்று எண்ண வேண்டிய அவசியம் என்ன ? என்கிறார்.

இதுமாத்திரமல்ல;

"ஜாதியில் உயர்ந்தோன் உத்தமன் என்று
எண்ணற்க!

மேதினி வாழ் மாந்தர் சமம் என்பார்
மேதினியில் உத்தமராம் சர்வக்ஞ."

சொர்க்கத்திற்குச் செல்ல வேண்டுமேயானால் அதற்கு இன்னின்ன காரியங்களைச் செய்ய வேண்டுமென்று சொல்லுகின்றார்களே; அவர்களைக் கேட்கிறேன். அதற்கு கங்கையிலே நீராட வேண்டும், தீர்த்தம் ஆட வேண்டும், என்றெல்லாம் சொல்கிறார்களே; நான் அவர்களைக் கேட்கிறேன். அப்படியானால் தவளை, தேரை, மீன் எல்லாம் கங்கையிலும் மற்ற தீர்த்தங்களிலும் பொழுதெல்லாம் இருக்கிறதே அவையெல்லாம் ஏன் சொர்க்கத்திற்குச் செல்லவில்லை என்று கேட்கிறார்.

இப்படிப்பட்ட ஒரு புரட்சிக்காரரை கன்னட மாநிலம் 500 ஆண்டுகளுக்கு முன்பு பெற்றிருந்தது. அவர் திருவள்ளுவருடைய கருத்துகளை எடுத்துச் சொன்னார். சித்தர்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொன்னார்.

"நட்ட கல்லை தெய்வமென்று
நாலு புட்பம் சாத்தியே,
சுற்றி வந்து மொண மொணவென்று
சொல்லும் மந்திரம் ஏதடா ?
நட்ட கல்லும் பேசுமோ ?
நாதன் உள்ளிருக்கையில்"

– என்ற சிவவாக்கியருடைய கருத்தை சர்வக்ஞர் எடுத்துச் சொன்னார்.

**ஒற்றுமையின் அடையாளம்**

அதனால் முற்போக்குக் கருத்திலேகூட இன்றைக்கு கருநாடக மாநிலமும், தமிழக மாநிலமும் ஒன்றுபட்டிருக்கின்ற அடையாள மாகத்தான் இந்த விழா நடைபெறுகின்றது என்று நான் குறிப்பிடு கிறேன்.

திருவள்ளுவருடைய சிலையை இங்கே திறந்து வைக்கவேண்டுமென்று 18 ஆண்டு களுக்கு முன்பு இங்குள்ள பெங்களூர் தமிழ்ச் சங்கத்தார் அணிவகுத்தார்கள். அந்த அணிவகுப்பு பெங்களூருவில் இருந்த முதலமைச்சரைச் சந்தித்ததோடு முடியவில்லை. ஆளுநரைச் சந்தித்ததோடு முடியவில்லை. இந்தியப் பிரதமரைச் சந்தித்ததோடு முடியவில்லை. இந்திய நாட்டுக் குடியரசுத் தலைவரைச் சந்தித்ததோடு முடியவில்லை. இப்படி முடியாத காரணத்தால் கருநாடகத்தில் உள்ள தமிழர்கள் கன்னட மக்களோடு சேர்ந்து இருவரும் ஒருவராக யார் வந்தால், இந்தக் காரியம் நிறைவேறும் என்று எதிர்பார்த்து அங்கே என்னையும், இங்கே இவரையும் முதலமைச்சர்களாக தேர்ந்தெடுத் திருக்கின்றார்கள்.

சில நாட்களுக்கு முன்பு நம்முடைய எடியூரப்பா அவர்கள் உடல் நலிவு காரணமாக மருத்துவச் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு சென்னைக்கு வந்திருக்கிறார் என்று கேள்விப் பட்டவுடன்; அதனால் என்ன – அவர் கருநாடக மாநில முதலமைச்சர்; நான் தமிழ்நாட்டு முதலமைச்சர். நான் போய் ஏன் அவரைப் பார்க்க வேண்டும் என்று நான் கருதவில்லை. எங்களிடையே ஒரு சகோதர பாசம். இன்று நேற்று அல்ல.

**மனித நேய உணர்வு**

கன்னடமும் களிதெலுங்கும்
கவின்மலையாளமும்
துளுவும் உன் உதிரத் துதித்தெழுந்து
ஒன்று பல ஆயிடினும்

– என்று அன்றைக்குப் பாடப்பட்ட ஒரே உதிரத்திலே உருவான மாநிலங்கள்தான் தமிழகம், கருநாடகம், மலையாளம், துளுவம், ஆந்திரம் இந்த மாநிலங்களெல்லாம்.

எனவே இந்த மாநிலங்களில் மாத்திரமல்ல அகண்ட இந்தியாவில் – இந்திய சகோதரர்களில் யார் எழுச்சிபெற்றிருந்தாலும், யார் மக்கள் ஆதரவைப் பெற்றிருந்தாலும் – நாட்டுக்கு யார் பணியாற்றக் கூடியவர்களாக இருந்தாலும் – சமுதாயத்திற்கு யார் பணியாற்றக் கூடியவர்களாக இருந்தாலும் – அவர்கள் எனக்கு நண்பர்கள். அவர்கள் எனக்கு தோழர்கள்.

அவர் எந்தக் கட்சியினுடைய முதலமைச்சர் – நான் எந்தக் கட்சியினுடைய முதலமைச்சர் என்று இந்த பேதாபேதங்களை எல்லாம் பார்க்கவில்லை. நானும் அவரும் இந்தியர்கள் என்று மாத்திரமல்ல. நானும் அவரும் ''மனிதர்கள்'' என்ற அந்த உணர்வோடு மனிதநேய உணர்வோடு – நான் எந்த மருத்துவமனையில் அவர் இருக்கிறார் என்று கேள்விப்பட்டு, அந்த மருத்துவமனைக்கு வருவதாக அங்குள்ள டாக்டர்களுக்கு சொல்லி அனுப்பினேன்.

அதை அவர் கேள்விப்பட்டு, ''என்ன இருந்தாலும், அவர் (கலைஞர்) மூத்த முதலமைச்சர் – என்னைவிட மூத்தவர், ஆகவே நான் சென்று அவரைப் பார்ப்பதுதான் சரியானதாகும்'' என்று சொல்லி என் வீட்டிற்கே வருவதாகச் சொன்னார். வந்தார். இருவரும் பல பிரச்சினைகளைப் பேசினோம். அதில் மிக முக்கியமான பிரச்சினை திருவள்ளுவர் சிலையை இங்கே அமைக்க வேண்டும் என்ற பிரச்சினைதான். அவரும் லேசுப்பட்டவரல்ல – அவர், ''இங்கே (பெங்களூரு) திருவள்ளுவர் சிலையை அமையுங்கள். அங்கே (சென்னை) சர்வக்ஞர் சிலையை நாங்கள் அமைக்கிறோம். அதற்கு ஒத்துழைப்புத் தாருங்கள்'' என்றார்.

''ஐயா அதற்கு நாங்கள் தயாராகி பல காலம் ஆயிற்று. அன்புக்கரம் நீட்டுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்களையும் ஆரத்தழுவி அவர்களை அங்கீகரிப்பதுதான் எங்கள் இயல்பு. அந்த இயல்பை கன்னட மாநிலத்திலும் பரப்புவதற்கு, உங்களைப் போன்ற பெரியவர்கள் பாடுபட்டால் அது இருமாநிலங்களுக்கு மாத்திர மல்ல, இந்தியாவிலேயே ஒருமைப்பாட்டை நிலைநாட்டுவதற்கு பயன்படுவதற்குரிய ஒன்றாக இருக்குமென்பது உறுதி!

நாங்கள் சர்வக்ஞர் சிலையை எங்கே வைப்பது என்பதற்கான இடத்தை அவர்கள் குறித்த இடத்தை போய் பார்க்கச் சொல்லி சில அதிகாரிகள், சில நண்பர்கள், சில அரசியல் வாதிகள், அமைச்சரவையிலே உள்ளவர்கள் சென்று பார்த்து அவர்கள் அந்த இடத்தைத் தேர்ந்தெடுத்தார்கள். அங்கே சர்வக்ஞர் சிலையை வைப்பதற்கான சகல ஏற்பாடுகளும் இன்றைக்கு நடைபெற்றிருக்கின்றது. 13ஆம் தேதியன்று அவரை வரவேற்க நான் சென்னையிலே காத்திருப்பேன்.

அங்கே சர்வக்ஞர் சிலை, இங்கே வள்ளுவர் சிலை. இந்த இரண்டு சிலைகளும் நாட்டுக்குச் சொல்வது நாமெல்லாம் எப்போதும் ஒருநிலை என்பதை எடுத்துச் சொல்வதற்காகத்தான் இரண்டு சிலைகளும் இன்றைக்கு திறக்கப் பட்டிருக்கின்றன. அதற்கான வாய்ப்புகளை உருவாக்கியிருக்கின்றோம். அந்த வாய்ப்பை உருவாக்கிய – அதற்கு வழிகாட்டிய கருநாடக மாநிலத்திற்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றியைத் தெரிவித்து அவருக்கும், அவருடைய அமைச்சரவை நண்பர்களுக்கும் என்னுடைய இதயபூர்வமான வாழ்த்துகளை நான் அவரைவிட மூத்தவன் என்ற காரணத்தால் வாழ்த்துகளை – எனக்கு 86 வயது, அவருக்கு 67 வயது. அதனால் நான் எல்லோரையும் அழைப்பது போல ''தம்பி'' என்று அழைக்கலாம். இந்த இரண்டு சகோதரர்களும் மூத்த சகோதரர்களும், இளைய சகோதரர்களும் இந்தியாவில் மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டத்தக்க ஒரு நிலையை இன்றைக்கு உருவாக்கியிருக்கிறோம். இதை மற்ற மாநிலங்கள் புரிந்துகொள்ளவேண்டும். இதில் எந்த அரசியலும் கிடையாது. இது அறவியல்தான் – அரசியல் கிடையாது என்பதை எடுத்துச் சொல்லி வாழ்க வள்ளுவர்! வாழ்க சர்வக்ஞர்! என்று உரைத்து விடைபெறுகிறேன்.

★

# திருவள்ளுவர் – சர்வக்ஞர் சிலைகள் இரு மாநில மக்களின் இதயத்தை ஒன்றிணைக்கும் அடையாளச் சின்னங்கள்!

பெங்களூருவில் 9.8.2009 அன்று நடைபெற்ற விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள் அய்யன் திருவள்ளுவர் சிலையைத் திறந்து வைத்தார். இவ்விழாவில் மாண்புமிகு கருநாடக முதலமைச்சர் திரு. **பி.எஸ். எடியூரப்பா,** அவர்கள் தலைமை வகித்து ஆற்றிய உரை:–



“இது ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க விழா. பாரதத்தில் பிறந்த கருநாடக – தமிழக மக்களாகிய நம்முடைய நீண்ட நாளைய உறவுக்கு இந்த விழா சாட்சியாக உள்ளது. வரலாற்றின் இரு காலக் கட்டங்களில் மனித குலத்துக்கு வாழ்க்கையின் தத்துவங்களை எடுத்துரைத்த சர்வக்ஞர் மற்றும் திருவள்ளுவர் ஆகியோரின் சிலைகளைத் திறப்பது கருநாடக – தமிழக அரசுகளின் முடிவாகும். இதற்கு இரு மாநில மக்கள், அறிஞர்கள், இலக்கியவாதிகள், அரசியல் தலைவர்கள் ஒருமித்த ஆதரவை தெரிவித்து இருப்பதும் ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகும்.

**இந்நாள் பொன்னாள்**

இரு மாநிலங்களுக்கு இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி இன்று பெங்களூருவில் தமிழ்ப் புலவர் திருவள்ளுவர் சிலை திறக்கப்பட்டு உள்ளது. வருகிற 13 ஆம் தேதி சென்னையில் கன்னடக் கவிஞர் சர்வக்ஞர் சிலை திறக்கப்பட உள்ளது.

நாம் ஒன்று சேர்ந்து வாழ வேண்டும், ஒன்று சேர்ந்து மகிழ வேண்டும் என்பது நமது வாழ்க்கையின் தாரக மந்திரம். நாம் இந்திய தாயின் மக்கள். நாம் ஒன்றுகூடி வாழ வேண்டும் என்பதுதான் மகான்களின் விருப்பம். கருநாடக – தமிழக வரலாற்றில் இன்றைய நாள் பொன் எழுத்துக்களால் எழுதப்பட்ட நாள்.

கருநாடக – தமிழக மாநில மக்களின் இதயங்கள் இடையே பல நூற்றாண்டு காலமாக நன் மதிப்பு உள்ளது. சர்வக்ஞர் சிலையை சென்னையில் திறப்பதின் மூலம் நம்மிடையே நன்மதிப்பு ஓங்கி உள்ளது. நம்மால் நிறுவப்படுவது இரு சிலைகள் மட்டும் அல்ல, நமது இதயத்தை ஒன்றிணைக்கும் அடையாளச் சின்னங்களுமாகும்.

கன்னடர்கள் சகிப்புத் தன்மை கொண்டவர்கள். மற்றவர்களிடம் சிறந்த விதத்தில் நடந்து கொள்பவர்கள். அதனால்தான் இன்று பெங்களூரு நகரம் உலகப் புகழ் பெற்று விளங்குகிறது.

பெங்களூருவில் திருவள்ளுவர் சிலையை திறப்பதில் சிலருக்கு சிறிய கருத்து வேறுபாடு உள்ளது. கருத்து வேறுபாடு உள்ளவர்களுக்கு நான் இப்போது கூட வேண்டுகோள் விடுக்கிறேன். நீங்களும் விழாவில் கலந்து கொள்ளுங்கள். அனைவரையும் போலவே நீங்களும் மகிழ்ச்சியடையுங்கள். சகோதரத் தன்மையை வளர்த்துக் கொள்ளுங்கள்.

**நாம் இந்தியர்**

கன்னட மொழியின் பெயரில் நாம் சிலை திறப்புக்கு எதிர்ப்பு தெரிவிக்க வேண்டாம். எந்த ஒரு மாநிலத்தில் பிறந்தாலும் நாம் இந்திய மக்களே என்று நினைக்க வேண்டும். அதுதான் உண்மையான தேசபக்தி. திருவள்ளுவர் போன்ற மகான்கள் குறிப்பிட்ட மாநில, மொழிக்குள் அடங்கியவர்கள் அல்ல. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடத்துவது நாகரிகம் அல்ல.

சுவாமி விவேகானந்தர், ராமகிருஷ்ண பரமஹம்சர், சுபாஷ் சந்திரபோஸ், யோகி அரவிந்த், ஷாம் பிரசாத் முகர்ஜி போன்றவர்கள் வங்காளத்தை சேர்ந்தவர்கள். மகாத்மா காந்தி, வல்லபாய் படேல் குஜராத்தை சேர்ந்தவர்கள். அவர்கள் தங்களது மாநிலங்களுக்காக மட்டும் பாடுபட்டவர்கள் அல்ல. அவர்களது மாநில சுதந்திரத்துக்கு மட்டும் போராடியவர்கள் அல்ல. நாட்டுக்காகப் பாடுபட்டவர்கள், போராடியவர்கள். லாலா லஜபதிராய் மற்றும் மதன் மோகன் மாளவியா ஆகியோர் பஞ்சாப் மற்றும் உத்தரபிரதேசத்தை சேர்ந்தவர்கள்.

சுவாமி வித்யரண்யா, பசவண்ணா, சித்தூர் ராணி சென்னம்மா, திலகர் ஆகியோர் தென்னிந்தியாவைச் சேர்ந்தவர்கள். இவர்கள் அனைவரும் நாட்டின் நலனுக்காக சிந்தித்தவர்கள், போராடியவர்கள். பெரிய பெரிய மகான்களை அவரவர் பிறந்த மாநிலங்களுக்குள் அடக்கிவிட்டால் அது அவர்களை அவமானப்படுத்துவதாக ஆகிவிடும். அவர்கள் எந்த மொழியை சேர்ந்தவர்களாக இருந்தாலும் உலகம் மெச்சும் சிந்தனைகளை நமது நாட்டுக்கு வழங்கி உள்ளவர்கள். அதை நாம் மறக்கக் கூடாது. தேசிய மற்றும் தேசபக்தி நம்மிடம் இருக்க வேண்டும். அது தான் நாம் ஒன்றுக்கூடி வாழ நிரந்தரமாக வழிவகுக்கும்.

முதலில் நாம் இந்தியர். அதன்பிறகு தான் நாம் கன்னடர், தமிழர், தெலுங்கர், மலையாளியாக உள்ளோம்.

**உழுது உழைப்பதே சிறந்தது**

புத்தருக்குப் பிறகு, இயேசு பிறந்ததற்கு முன்பு அதாவது 2040 ஆண்டுகளுக்கு முன்பு திருவள்ளுவர் வாழ்ந்து உள்ளார். அவர் திருக்குறளைப் படைத்து தலைசிறந்த சகோதரத்துவக் கொள்கையை வகுத்து உள்ளார். மனிதத் தன்மைக்கு வழிகாட்டி உள்ளார். தமிழ்நாடு மற்றும் கருநாடக மக்களிடையே சிறப்பான உறவு வளர வேண்டும் என்பது தான் எனது கனவு.

இதற்கு திருவள்ளுவர் மற்றும் சர்வக்ஞர் சிலைத் திறப்பு விழா வழிவகுக்கும். சர்வக்ஞர், திருவள்ளுவர் போன்றவர்கள் நமக்கு கிடைத்தது பாக்கியம். அவர்களது சிலையை நாம் திறப்பதால் தான் அவர்கள் உயர்ந்தவர்களாக ஆகுவது இல்லை. நாம் அவர்களுக்காக எந்தப் பணியை செய்தாலும் அது சிறிய பணியாகத் தான் இருக்கும்.

சர்வக்ஞரும், திருவள்ளுவரும் விவசாயிகளுக்கு சிறப்பான முறையில் மரியாதை கொடுக்கிறார்கள். எந்த ஒரு மனிதனும் எந்த ஒரு தொழிலைச் செய்தாலும் அவர்கள் எவ்வளவு சாதித்தாலும் உழுது உழைப்பதே சிறந்தது என்று இருபெரும் ஞானிகளும் தெரிவித்து உள்ளனர். விவசாயிகள் பேசும் மொழிகள் எதுவாக இருந்தாலும், அந்த விவசாயிகளுக்கு தண்ணீர் உள்பட அனைத்து வசதிகளும் கிடைக்க வேண்டும். எந்த ஒரு விவசாயியின் வயலும் தண்ணீர் இல்லாமல் வறண்டு விடக் கூடாது. இது நமது இரு மாநில அரசுகளின் குறிக்கோளாக வேண்டும். இதைத் தான் திருவள்ளுவரும், சர்வக்ஞரும் போதித்து உள்ளனர். இவ்வாறு அவர்களது ஒவ்வொரு சொற்களும் நமக்கு வழிகாட்டுதலாக உள்ளது. அவர்களது சிந்தனைகள் அனைவருக்கும், அனைத்து காலத்துக்கும் பொருந்தும். அதன்படி நாம் நடந்து கொள்ள வேண்டும்.

இந்த விழாவில் தமிழக முதலமைச்சர் கலைஞர், அவரது மனைவி அவருடைய மந்திரிகள் மற்றும் இலக்கியவாதிகளும், அறிஞர்களும் கலந்து கொண்டு உள்ளனர். அவர்கள் அனைவருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் சென்னை சென்று இருந்த போது முதலமைச்சர் கலைஞர் என்னை சந்திக்க வருவதாகச் சொன்னார்.

ஆனால் அவர் மூத்த முதலமைச்சர், மூத்த அரசியல் தலைவர் மட்டும் அல்லாமல் சிறந்த அறிஞர் என்பதால் நானே அவரைச் சென்று சந்தித்தேன். திருவள்ளுவர் சிலை திறக்கப்பட்டால் ஒரு வாரம் பெங்களூருலேயே தங்குவதாக அவர் தெரிவித்தார். சர்வக்ஞர் சிலையைத் திறக்க என்னை சென்னைக்கு அழைத்தார். பேச்சுவார்த்தை மூலம் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியும் என்பதை இந்த விழா உணர்த்துகிறது.

தமிழ்நாடு, கருநாடகம் மட்டும் அல்ல, நாட்டில் உள்ள மாநிலங்கள் இடையே எந்த ஒரு பிரச்சினை இருந்தாலும் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க முடியும் என்பது உறுதிப்பட்டு உள்ளது. விழா மேடையில் தமிழக முதலமைச்சர் கலைஞர் பேசிய ஒவ்வொரு வார்த்தையும் எனக்கு புரிந்து உள்ளது. இனிமேல் இரு மாநில உறவுகளும் வளர வேண்டும். நீங்கள் அடிக்கடி பெங்களூருவுக்கு வரவேண்டும், நான் அடிக்கடி தமிழகத்துக்கு வரவேண்டும். இது எனது விருப்பம்.

★

## திருவள்ளுவர், சர்வக்ஞர் சிலைகள் - இரு மாநில மக்களுக்கான

# "ஒற்றுமை சிலை"

தமிழக – கருநாடக மக்கள் சகோதர பாசத்தோடு ஒற்றுமையாக – உரிமைகள் பெற்று வாழ பாடுபடுவோம்!



**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் தலைமையில் 13.08.2009 அன்று சென்னையில் கன்னடக் கவிஞர் சர்வக்ஞர் சிலையினை மாண்புமிகு கருநாடக முதலமைச்சர் திரு. பி.எஸ். எடியூரப்பா அவர்கள் திறந்து வைத்தார். இவ்விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை:-**

கடந்த 9ஆம் நாள் கருநாடகத்தினுடைய தலைநகரமாம், பெங்களூருவில் அய்யன் திருவள்ளுவருடைய சிலையைத் திறந்து வைக்கின்ற வாய்ப்பு எனக்குக் கிட்டியது. தமிழகத்திலே குமரி முனையிலே இருந்து சென்னை நகரம் வரையில் எத்தனையோ சிலைகள் வள்ளுவப் பெருமகனுக்கு – அய்யன் வள்ளுவருக்கு அமைத்து – ஏன் வள்ளுவர் கோட்டமே அமைத்து அங்கெல்லாம் அந்தச் சிலையை திறந்து வைக்கின்ற வாய்ப்பைப் பெற்றவன் என்றாலும் கூட, அங்கே சிலை

திறக்கக் கூடாது என்று எண்ணியவர்களுடைய எண்ணம் தவறானது என்பதை எடுத்து விளக்குகின்ற வகையில், 18 ஆண்டு காலம் கருநாடகத்திலே நடைபெறுகின்ற எந்த நிகழ்ச்சிக்கும், அது கழக நிகழ்ச்சியானாலும் சரி, வேறு பொது நிகழ்ச்சியானாலும் சரி, என்னை அழைத்தபோதெல்லாம், "திருவள்ளுவருடைய சிலை திறந்த பிறகுதான் பெங்களூருவில் நிகழ்ச்சியில் கலந்து கொள்வதாக இருக்கிறேன்" என்று சொல்லி, அப்படி மேற்கொண்ட சபதத்தை நிறைவேற்றிய அந்த சிறப்புக்குரியவராக நம்முடைய கருநாடக முதலமைச்சர் எடியூரப்பா அவர்கள் விளங்குகிறார் என்பதை நன்றியுணர்வோடு நான் எடுத்துக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

**'ஜீவா' பூங்காவில் சர்வக்ஞர் சிலை**

இன்று இந்த விழாவிற்கு வீட்டிலே இருந்து கிளம்பி வருகின்ற நேரத்தில் வழியெல்லாம் கொடிகள். அந்தக் கொடிகள் பறப்பதைப் பார்க்கும்பொழுது ஒரு பாமர மனிதனுக்கு என்ன சந்தேகம் வரும் என்றுகூட கருதினேன். "ஒருவேளை அணி மாறிவிட்டதா?" என்று எண்ணுகின்ற அளவுக்கு பாரதிய ஜனதா கட்சியினுடைய கொடிகளும், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொடிகளும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து பறந்த அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டே வந்தேன்.

9ஆம் தேதி பெங்களூரு விழாவை முடித்துக் கொண்டு, அன்று மாலையிலே புறப்பட்டு இரவு சென்னைக்கு வந்ததும், இந்த விழா ஏற்பாடுகளை முன்னின்று கவனிக்கின்ற தம்பி பரிதி இளம்வழுதியையும் – கேட்டறிந்து என்னிடத்திலே செய்திகளைச் சொல்லுகின்ற ஆர்க்காடு வீராசாமி அவர்களையும் தொடர்பு கொண்டு என்ன நடக்கிறது என்று கேட்டபோது, "ஜீவா பூங்காவில் கருநாடக மாநிலத்து அமைச்சர்களும், அமைப்பாளர்களும் ஒரு இடத்தைப் பார்த்திருக்கிறார்கள். அந்த இடத்தை செப்பனிட்டுக் கொண்டிருக்கிறோம்" என்று சொன்னார்கள். நான் கேள்விப்பட்டது ஜீவா பூங்கா இந்த மேடை அளவுதான் இருக்கும். அதிலே எப்படி இந்த விழாவை நடத்த முடியும் என்று நான் கேள்விப்பட்டிருந்தேன். ஆகவே 10ஆம் தேதி காலையில் நானும், ஆர்க்காட்டார் அவர்களும் இந்த இடத்திற்கு விரைந்து வந்து, இந்த இடம் போதுமானதாக இருக்கிறதா என்று ஜீவா பூங்காவில் பார்த்த போது, பெயர் அழகாக இருக்கிறது, பொருத்தமாக இருக்கிறது. எந்தக் கருத்துக்களை சர்வக்ஞர் எடுத்துச் சொன்னாரோ அந்தக் கருத்துக்களை அண்ணன் ஜீவானந்தம் அவர்கள், அவருடைய கட்சியின் சார்பிலே அல்ல; தனிப்பட்ட முறையில் அவர் சுயமரியாதைக்காரர், பகுத்தறிவுவாதி என்ற நிலையிலும் எடுத்துச் சொல்லியிருந்த காரணத்தால் அவருடைய பெயரால் அமைந்த பூங்காவில் இந்தச் சிலையை திறப்பது எவ்வளவோ பொருத்தம் என்று கருதினேன்.

ஆனால் திறக்கப்பட்ட பிறகு சிலை அமையப்போகிற இடம் ஜீவா பூங்காதான். இருந்தாலும் பல்லாயிரக்கணக்கிலே வந்து குழுமி வாழ்த்துரைக்க வேண்டிய உங்களையெல்லாம் அமர வைக்க அங்கே இடமில்லையே என்ன செய்வது என்று யோசித்து பரிதியிடத்திலே அந்தப் பொறுப்பை ஒப்படைத்தேன். பரிதி அதை ஏற்றுக் கொண்டார். நான் சொல்லுகின்றேன்; 10ஆம் தேதி அந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. ஆனால் 10ஆம் தேதி பெரு மழையின் காரணமாக பணி எதுவும் தொடங்கப் படவில்லை. இடையிலே 11, 12 – அதிலும் 11ஆம் தேதி மழையினால் பாதிக்கப்பட்ட இந்த



இடங்களை சீர்படுத்த இயலாத சூழ்நிலை. என்ன செய்வது என்று யோசித்தபோது, "தம்பியுடையான் படைக்கு அஞ்சான்" என்ற நிலையிலே தம்பிகளைப் பெற்றிருக்கிற நாம் இதற்கு அஞ்சலாமா என்று, "எப்படிச் செய்வீர்களோ தெரியாது, நாளைக்கு விழா மேடையும், விழாப் பந்தலும் 'விழாத' அளவிற்கு நீங்கள் உருவாக்க வேண்டும்" என்று அவர்களுக்கு அன்புக் கட்டளையிட்டேன். அந்த அன்புக் கட்டளையை ஏற்று அவர்கள் ஆற்றிய பணியினுடைய வடிவம்தான் இங்கே நீங்கள் காணுகின்ற இந்த பந்தலும், மேடையும்.

**நட்பும் அன்பும்**

இவ்வளவு பெரிய முயற்சியால் ஒரே நாளில், மழை எப்போது வருமோ என்று ஆராய்ந்து அண்ணாந்து பார்த்துக் கொண்டே இருந்து இந்த இடத்தை சீர்செய்து, ஜீவா பூங்காவில் இருந்து இங்கே வருகிற வழியில் கூட அந்தச் சாலை மேடுபள்ளங்களாக இருக்கிறது. அதை சீர்படுத்த வேண்டுமென்று மாநகராட்சி மன்றத்து நண்பர்களுக்கு எடுத்துச் சொல்லி அவர்களும் அதைச் சீர்படுத்தி ஒருவழியாக இப்பொழுது இந்த விழா மிக மிக மிக எழிலார்ந்த முறையில் எழுச்சி நிலையில் நடந்து கொண்டிருக்கின்றது. நான் இதற்காக அனைவருக்கும் நன்றி சொன்னாலும்கூட, இந்த மேடையை அமைத்து பந்தலை அமைத்துக் கொடுத்து விழா சிறப்புற நடைபெற அரும்பணியாற்றிய ஜெ.பி.கிருஷ்ணாவுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கிருஷ்ண ஜெயந்தி – ஆகவே கிருஷ்ணனை போற்றுவோம் என்று சொன்னார்கள். நான் இந்த கிருஷ்ணனுக்கு தான் நன்றி கூற வேண்டியவனாக இருக்கிறேன். இந்த கிருஷ்ணனுடைய பணியினால்தான் இவ்வளவு பெரிய எழுச்சிமிக்க, எழிலார்ந்த மேடையையும், பந்தலையும் நாம் காண முடிகிறது. அப்படிப்பட்ட உழைப்பாளிகள் இந்த இயக்கத்திலே இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து இந்தப் பணியை வெற்றிகரமாக நிறை வேற்றியிருக்கிறார்கள். அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துகளை மீண்டும், மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த சிலை நிரந்தரமாக அமையப் போகிற இடம் ஜீவானந்தம் பூங்கா. அங்கே இந்த சிலை அமைந்த பிறகு – இப்போது கூட விழா முடிந்து நானும், நம்முடைய கருநாடக முதலமைச்சரும், அமைச்சர் பெருமக்களும் அந்த இடத்திற்குச் சென்று சிலையை பார்த்துவிட்டுத் தான் வீட்டுக்குப் போக இருக்கிறோம். அவரும் பெங்களூருக்குத் திரும்ப இருக்கிறார். இத்தகைய முயற்சியிலே இன்றைக்கு நான் ஈடுபட்டிருப்பதற்கு என்ன காரணம்? பெங்களூருவில் திருவள்ளுவர் சிலை வைத்தால், இங்கே கவிஞர் சர்வக்ஞருக்கு சிலை வைக்க வேண்டும் என்பது ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொண்ட பேரமல்ல; நிச்சயமாக பேரமல்ல. நட்பு முறையில், அன்பு முறையில், பரஸ்பரம் அங்கே வள்ளுவர், இங்கே சர்வக்ஞர் இருவரும் இருந்தால் அந்த சிலைகளைப் பார்க்கிற நேரத்தில் அவர்களுடைய பொன்மொழிகளை, அவர்களுடைய அறிவுரைகளை மக்கள் எண்ணிப் பார்த்து அதன்படி நடப்பதற்கு தங்களை தயார்படுத்திக் கொள்வார்கள் என்பதுதான்.

## கன்னட மொழி பயில நிதியுதவி

திராவிட மொழிக் குடும்பத்தில் பழமையான மொழிகளிலே ஒன்றாக தமிழ் மொழி இருக்கிறது என்றாலும் கூட தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் இந்த உணர்வோடு பிற மொழிகளையும் அரவணைத்து அந்த மொழிகளின் வளர்ச்சியிலே தனிக்கவனம் செலுத்தி, அந்த மொழிகளுக்கு உரிய உதவிகளை தமிழக அரசு வழங்கி வருகிறது என்பதை மிக நன்றாக அறிவீர்கள்.

சென்னை மாநகரில் அமைந்துள்ள கன்னட சங்கம் நடத்துகின்ற மேல்நிலைப் பள்ளிக்கு தமிழக அரசு நிதியுதவி வழங்கி வருகிறது என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

கன்னட புத்தாண்டு நாளாகிய யுகாதித் திருநாளை தமிழகத்திலே அரசு விடுமுறை நாளாக அறிவித்து நடைமுறைப்படுத்தி வருகிறோம் என்பதையும் நான் பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப் போல தெலுங்கு வருடப் பிறப்பை நாம் கொண்டாடுகிறோம். கேரளத்திலே கொண்டாடுகிற ஓணம் பண்டிகையை முன்னிட்டு பகுதி, பகுதியாக இங்கே விடுமுறை வேண்டும் என்று கேரள மக்கள், மலையாள மொழி பேசுகின்ற மக்கள் கேட்கின்ற போதெல்லாம் அவர்களுடைய விருப்பத்தையேற்று அவர்கள் வாழும் பகுதிகளில் ஓணம் பண்டிகைக்கான விடுமுறையை மலையாள மாந்தருக்காக இங்கே அனுமதிக்கின்றோம்.

கன்னட மொழியை தாய்மொழியாக கொண்டவர்கள் தமிழகப் பள்ளிகளில் கன்னட மொழியை முதன்மை மொழியாக தேர்வு செய்து படிக்க அனுமதிக்கப்படுகிறார்கள் என்பதையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

பள்ளிகளில் குழந்தைகள் கன்னட மொழி பயில்வதற்குரிய பாடநூல்களை தமிழக அரசே உருவாக்கி அவற்றை உருவாக்க கன்னட மொழி அறிஞர்கள் குழு ஒன்றை அமைத்து, அந்தக் குழுவின் கருத்துக்களின் அடிப்படையிலே கன்னட மொழி பாடநூல்கள் தமிழக அரசால் தயாரிக்கப்படுகின்றன என்பதையும் நான் மிகுந்த பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

## சர்வக்ஞரின் வரலாறு

அவ்வாறு தயாரிக்கப்படும் கன்னட மொழி பாடநூல்களை தமிழ்நாடு அரசு நிறுவனமாகிய, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் மூலமாகவே அச்சிட்டு அவற்றை கன்னடக் குழந்தைகளுக்கு இந்த அரசு வழங்கி

வருகிறது என்பதையும் நினைவூட்ட விரும்புகிறேன்.

கன்னட மொழியைக் கற்பிக்க கன்னட மொழி ஆசிரியர்களையும், பள்ளிகளில் நியமனம் செய்துள்ளது தமிழக அரசு.

தமிழகத்திலே வாழும் கருநாடக மாநிலத்தைச் சேர்ந்த கன்னட மொழியை தாய் மொழியாகக் கொண்ட மக்கள் தங்கள் மொழியை தமிழகப் பள்ளிகளில் முறையாகப் படித்திட, அனைத்து உதவிகளும் தடையின்றி இந்த அரசால் வழங்கப்படுகின்றது. மற்ற மாநில மக்களின் உணர்வுகளை தமிழகம் மதிக்கிறது, போற்றுகிறது என்பதற்கு இது ஒரு முக்கியமான அடையாளச் சான்று என்பதை நான் அறிவிக்க விரும்புகின்றேன்.

**தமிழகத்திலே வாழும் கருநாடக மாநிலத்தைச் சேர்ந்த கன்னட மொழியை தாய் மொழியாகக் கொண்ட மக்கள் தங்கள் மொழியை தமிழகப் பள்ளிகளில் முறையாகப் படித்திட, அனைத்து உதவிகளும் தடையின்றி இந்த அரசால் வழங்கப்படுகின்றது. மற்ற மாநில மக்களின் உணர்வுகளை தமிழகம் மதிக்கிறது, போற்றுகிறது என்பதற்கு இது ஒரு முக்கியமான அடையாளச் சான்று என்பதை நான் அறிவிக்க விரும்புகின்றேன்.**

இங்கே சிலையாக நம் முன்னால் நிற்கின்ற சர்வக்ஞருடைய வரலாற்றுக் குறிப்புகள் நம்மிடத்திலே எதுவும் இல்லை என்று இங்கே தொகுப்புரையாற்றிய அம்மையார் அவர்கள் சொன்னார்கள். உண்மைதான். நமக்குக் கிடைத்திருப்பது – 1565ஆம் ஆண்டுவாக்கில் கிருஷ்ண தேவராயர், விஜய நகர சாம்ராஜ்யத்தைப் பரிபாலித்த அந்தக் காலத்தில் சர்வக்ஞர் வாழ்ந்தார் என்ற வரலாறுதான் நமக்கு கிடைத்திருக்கிறது. இந்த வரலாற்றை நான் கற்றிருக்கிறேனோ, கற்றுத் தெளிந்து இருக்கிறேனோ என்ற அய்யப்பாட்டின் காரணமாக கன்னட மொழியில் சிறந்த பாவலர்கள், நாவலர்கள் கன்னட மொழி காவலர்கள் நம்முடைய நண்பர் ஹண்டே போன்றவர்கள் அடிக்கடி எனக்கு கடிதம் மூலமாக, தொலைபேசி மூலமாக சர்வக்ஞருடைய வரலாற்றுக் குறிப்புகளை எல்லாம் நினைவுபடுத்திக் கொண்டிருந்தார்கள்.

நேற்றையதினம் நான் பெங்களூருவில் பேசுகின்ற நேரத்திலே கூட, அவர் எழுதிய குறிப்புகள் எனக்கு வந்து சேர்ந்தன. இப்படி தமிழ்நாட்டிலே உள்ளவர்கள் மாத்திரமல்ல, வெளி மாநிலங்களிலே உள்ளவர்களும், இந்தியாவில் பல பகுதிகளில் வாழ்பவர்களும் இந்தச் சிலை திறப்பு விழாவை மிக முக்கியமாக கருதுகிறார்கள்.

திருவள்ளுவர் சிலையைத் திறந்தோம், சர்வக்ஞர் சிலையைத் திறந்தோம் என்பது மாத்திரமல்ல – இரண்டுக்கும் பொதுவாக தமிழர்களுக்கும், கருநாடக மக்களுக்கும் ஒரு "ஒற்றுமை சிலை" இன்றைக்கு அமைக்கப்பட்டிருக்கிறது என்பது தான் பெரிய வரலாறு. நாமெல்லாம் மகிழத்தக்க வரலாறு.

மூன்று வரிகளில் இவர் கவிதைகளைச் சொன்னார். அதை "திரிபதி" என்று கூறுவார்கள். அவர் சொல்லுகிறார் – எவ்வளவு அருமையான உவமைகளையெல்லாம் சர்வக்ஞர் எடுத்தாண்டிருக்கிறார் என்பதற்கு



ஒரு உவமையை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

## அழுத்தந்திருத்தமான கருத்துகள்

"பற்களுக்கிடையில் வாழ்ந்திடும் நாவினைப்போல் தீயோர் இடையில் நல்லவரும் சேர்ந்திருப்பர்" – பற்களின் குணம் என்ன? தவறினால் அது நாவினையே கடித்து விடும். அப்படிப்பட்ட பற்களுக்கிடையே உள்ள மென்மையான நாக்கைப் போல் – கொடுமையான சிந்தனை உடையவர்களுக்கிடையே மென்மையான சிந்தனை உடையவர்கள் இருக்கிறார்கள், இருப்பார்கள் என்று சர்வக்ஞர் மிக அழகாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

இன்னும் சொல்ல வேண்டுமேயானால் மூடப்பழக்க வழக்கங்களை கட்டோடு வெறுத்தவர் சர்வக்ஞர். மூடப் பழக்க வழக்கங்களுக்கு மனிதர்கள் அடிமைகளாக ஆகக் கூடாதென்று அவருடைய பாடல்கள் மூலமாக அழுத்தந்திருத்தமாகச் சொல்லியிருக்கிறார். ஒரு பாடல் –

"செத்துப் பிறப்பர் என்பது பொய்மொழியே
வித்தினால் விளைவ தன்றோ–மரம்
சத்திழந்து பட்டபின் துளிர்ப்பதுவோ
சர்வக்ஞ"

செத்தவர்கள் மீண்டும் பிழைப்பார்கள் – மறு பிறவி உண்டு என்றெல்லாம் சொல்வதை சர்வக்ஞர் ஏற்றுக் கொள்ளவில்லை.

சர்வக்ஞருடைய சிலை திறப்பு விழாவிலே அவரை வாழ்த்துகின்றவர்கள் – அவரைப் பாராட்டுகின்றவர்கள் – அவரைப் பின்பற்ற வேண்டுமென்று கருதுகின்றவர்கள் இந்த வரிகளை உள்ளத்தின் ஆழத்திலே பதிய வைத்துக் கொள்ள வேண்டுமென்பதற்காக இதைச் சொல்லுகிறேன். இன்னொன்று,

''மெய்யுறுப்புகள் ஒத்தன மாந்தருக்கெனில்
உயர்ந்தோன் தாழ்ந்தோன் பக்த
நாத்திகனெனும்
பொய்ப் பாடல்கள் வந்ததெங்கே சர்வக்ஞ''

உடம்பிலே உள்ள உறுப்புக்கெல்லாம் – ஒரு மனிதனுக்கும் இன்னொரு மனிதனுக்கும் இடையே – அந்த அவயங்கள் எல்லாம் ஒத்தவை என்று சொல்லும் போது – அதிலே உயர்ந்தவன் என்ன, தாழ்ந்தவன் என்ன, பக்தன் என்ன, நாத்திகன் என்ன – இதெல்லாம் பொய்ப் பாடல்கள் என்று அழுத்தந்திருத்தமாக, ஆணி அடித்தாற்போல சர்வக்ஞர் சொல்லுகிறார்.

**பெரியாரை நினைவுபடுத்துகிற கருத்துகள்**

''சுழலும் உலகொன்றே பருகும் நீரொன்றே
சுடுகின்ற தீயொன்றே சாதியும் குலமும்
நடுவே புகுந்ததெவன் சர்வக்ஞ''

இதுவும் அவருடைய பாடல். சுழலும் உலகம் ஒன்று – பருகும் நீரும் ஒன்று – சுடுகின்ற தீயும் ஒன்று – சில சாதியும் குலமும் நடுவே எப்படிப் புகுந்தது என்று கேட்கிறார். இந்தக் கேள்வி திருவள்ளுவரை எனக்கு ஞாபகப்படுத்து கின்றது. 2000 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த அய்யன் வள்ளுவரை நினைவுபடுத்துவது மாத்திரமல்ல – இன்றைக்கும் தந்தை பெரியாருடைய கருத்துகள் வாழ்கின்ற தமிழ் நிலத்தில் பெரியாரை நினைவுபடுத்துகின்ற கருத்துகளை சர்வக்ஞர் எடுத்துக் கூறியிருக்கிறார்.

சர்வக்ஞர் கேலியாக, கிண்டலாக, நையாண் டியாக பல பாடல்களை இயற்றியுள்ளார். அதிலே ஒன்றை, உதாரணத்திற்காக உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

புராணத்தில் படைப்புத் தொழில் ஆற்றுபவர் பிரம்மா என்று கேள்விப்பட்டிருக்கிறோம். படித்திருக்கிறோம். புராணங்களில் எழுதியிருக்கிறார்கள். கதாகாலட்சேபங்களில் கேட்டு ரசித்திருக்கிறோம். இவர் என்ன சொல்லுகிறார் தெரியுமா?

படைத்தவன் பிரம்மனெனும் பற்று
வேண்டற்க
படைத்தவன் சிரத்தை சிவனறுக்க –
பிறிதொன்றை
படைத்துக் கொள்ளாததேன் சர்வக்ஞ.

நம்மைப் படைத்தவன் பிரம்மா என்கிற அந்த எண்ணம் வேண்டாம் – ஏனாம்? இங்கே தான் எவ்வளவு பெரிய நையாண்டியாக தான் சொல்ல வந்த கருத்தைச் சொல்லியிருக்கிறார் என்பதைப் புரிந்து கொள்ள முடிகிறது. படைத்தவன் பிரம்மா என்னும் பற்று வேண்டற்க – பிரம்மாவிற்கு ஐந்து தலைகள். இப்போது பார்க்கும் பிரம்மாவிற்கு நான்கு தலைகள் – அதைப் போல பரமசிவத்திற்கும் ஐந்து தலைகள். ஒரு நாள் பார்வதி தேவி அவசரமாக – நான் புராணத்தைச் சொல்லுகிறேன் – யாரும் தவறாகக் கருதக் கூடாது – பார்வதி தேவி அவசரமாக அந்தப்புரத்தில் நுழைந்த போது அங்கே ஒரு அவசர வேலையாக பிரம்மாவும் வந்திருந்தார். இவர் கணவன், ஐந்து தலையுடைய சிவன் என்ற காரணத்தால் – பின் பக்கமாக தலையை எண்ணிப் பார்த்து – வந்திருப்பது தன் கணவன் சிவன்தான் என்றெண்ணி ஏமாந்தாள் – அவ்வளவுதான். இது பரமசிவனுக்கு தெரிந்தது. பார்வதி ஏமாந்து போக என்ன காரணம் என்று எண்ணிப் பார்த்தான். பிரம்மாவுக்கு நம்மைப் போல ஐந்து தலைகள் இருந்த காரணத்தால் அல்லவா, பார்வதி தலையை எண்ணிப் பார்த்து ஏமாந்து விட்டாள் என்று – பரமசிவன் பிரம்மாவின் ஐந்து தலைகளில் ஒன்றைக் கிள்ளி எறிந்து விட்டான். அதற்குப் பிறகுதான் பிரம்மாவிற்கு நான்கு தலைகள் – இது புராணம். கருணாநிதி செய்கின்ற காலட்சேபம் அல்ல. புராணத்தில்

உள்ளதைச் சொல்கிறேன். அதன் பிறகு பிரம்மா நான்கு தலைகளோடு இருந்தார். அதைத்தான் வைத்து நம்முடைய பாவலர் சர்வக்ஞர் பாடுகிறார்.

படைத்தவன் பிரம்மனெனும் பற்று
வேண்டற்க
படைத்தவன் சிரத்தை சிவனறுக்க –
பிறிதொன்றை
படைத்துக் கொள்ளாததேன் சர்வக்ஞ.

சிவன் ஒரு தலையை கிள்ளி எறிந்த பிறகு, பிரம்மா தான் படைப்புத் தொழிலில் கெட்டிகாரன் ஆயிற்றே, இன்னொரு தலையை ஏன் படைத்துக் கொள்ளக் கூடாது என்று பிரம்மாவைப் பார்த்து சர்வக்ஞர் கேட்கிறார். அது ஒரு கவிதையாக அவருடைய நூலிலே வெளியிடப்பட்டிருக்கிறது.

❖

**திருவள்ளுவர் சிலையைத் திறந்தோம், சர்வக்ஞர் சிலையைத் திறந்தோம் என்பது மாத்திரமல்ல – இரண்டுக்கும் பொதுவாக தமிழர்களுக்கும், கருநாடக மக்களுக்கும் ஒரு "ஒற்றுமை சிலை" இன்றைக்கு அமைக்கப்பட்டிருக்கிறது என்பது தான் பெரிய வரலாறு. நாமெல்லாம் மகிழத்தக்க வரலாறு.**

❖

## தம்பி இல்லாத குறையைப் போக்கியிருக்கிறார்

இப்படி புதிய கருத்துகள் – புரட்சி எண்ணங்கள் – புயல் வேக பிரதிபலிப்புகள் ஆகியவற்றையெல்லாம் கவிதை மூலமாக மக்களுக்குத் தந்து மக்கள் சாதி மதமற்ற நிலையில் மனிதனாக வாழ வேண்டும் என்ற கருத்தை எடுத்துரைத்த கருநாடக மாநிலத்திலே உலவி இன்றைக்கு தமிழ் பூமிக்கும் அடியெடுத்து வைத்து – இங்கே அவர் அடியெடுத்து வைப்பதற்கு முன்பே நாம் அவரை அறிவோம். அவருடைய கருத்துகளை நம்முடைய உள்ளத்திலே ஏந்தியிருக்கிறோம். மேலும் சிலை எடுப்பது மாத்திரமல்ல, அவருடைய கருத்துகளை பின்பற்றக் கூடிய மனப்பக்குவத்தை நாமெல்லாம் பெற வேண்டும்.

நம்முடைய கருநாடக மாநில முதல் அமைச்சர் அவர்கள் எழுதி வந்திருக்கின்ற உரையிலே கூட, என்னை விளிக்கும்போது "தமிழக முதல் அமைச்சர் பெரியண்ணா கருணாநிதி அவர்களே" என்று விளித்தார். நாம் அண்ணன் தம்பிகளாகப் பிறக்கவில்லை, முத்துவேலருக்கு. எனக்கு ஒரு தம்பி இல்லாத குறையை, கருநாடக முதலமைச்சர் இன்றைக்குப் போக்கியிருக்கிறார். அவரை நான் தம்பியாக ஏற்றுக் கொண்டதால், மற்ற தம்பிகள் யாரும் வருத்தப்பட மாட்டார்கள் என்று எனக்கு நன்றாகத் தெரியும். அந்தத் தம்பிகள் எல்லாம் மகிழத்தக்க அளவிற்கு, இந்தத் தம்பி நமக்குக் கிடைத்திருக்கிறார்.

தம்பி அவர்களே, சகோதரப் பாசத்தோடு, கருநாடக மக்களையும் தமிழக மக்களையும் நடத்துவோம். அவர்களுடைய தேவைகளை நிறைவு செய்வோம். நீங்கள் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியில்

❖

புதிய கருத்துகள் – புரட்சி எண்ணங்கள் – புயல் வேக பிரதிபலிப்புகள் ஆகியவற்றையெல்லாம் கவிதை மூலமாக மக்களுக்குத் தந்து மக்கள் சாதி மதமற்ற நிலையில் மனிதனாக வாழ வேண்டும் என்ற கருத்தை எடுத்துரைத்த கருநாடக மாநிலத்திலே உலவி இன்றைக்கு தமிழ் பூமிக்கும் அடியெடுத்து வைத்து – இங்கே அவர் அடியெடுத்து வைப்பதற்கு முன்பே நாம் அவரை அறிவோம்.

❖

தமிழ்நாட்டிற்கும், கருநாடகத்திற்கும் எந்தப் பிரச்சினை ஆனாலும் அவைகளை நாங்கள் சுமூகமாகத் தீர்த்துக் கொள்வோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். அது பலருக்குப் பிடிக்காது என்று எனக்குத் தெரியும். சுமூக நிலை ஏற்பட்டு விட்டால் பிறகு அவர்களுக்கு வேலை இல்லை அல்லவா? அவர்களுக்கு வேலை வேண்டும் என்பதற்காக, எதிலும் – இலங்கைப் பிரச்சினையிலே கூட – சுமூக நிலை ஏற்படக் கூடாது என்று வேண்டித் தவம் இருந்தவர்கள் யார் யார் என்று எனக்குத் தெரியும். இப்போது சுமூக நிலை ஏற்பட்ட பிறகும்கூட, அதைக் கிளறி விட்டுக் கொண்டிருக்கின்ற நிலையும் எனக்குத் தெரியும்.

எனவே நம்மை ஒன்றாகப் பார்ப்பவர்கள் – நாம் இருவரும் – இரண்டு மாநில மக்களுக்கு தலைவர்களாக இருந்து அவர்களை வழி நடத்தக் கூடியவர்கள் என்ற அளவில் நம்மை ஒன்றாகப் பார்ப்பவர்களுக்கு – நண்பர்களாகப் பார்ப்பவர்களுக்கு – அண்ணன் தம்பிகளாகப் பார்ப்பவர்களுக்கு – இதிலே எப்படி கீழறுப்பு வேலை செய்யலாம் – எப்படி திசை திருப்பலாம் என்றெல்லாம் திட்டமிடுவார்கள். அதற்கு இடம் தராமல் நாம் இன்றைக்கு எடுத்துக் கொண்ட சபதம் நம்முடைய இரு மாநில மக்களும் ஒற்றுமையாக – அவரவர்கள் உரிமைகளை அவரவர்கள் பெற்று வாழ வேண்டும் என்ற அந்த நிலையை உருவாக்க இந்த அண்ணனும், தம்பியும் பாடுபடுவோம் என்று இங்கே அமர்ந்திருக்கின்ற எத்தனையோ பல்லாயிரக் கணக்கான அண்ணாக்களுக்கும், தம்பிகளுக்கும் நான் எடுத்துரைத்து – அந்தப் பணிக்கு எங்களை உற்சாகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு – ஒரே நாளில், சில மணி நேரங்களில் இவ்வளவு பெரிய பந்தலை அமைத்து, இவ்வளவு அழகாக ஏற்பாடுகளை செய்து, மேடை அமைத்து எங்களை உற்சாகப்படுத்திய தம்பி பரிதி இளம்வழுதி அவர்களுக்கும், அவரோடு பணியாற்றிய இந்த வட்டாரத்து நண்பர்களுக்கும், சட்டப் பேரவை உறுப்பினர் தம்பி பாபு அவர்களுக்கும் மற்றும் அவருக்குத் துணை நின்றவர்களுக்கும், அத்தனை பேருக்கும் இந்தச் சிலைத் திறப்பு விழாவிலே என்னுடைய உளமார்ந்த நன்றியைத் தெரிவித்து – எதற்கும் வராத கலையுலகப் பெருமக்கள் – சூப்பர் ஸ்டார், கலைஞானி கமலஹாசன் போன்றவர்கள் எல்லாம் இங்கே வந்திருப்பது என்னை கௌரவிக்க என்றில்லா விட்டாலும் – சர்வக்ஞரைக் கௌரவிக்க என்ற அந்த வகையிலே அவர்களுக்கெல்லாம் நன்றியைக் கூறிக் கொண்டு இந்த அளவில் என் உரையை நிறைவு செய்கிறேன்.

✶ ✶ ✶

# இரு மாநில மக்களிடையே சகோதரத்துவத்தை வளர்த்து ஒற்றுமையாக வாழ்வோம்!




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள் தலைமையில் மாண்புமிகு கருநாடக முதலமைச்சர் திரு. **பி. எஸ். எடியூரப்பா** அவர்கள் சென்னை, அயனாவரம் ஜீவா பூங்காவில் அமைக்கப்பட்டுள்ள கன்னடக் கவிஞர் சர்வக்ஞர் சிலையை, 13.8.2009 அன்று சென்னை, ஐ.சி.எப். இரயில்வே பாதுகாப்புப்படை திடலில் நடைபெற்ற விழாவில் திறந்துவைத்து ஆற்றிய உரை:–

**ஜ**ன்மாஷ்டமி தினத்தில் இந்த விழா நடைபெறுவது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது. ஆறு கோடி கன்னட மக்களின் நல் வாழ்த்துகளை, தமிழ்த் தாயின் பிள்ளைகளாகிய உங்களுக்கு இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க, நினைவில்



அகலாத நிகழ்ச்சியில், மகிழ்ச்சியுடன் சமர்ப்பிக்கின்றேன்.

நாம் இருவேறு மொழிகளைப் பேசுகிறோம். மொழி இரண்டாயினும் எண்ணம் ஒன்றே, நாம் அனைவரும் இந்தியர்கள், இருமாநில மக்களும் சமரச கானம் பாட இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சி ஒரு நல்வாய்ப்பாக அமைந்துள்ளது.

சென்னையில் கன்னட தத்துவஞானி – வசனகவி – சர்வக்ஞரின் சிலை திறப்பின் மூலம் கருநாடக – தமிழ்நாடு மாநிலங்களுக்கு இடையிலான ஒற்றுமைக்கு ஒரு புதிய அத்தியாயம் தொடங்கப்பட்டுள்ளது. இது ஒரு நீண்ட பயணத்தின் தொடக்கம். ஆகஸ்டு 9–ஆம் தேதி பெங்களூருவில் திருவள்ளுவரின் சிலை திறப்பு விழாவில் ஆரம்பித்த இந்தப் பயணம் ஆகஸ்டு 13–ஆம் தேதி சென்னையில் சர்வக்ஞரின் சிலை திறப்பு விழா வரை வந்தடைந்துள்ளது. இரண்டு மாநிலங்களுக்கு நடுவிலான இந்த நட்புறவு, நாடு முழுவதற்கும் ஒரு எடுத்துக்காட்டு, மிகவும் போற்றத்தக்க இரண்டு கவிஞர்களின் சிலை திறக்கப்பட்டிருப்பதன் மூலம், இரு மாநிலங்களின் இணக்கமான உறவுக்கு ஒரு இணைப்புப் பாலமாக விளங்கும்.

கன்னட மற்றும் தமிழ் மக்கள் சகோதர, சகோதரிகளாய் என்றென்றும் ஒன்றாக வாழவேண்டும் என்ற விருப்பம் இந்த நிகழ்ச்சியின் மூலம் வெளிப்பட்டுள்ளது. கருநாடக முதலமைச்சரான நானும், “பெரியண்ணா” கருணாநிதி அவர்களும்

அரசியல் நிலைகளை கடந்து மிகுந்த முயற்சியுடன் இந்த மகத்தான செயலை நிறைவேற்றி உள்ளோம் என்பதை இரு மாநில மக்களும் உணர்ந்திருப்பார்கள்.

பெங்களூருவில் சிலை திறப்பு விழாவின்போது மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் உள்ளன்புடன் என்னை தம்பி என்று அழைத்தது என்னை உணர்ச்சிக்களிப்பில் ஆழ்த்தியது. 2 வருடங்களுக்கு முன்பு மறைந்த



என் அண்ணனை, கலைஞர் அவர்களில் கண்டேன் என்பதை ஒப்புக்கொண்டே ஆக வேண்டும்.

வயதிலும், அனுபவத்திலும் முதிர்ந்த அரசியல் மேதை கலைஞர் அவர்கள், எனது பெரிய அண்ணனாக ஆகியுள்ளார். உங்கள் அனைவர் முன்னிலையில் நான் எனது பெரியண்ணாவுக்கு வணக்கத்தையும், போற்றுதலையும் சமர்ப்பிக்கிறேன்.

சர்வக்ஞர், திருவள்ளுவர் இருவரும் மாமேதைகள். சாதி மத, இனவேறுபாட்டை தகர்த்தெறிந்து உலக சமரசக் கொள்கைகளை நமக்கு அருளியுள்ளார்கள். சென்னையில் திறக்கப்பட்டுள்ள சர்வக்ஞர் சிலையும் பெங்களூருவில் திறக்கப்பட்டுள்ள திருவள்ளுவர் சிலையும் இரு மாநில மக்களிடையேயான சகோதரத்துவத்தை வளர்க்க வேண்டும் என்று பிரார்த்திக்கிறேன். நடப்பது ஒரே பூமி, குடிப்பது ஒரே தண்ணீர், சுடும் அக்னியும் ஒன்றே, இதனிடையில் எங்கிருந்து வந்தது குலமும், கோத்திரமும் என்று சாடுகிறார் சர்வக்ஞர். மனிதரில் ஏற்றத் தாழ்வுகளைக் கடந்து எல்லோரும் சமம் என்பதனை உணர்த்தியவர் சர்வக்ஞர். பெண்களுக்கு உயர்ந்த மதிப்புக் கொடுத்த சர்வக்ஞர், பெண்களே இகபர சுகத்துக்கு காரணம், பெண்ணே உபகாரி, அவளே வழிகாட்டி என பெருமைப்படுத்தியுள்ளார். உலகில் பசிப்பிணியை நீக்குவது விவசாயம் என்று எல்லாவற்றையும் விட விவசாயத்துறைக்கு முதன்மை இடம் கொடுத்துள்ளார். பின்தங்கிய நிலையில் உள்ள விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய நிலையில்

உள்ள நாம் இதனைக் கருத்தில் கொண்டு செய்ய வேண்டும்.

**இளைய சமுதாயத்தின் ஆர்வம்**

உலக ஒற்றுமை குறித்தே கன்னடத்தில் சர்வக்ஞரும், தமிழில் திருவள்ளுவரும், தெலுங்கில் வேமன்னாவும், மலையாளத்தில் நாராயணகுருவும் ஒருமித்த கருத்தை வெளிப்படுத்தி உள்ளார்கள். இன்றைய இளம் தலைமுறையினருக்கு இத்தகைய சான்றோர்களின் மகத்துவம் தெரியவில்லை. இச்சிலைகளின் திறப்பு விழா மூலமாக அவர்களின் மகத்துவத்தை அறிய இளம் சமுதாயத்தினர் ஆர்வம் காட்டுவது மகிழ்ச்சியை தருவதாக உள்ளது. அதனால், தென் மாநிலங்களில் உள்ள சிறந்த கவிஞர்களின் போதனைகள், கருத்துகள் தொடர்பாக கருத்தரங்குகள் நடத்தப்பட வேண்டும்.

அதன்மூலம் 4 மாநிலங்களின் உறவும் பலப்படும். பெங்களூருவில் இதுபோன்ற முதல் பயிலரங்குக்கு கருநாடக அரசு ஏற்பாடு செய்யும். இதுபோல், தமிழகத்திலும் பின்னர் நிகழ்ச்சிகள் நடத்தலாம். இது தொடர்பாக 4 தென்மாநில முதலமைச்சர்களும் பேசி முடிவெடுக்கலாம். இதனை கலைஞர் ஏற்பார் என கருதுகிறேன். அதிகரித்து வரும் தீவிரவாதப் பின்னணியில் நம்மிடையே ஒற்றுமையைப் பலப்படுத்த இத்தகைய செயல்கள் அவசியம் என்பதை உணருவோம்.

**அன்புப் பாலம் பலப்பட வழி**

பிறந்த பூமி – நாம் தொழில் செய்து வாழ்ந்து வரும் பூமி. இந்த இரண்டுக்கும் நாம் கடமைப் பட்டுள்ளோம். இதனை மனத்தில் கொண்டு தமிழ்நாட்டில் வசிக்கும் கன்னட மக்களும், கருநாடகத்தில் வசிக்கும் தமிழ் மக்களும்

❖

உலக ஒற்றுமை குறித்தே
கன்னடத்தில் சர்வக்ஞரும்,
தமிழில் திருவள்ளுவரும்,
தெலுங்கில் வேமன்னாவும்,
மலையாளத்தில் நாராயண குருவும்
ஒருமித்த கருத்தை வெளிப்படுத்தி
உள்ளார்கள்.

❖

நட்புறவு கொள்ள வேண்டும். உலக சகோதரத்துவம் என்பது திருவள்ளுவர் – சர்வக்ஞரின் அமுத மொழிகளாகும். கருநாடகம் மற்றும் தமிழகம் நடுவில் சில கருத்து வேறுபாடுகள் இருந்தது உண்மை. ஆனால் இது தீர்வு காண முடியாத பிரச்சினை இல்லை என்பதை இந்நிகழ்ச்சி உறுதிப்படுத்தியுள்ளது. ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுப்பதின் மூலமே நன்மை ஏற்படும். இந்த சிந்தனையை நம் மனத்தில் கொண்டு செயல்படும்போதே பிரச்சினைளுக்குத் தீர்வு கிட்டும். அன்புப் பாலம் பலப்பட வழி ஏற்படும். இந்தத் திசையில், அண்ணன், தம்பியாகிய நாங்கள், அதாவது பெரியண்ணா கலைஞரும், சின்னத்தம்பி ஆகிய நானும் பயணம் செய்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சர்வக்ஞரும், திருவள்ளுவரும் கூறியபடி கன்னட மக்களும், தமிழக மக்களும் ஒற்றுமையாக வாழ்வோம் என்பதை இவ்விழாவின் மூலம் உறுதி செய்கிறோம். இந்த ஒற்றுமை என்றென்றும் நிலைக்க வேண்டும் என்று நல்வாழ்த்துகள் கூறி என் உரையை நிறைவு செய்கிறேன்.

❖ ❖ ❖

# தமிழகத்தின் சாதனைகளுக்கு நிதிக்குழுத் தலைவர் பாராட்டு

## மாநிலத்தின் உள்கட்டமைப்பு வசதியை மேம்படுத்த மானிய உதவியை உயர்த்தித் தரவேண்டும்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள்

மத்திய அரசின் 13ஆவது நிதிக்குழு கூட்டம் சென்னை தலைமைச் செயலகத்தில் 4.6.2009 அன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை :

**த**மிழகத்துக்கு வருகை தந்துள்ள பதிமூன்றாவது நிதிக்குழுத் தலைவர் மற்றும் உறுப்பினர்களை வரவேற்பதில் மகிழ்ச்சியடைகிறேன். இந்த மாநிலம் ஏழைகளின் வாழ்வை வளப்படுத்துவதை மையமாகக் கொண்டே செயல்பட்டு வருகிறது. அதை மனத்தில் கொண்டுதான் சமூக முன்னேற்றத்திலும் சமூக உள்கட்டுமானப் பணிகளிலும் அதிகக் கவனம் செலுத்தி வருகிறோம். நாட்டிலேயே மிகச் சிறந்த சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் இங்கே நடைமுறையில் உள்ளன. இந்த முயற்சிகளுக்கான செலவுகளும் பொருளாதார மந்த நிலையும் எங்கள் நிதிநிலையைப் பெரிதும் பாதித்திருக்கிறது. இந்தப் பின்னணியில் எங்கள் சாதனைகளையும் நியாயமான தேவைகளையும் கவனத்தில் இருத்தி எங்களுக்கு ஆதரவாக நியாயமான மதிப்பீட்டை உங்களிடம் எதிர்பார்க்கிறோம்.

மாநில அரசு மக்களுக்கு நெருக்கமானவை.



மக்களுக்கான பெரும்பாலான வசதிகளை மாநில அரசுகளே செய்து தருகின்றன. எனவே மத்திய வரிகளில் மாநில அரசுகளின் பங்கை உயர்த்துவதற்குச் சரியான காரணம் இருக்கிறது. மத்திய அரசின் வரிகளில் மாநில அரசின் பங்கு என்பது ஒரு வெளிப் படையான ஒதுக்கீட்டு முறை என்பதால் அதை உயர்த்தி வழங்க வேண்டும். உசிதப்படி வழங்கும் மானியங்களைக் குறைத்துக் கொண்டு,

மாநிலங்களின் பங்கை 50 சதவீதமாக உயர்த்தி வழங்கிட வேண்டுகிறோம்.

தமிழ்நாட்டைப் போலச் சிறப்பாகச் செயல்படும் மாநிலங்கள் தங்களுக்கு உரிய பங்கை அநேகமாகப் பெறுவதில்லை. சிறப்பாகச் செயல்படும் மாநிலங்களின் உண்மைத் தேவைகளைப் புறக்கணித்து விட்டு, பின்தங்கிய மாநிலங்களுக்கு கூடுதல் தொகை ஒதுக்கீடு செய்வது என்பதே தொடர்ந்து எல்லா நிதிக் குழுக்களின் வழக்கமாகிவிட்டது.

மத்திய வரிகளில் தமிழ்நாட்டின் பங்கு 7.9 சதவீதம் என்பதில் இருந்து தற்போது 5.3 சதவீதமாகக் குறைந்திருப்பதிலிருந்தே அதைப் புரிந்துகொள்ளலாம். வருவாய்க் குறைவைக் கூடுதலாகக் கவனத்தில் கொண்டு, முறையான செயல்பாடுகளையும், நிதி ஒழுங்கைக் கடைப்பிடிப்பதையும் புறக்கணிப்பதுதான் இதற்குக் காரணம் ஆகும்.

இது சரிப்படுத்தப்பட வேண்டும். எனவே, நாங்கள் எங்கள் குறிப்பில் தெரிவித்திருக்கும் மாற்று முறையை ஆய்ந்து பார்த்து நியாயமான ஒரு முறையை நடைமுறைப்படுத்த வேண்டுகிறோம்.

**பேரழிவு நிவாரணத் தொகையை உயர்த்தித் தர வேண்டும்**

பேரழிவு நிவாரணங்களைப் பொறுத்த அளவில், இங்கே அடிக்கடி நிகழும் இயற்கைப் பேரழிவுகளின் காரணமாகத் தமிழ்நாட்டுக்கான மத்திய அரசின் நிவாரணத் தொகை கணிசமாக உயர்த்தப்பட வேண்டும். இந்த மாநிலத்திற்கென்று சில தனியான பிரச்சினைகள் உள்ளன. எங்கள் குறிப்பில் அவற்றை விளக்கிச் சொல்லி இருக்கிறோம். அவற்றிற்கான நிதி உதவியையும் கேட்டிருக்கிறோம். மாசற்ற எரிசக்தி, குடிசைப் பகுதிகள் முன்னேற்றம், கடலோரப் பாதுகாப்புப் பணிகள், ஏரி, குளம் போன்ற நீர்நிலைகள் சீரமைப்பு, மாசுக்கட்டுப்பாட்டுக்கான கழிவுநீர் வெளியேற்றத் திட்டம் போன்ற திட்டங்கள் நிறைவேற்றுவதில் உங்கள் உதவி தேவைப்படுகிறது. இவை தமிழ்நாட்டிற்கான சிறப்புத் திட்டங்கள். நிதிக்குழுதான் இதற்கான நிதி உதவிசெய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். மாநிலத்தில் உள்ள சாலைகள், கட்டடங்கள் பராமரிப்புக்குத் தேவையான மானிய உதவியை உயர்த்தித்தர வேண்டுகிறோம்.

நான் எங்கள் கருத்துகள், கவலைகள், எதிர்பார்ப்புகளைக் கோடிட்டுக் காட்டி இருக்கிறேன். எங்கள் விளக்கமான விவரங்கள் குறிப்புரையில் விளக்கப் பட்டுள்ளன. அதிகாரிகளும் தங்கள் கருத்துகளை முன் வைப்பார்கள். எங்கள் சாதனைகளை விளக்கிடவும், பிரச்சினைகளை நேரடியாகப் பார்வையிட்டுப் புரிந்துகொள்ளவும் அந்த இடங்களுக்குப் போக வேண்டி இருக்கும். நான் குறிப்பிட்டிருக்கும் தேவைகளை கவனமாகப் பரிசீலித்து உதவ வேண்டுகிறேன். இந்தப் பதின்மூன்றாவது நிதிக்குழு இந்த மாநிலத்தின் வளர்ச்சி நோக்கிய அடிப்படையில் நியாயமான ஒதுக்கீடு செய்யும் என்று நம்புகிறேன்.''

இக்கூட்டத்தில் மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின், மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. ஆர்க்காடு நா. வீராசாமி, மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன், 13 ஆவது நிதிக்குழுவின் தலைவர் டாக்டர். விஜய் கேல்கர், இக்குழுவின் உறுப்பினர்கள் திரு. சஞ்சீவ் மிஸ்ரா மற்றும் திருமதி. இந்திரா இராஜாராமன், மாநிலத் திட்டக்குழுவின் துணைத் தலைவர் பேராசிரியர் மு. நாகநாதன், தலைமைச் செயலாளர் திரு. கே. எஸ். ஸ்ரீபதி, இ.ஆ.ப., நிதித்துறை முதன்மைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.

*



# புதிதாகத் தேர்வு செய்யப்பட்டுள்ள அரசுக் கல்லூரி ஆசிரியர்கள் 1,000 பேருக்கு பணி நியமன ஆணை

சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா அரங்கத்தில் 8.7.2009 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் புதிதாகத் தேர்வு செய்யப்பட்ட அரசுக் கல்லூரி ஆசிரியர்கள் 1,000 பேருக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை:

"பேருக்கு உரையாற்ற வந்தால் போதும்'' என்று தான் தம்பி பொன்முடி என்னை அழைத்தார். ஆனால் இங்கே அறிவிப்பாளர் பேருரையாற்றுவேன் என்று இங்கே உங்களிடத்திலே என்னை காட்டிக் கொடுத்திருக்கிறார்.

இந்த இனிய விழாவினுடைய தலைவர் தமிழக துணை முதலமைச்சர் தம்பி ஸ்டாலின் அவர்களே!

முன்னிலை வகிக்கும் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் தம்பி பொன்முடி அவர்களே!

தமிழ்நாடு உயர்கல்வி மன்றத்தின் துணைத் தலைவர் முனைவர் ஆ. இராமசாமி அவர்களே!

உயர்கல்வித்துறையின் அரசு முதன்மைச் செயலர் கணேசன் அவர்களே! அரசு அதிகாரிகளே!

பணி நியமன ஆணை பெறும் அருமை ஆசிரியர்களே!

அனைவர்க்கும் என்னுடைய வணக்கங்களையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சட்டமன்றக் கூட்டம் நடைபெறுகின்ற நேரமானாலும் கூட பணி நியமனம் பெற்றவர்களுக்கான சான்றிதழ்களை வழங்க வேண்டும் என்று தம்பி பொன்முடி அவர்கள் வலியுறுத்தியதின் காரணமாக, அந்தச் சான்றிதழ் பெறுகின்ற உங்களுடைய முகத்தில் மலர்கின்ற அந்த மகிழ்ச்சியைக்

காண வேண்டும் என்கின்ற ஆவலோடு இந்த மாமன்றத்திற்கு நான் வந்தேன்.

இளம் வயதினர் சான்றிதழ் பெறும்போது எனக்கு மகிழ்ச்சி. இளம் வயதைத் தாண்டியவர்கள் சான்றிதழ்களைப் பெறும்போது அவர்களுக்கு மகிழ்ச்சி. இந்த இரண்டு மகிழ்ச்சிக்கும் என்ன வேறுபாடு என்றால், என்னுடைய மகிழ்ச்சி; காத்திராமல் தங்களுடைய குடும்பத்தைக் காப்பாற்றுகின்ற பொறுப்பினை தன்னுடைய வாழ்வாதாரத்தை ஏற்றுக் கொள்ளுகின்ற பொறுப்பினை இந்த வாணி மகால் தியேட்டருக்கு எதிரில் நடைபெற்றது. அந்த நிகழ்ச்சிக்கு நான்தான் தலைமை ஏற்றேன். உலகத் தமிழ் மாநாட்டிலே சிலைகள் வைப்பதற்கும், சிற்பங்களை வைத்து ரதங்கள் ஓட்டுவதற்குமான செலவு போக, மிச்சத் தொகை என்னிடத்திலே ஒப்படைக்கப் பட்டிருந்தது. இந்த மிச்சத்தை வைத்துக் கொண்டு என்ன செய்யலாம் என்று அன்றைய முதலமைச்சர் நம்முடைய தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்களும், ஜெமினி வாசன் அவர்களும்,




வயதில் சரியான வயதில் இவர்கள் பெறுகின்றார்களே என்பதில் எனக்கு மகிழ்ச்சி. இன்னொரு சாராரைக் குறிப்பிட்டேன் அவர்களுக்கு என்ன மகிழ்ச்சி என்றால், "அப்பாடா! இப்போதாவது கிடைத்ததே" என்பதிலே அவர்களுக்கு மகிழ்ச்சி. இந்த மகிழ்ச்சியான நேரத்தில் என்னை சோகத்தில் ஆழ்த்தக்கூடிய ஒரு நிகழ்ச்சியை இங்கே உவமையாகச் சொல்ல விரும்புகின்றேன்.

கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்களினுடைய சிலை திறப்பு விழா ஏ.வி. மெய்யப்பன் அவர்களும், ஏ. எல். சீனிவாசன் அவர்களும், நாகிரெட்டி அவர்களும், நானும் கலந்து யோசித்தபோது நான் சொன்னேன். இங்கே தியாகராய நகரில் இருக்கின்ற வாணி மகால் தியேட்டர்தான் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்கள் அடிக்கடி நாடகங்கள் நடத்துகின்ற இடம். அவருடைய வீடும், அந்த தியேட்டருக்கு அருகில் இருக்கிறது. எனவே, உலகத் தமிழ் மாநாட்டிலே மிச்சப்பட்ட தொகையைக் கொண்டு கலைவாணர் என்.எஸ்.கே. அவர்களுக்கு ஒரு சிலை அமைக்கலாம் என்று சொன்னேன்.

அதை அந்தக் குழுவினர் ஏற்றுக் கொண்டு சிலை வடிக்கப்பட்டது. சிலையை யார் திறப்பது என்று எண்ணியபோது, அறிஞர் அண்ணாவைத் தவிர வேறு யாரும் அதற்கு தகுதியானவர் இல்லை என்று முடிவு செய்து, அண்ணாவை அழைத்தபோது அவரைச் சூழ இருந்த மருத்துவர்கள் எல்லாம் "இந்த நேரத்திலே இந்த நிலையிலே அண்ணா ஒரு விழாவிற்கு வருவது சரியல்ல" என்று தடுத்து நின்றார்கள். ஆனால், அண்ணா அவர்கள் நான் அந்த சிலையைத் திறந்தே ஆக வேண்டும். ஏனென்றால் கலைவாணர் என்.எஸ்.கே. அவர்கள் தன்னுடைய படத்தை ஒரு ஊராட்சி மன்றத்திலே திறந்து வைத்து உரையாற்றியிருக்கின்றார். அதுவே அவர் கலந்துகொண்ட கடைசி நிகழ்ச்சி. அவர் இப்போது இல்லை. அதனால் நான் அவருடைய சிலையைத் திறந்து வைப்பது இருவருக்கும் வாழ்க்கையிலே ஏற்பட்ட கடைசி நிகழ்ச்சிகள். எங்களுடைய மனதிற்கு இதமான நிகழ்ச்சிகளாக இருக்கட்டும் என்று கூறிவிட்டு சிலை திறக்கப்புறப்பட்டார்.

## தமிழ்நாட்டிற்கே நல்ல நேரம்

அங்கே ஜெமினி அதிபர் எஸ்.எஸ். வாசன் வரவேற்புரை ஆற்றினார். வரவேற்புரை ஆற்றும்பொழுது அண்ணா வருவாரோ என்று நாம் காத்திருந்தோம். 'நல்ல நேரத்திலே' அண்ணா வந்து இந்த சிலையைத் திறக்கவிருக்கிறார் என்று எண்ணினோம். அவ்வாறே வந்து விட்டார் என்று வாசன் சொன்னார். அண்ணா பேசும்போது, "வாசன் அவர்களுக்கு நாங்கள் வரும் நேரம் எல்லாம் நல்ல நேரமாகத்தான் தெரிகிறது. இப்போது நாங்கள் வந்திருக்கின்ற நேரம் – இது வாசனுக்கு மாத்திரமல்ல, தமிழ்நாட்டிற்கே நல்ல நேரம்தான்" என்று குறிப்பிட்டார்.

அதாவது, அண்ணா அவர்கள் தி.மு.க. ஆட்சி வந்திருக்கிற நேரத்தைக் குறிப்பிட்டார். வாசன் உண்மையிலேயே அவருடைய பஞ்சாங்கத்தைப் பார்த்து அந்த நேரத்தைக் குறிப்பிட்டார். இந்த இரண்டு நேரமும் எப்படி ஒத்துப் போயிற்று என்பதற்கு உதாரணமாகத்தான் அண்ணா அவர்கள், "நாங்கள் வருகிற நேரம் வாசனுக்கு நல்ல நேரமாகப்படுகிறது. நாங்கள் இப்போது வந்துவிட்டோம். இனி தமிழ்நாட்டிற்கே நல்ல நேரம்தான்" என்று அன்றைக்கு குறிப்பிட்டார். அதனால்தான், "கிடைக்குமோ – கிடைக்காதோ" என்று தடுக்கப்பட்டு, அணை கட்டப்பட்டு – தாமதப்பட்டு இருந்த இந்த சான்றிதழ்கள் எல்லாம் இன்றைக்கு உங்களுக்கு கிடைக்கிறது என்றால் அன்றைக்கு அண்ணா சொன்ன "நல்லநேரத்தி"னுடைய அறிகுறிதான் அதனுடைய விளைவுதான் இது என்பதை நான் இங்கே சொல்ல கடமைப்பட்டிருக்கின்றேன்.

நம்முடைய தம்பி ஸ்டாலின் அவர்களுக்கு அண்ணா பல்கலைக் கழகத்திலே டாக்டர் பட்டம் கொடுக்கிறார்கள் என்று இங்கே சொன்னார்கள். துணை முதலமைச்சருக்கு டாக்டர் பட்டம் கொடுக்கிறார்கள். முதலமைச்சருக்கு கொடுக்கவில்லை. அதிலே எனக்குப் பொறாமை இல்லை. ஆனால் பொறாமைப்பட வேண்டியது ஸ்டாலின் தான். ஏனென்றால் ஸ்டாலின் பெறுவது அண்ணா பெயரால் உள்ள பல்கலைக் கழகத்தின் டாக்டர் பட்டம். நான் அண்ணா என்ற பல்கலைக்கழகத்திலேயே, டாக்டர் பட்டம் பெற்றவன். எனவே அதிலே எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியோடு–இப்போதே முன்கூட்டியே அட்வான்ஸ் வாழ்த்தாக ஸ்டாலினுக்கு வாழ்த்து கூறி, நீங்களெல்லாம் சான்றிதழ்களைப் பெற்று மற்றவர்களுக்கு சான்றளிக்கக்கூடிய அளவிற்கு சான்றாண்மை மிக்கவர்களாக – ஆற்றலரசர்களாக நாட்டுக்கு நல்ல தம்பிகளாக – இளைஞர்களைச் சொல்கின்றேன் நல்ல தம்பிகளாக என்று – மூத்தவர்கள் நல்ல பெரியவர்களாக – வாழ வேண்டும் – வாழ வைக்க வேண்டும் என்று கேட்டு விடைபெற்றுக் கொள்கிறேன். ★



# தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமை

## 18 தமிழறிஞர்களின் மரபுரிமையருக்கு ரூ.70 இலட்சம் பரிவுத் தொகை!

மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் வழங்கினார்.

செந்தமிழைப் போற்றி வளர்க்கும் சீரிய பணியாகச் சிந்தனை வளம் நிறைந்த தமிழ்ச் சான்றோர்களின் எண்ணங்களும், கருத்துகளும் இன்றைய காலத்திற்கு மட்டுமல்லாமல், இனிவரும் காலங்களிலும் தமிழ்ச் சமுதாயத்திற்குப் பயன்பட வேண்டும் என்னும் விழைவோடு, தமிழறிஞர்களின் படைப்புகளை நாட்டுடைமையாக்கும் திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களால் சிறந்த முறையில் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2006க்குப்பின், பரிதிமாற்கலைஞர், புலவர் குழந்தை, முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் முதலான 62 தமிழறிஞர்களின் நூல்கள் இதுவரை நாட்டுடைமையாக்கப்பட்டு, அவர்களின் மரபுரிமையர்க்குப் பரிவுத் தொகையாக 4 கோடியே 60 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் மேலும் 28 தமிழறிஞர்களின் நூல்கள் நாட்டுடைமையாக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பிற்கிணங்க இசைவளித்துள்ள 21 தமிழறிஞர்களின் படைப்புகளையும், உடல் நலிவடைந்து சிகிச்சை பெற்று வரும் திருமதி. இராஜம் கிருஷ்ணன் அவர்களின் படைப்புகளையும் நாட்டுடைமையாக்கி மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 30.5.2009 அன்று ஆணையிட்டிருந்தார். அதனைத் தொடர்ந்து, இதுவரை 18 தமிழறிஞர்களின் மரபுரிமையர்கள் உரிய சான்றாவணங்களை அரசுக்கு அளித்துள்ளனர்.

அந்தச் சான்றாவணங்களின் அடிப்படையில் குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா, பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார், முனைவர். ச. அகத்தியலிங்கம், பாவலர் நாரா. நாச்சியப்பன், புலியூர்க்கேசிகன், சின்ன அண்ணாமலை, வடுவூர் துரைசாமி அய்யங்கார், பேராசிரியர் மு. இராகவ அய்யங்கார் ஆகிய 8 தமிழறிஞர்களின் மரபுரிமையர்க்கு தலா 5 இலட்சம் ரூபாய் வீதம் 40 இலட்சம் ரூபாயும்;

பம்மல் சம்பந்தனார், டாக்டர் அ.சிதம்பரநாதன் செட்டியார், மு.சு. பூர்ணலிங்கம் பிள்ளை, தொ.மு. பாஸ்கர தொண்டைமான், பாலூர் கண்ணப்ப முதலியார், வை. மு. கோதை நாயகி, என்.வி. கலைமணி, கவிஞர். முருகு சுந்தரம், புலவர் த. கோவேந்தன், அ.க. நவநீத கிருட்டினன் ஆகிய 10 தமிழறிஞர்களின் மரபுரிமையர்க்கு தலா 3 இலட்சம் ரூபாய் வீதம் 30 இலட்சம் ரூபாயும் என 18 தமிழறிஞர்களின் 128 மரபுரிமையர்க்குப் பரிவுத் தொகையாக மொத்தம் 70 இலட்சம் ரூபாய்க்குரிய காசோலைகளை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 10.7.2009 அன்று வழங்கினார்.

மேலும், உடல் நலிவுற்று மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் திருமதி. இராஜம் கிருஷ்ணன் அவர்களின் படைப்புகளுக்காக அளிக்கப்படும் பரிவுத் தொகை 3 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் நேரில் வழங்கினார்.

இந்த நிகழ்வின்போது, தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள், மற்றும் செய்தித் துறை செயலாளர் திரு. க. முத்துசாமி, இ.ஆ.ப., தமிழ்வளர்ச்சித் துறை இயக்குநர் (பொறுப்பு) திரு. கூ.வ. எழிலரசு ஆகியோர் உடனிருந்தனர். ★

# எனது கோபாலபுரம் இல்லம் – 'அஞ்சுகம் முத்துவேலர்' பெயரில் இலவச மருத்துவமனையாக மாற்றப்படும்!

மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் அறிவிப்பு!

சென்னையில் 23.7.2009 அன்று நடைபெற்ற
உயிர் காக்கும் உயர் சிகிச்சைக்கான
**கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின்**
தொடக்க விழாவில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை.

"**ஏ**ழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்பது என்னுடைய தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் வழங்கிய நல்லுரையாகும். அந்த உரையைப் பின்பற்றி ஏழைகளுக்கு உதவிட, ஏழைகளின் இன்னல்



நீக்கி அவர்கள் முகத்தில் சிரிப்பைக் கண்டிட, நாளெல்லாம் பாடுபட்டு உழைத்து வருகின்ற இயக்கம் தான் திராவிட முன்னேற்றக் கழகம். அந்தக் கழகத்தினுடைய ஆட்சி நடைபெறுகின்ற நேரத்தில் கடந்த காலத்தில் நிறைவேற்றிய திட்டங்களோடு மேலும் ஒரு புதிய திட்டத்தை இன்றைக்கு இணைக்கின்ற இந்த இனிய விழாவிற்கு நம்முடைய மத்திய மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மாண்புமிகு குலாம் நபி ஆசாத் அவர்கள் வருகை தந்தமைக்காக தமிழக அரசின் சார்பில், தமிழ் மக்களின் சார்பில், தனிப்பட்ட முறையில் என் சார்பில் நன்றியை, வாழ்த்துகளை ஆசாத் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கின்றேன்.

**தமிழ்நாட்டின் மீது பாசம் – பரிவு**

இன்று, நேற்றல்ல ஆசாத் அவர்களை நான் நெருங்கிய நண்பராக பல ஆண்டுகளுக்கு முன்பே பழகி உணர்ந்தவன். சஞ்சய் காந்தி அவர்களுக்கு ஆழமான நண்பர் ஆசாத் அவர்கள். அந்தக் காரணத்தால் என்னுடைய அருமைக் கண்மணி முரசொலி மாறன் அவர்களுக்கும் ஆசாத் அவர்கள் நெருங்கிய நண்பர் ஆவார்.

நான் மைசூரிலே இருந்த போது திரு.சஞ்சய் காந்தி அவர்கள் அகால மரணம் அடைந்தார்கள் எனக் கேள்வியுற்று சென்னைக்கு வந்து உடனடியாக விமானத்திலே ஏறி டெல்லிக்குச் சென்றேன். சஞ்சயினுடைய உடலைப் பார்த்துத் துடித்தேன். அவருடைய ஆத்ம நண்பர் குலாம் நபி ஆசாத் எங்கே என்று கேட்டேன். என்னை அழைத்துச் சென்றார்கள் அவர் மயக்க நிலையில், நடந்தது எதுவும் தெரியாத நிலையில் ஒரு சூழலில் உணர்வற்று – மருத்துவர்கள், கவலைக்கிடமான நிலையில் அவர் இருக்கிறார் என்று சொல்லுகின்ற அளவுக்கு அவரைக் காண நேரிட்டது. அப்படிப்பட்ட ஒரு ஆழ்ந்த நட்பு குலாம் நபி ஆசாத் அவர்களுக்கும் சஞ்சய் காந்தி அவர்களுக்கும் இருந்ததை நான் உணர்ந்தேன். நண்பர்கள் என்றால் இப்படி அல்லவா இருக்க வேண்டும் என்று அன்றைக்கு எண்ணினேன். அந்த நட்பின் ஆழத்தை நமக்கெல்லாம் உணர்த்திய குலாம் நபி ஆசாத் அவர்கள் இன்றைக்கு இந்த விழாவிற்கு அழைத்தவுடன் வந்திருக்கிறார் என்றால், இதுவும் ஒருவகை நட்பின் பிடிப்புத்தான், அந்த நட்புக்கு பெருமை சேர்த்து இன்றைக்கு இந்த விழாவிற்கு வருகை தந்துள்ள நண்பர் ஆசாத் அவர்களை நான் பெரிதும் பாராட்டுகின்றேன், வாழ்த்துகின்றேன். அவருடைய இந்த உணர்வும், ஊக்கமும், தமிழ்நாட்டின் மீது அவர் கொண்டிருக்கின்ற பாசமும் பரிவும் மேலும் மேலும் பெருகும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. அப்படி பெருகும் என்ற நம்பிக்கையிலேதான் எடுத்த எடுப்பிலேயே நான் அவரிடத்திலே ஒரு விண்ணப்பத்தை கோரிக்கையை இங்கே வைக்க விரும்புகின்றேன்.

**சேவை வரியை தள்ளுபடி செய்வீர்!**

இந்தத் திட்டத்திற்கு ஏறத்தாழ காப்பீட்டுத் தொகை முழுவதையும் நோயாளிகளுக்கு – உயர் சிகிச்சை பெறுகின்றவர்களுக்கு அரசே கட்டுவது என்ற திட்டத்தினால் ஆண்டு ஒன்றுக்கு 517 கோடி ரூபாய் செலவாகிறது. அந்த 517 கோடி ரூபாய்க்கு சேவை வரி – சர்வீஸ் டாக்ஸ் 48 கோடி ரூபாய் – நான் அவரை கேட்டுக்கொள்வது, அந்த 517 கோடி ரூபாயை நாங்கள் கட்டிவிடுகிறோம். நீங்கள் அதற்காகக் கவலைப்பட வேண்டாம். ஆனால், அதற்கு உண்டான சர்வீஸ் டாக்ஸ் – சேவை வரி இருக்கிறதே ரூ.48 கோடியை தள்ளுபடி

செய்துவிடுங்கள் என்றுதான் நான் அவரை இங்கே கேட்கிறேன்.

இந்தத் திட்டத்தின் மூலம் பயன் பெறவிருக்கின்ற நோயாளிகள் சார்பாக இருதய சிகிச்சைக்கு வரவிருக்கின்ற நண்பர்கள் சார்பாக, தாய்மார்கள் சார்பாக இங்கே கண்டோமே, சின்னஞ்சிறு பிள்ளைகள் அவர்களின் சிகிச்சைக்கு ஆகின்ற அந்தச் செலவை – ஈடுகட்டுகின்ற பொறுப்பை இந்த மாநில அரசு ஏற்றுக் கொள்கிற நேரத்தில் – அதற்கு ஆகின்ற சேவை வரி – மொத்தம் 517 கோடியில் 48 கோடி ரூபாயை நம்முடைய ஆசாத் அவர்கள் விலக்கச் செய்கிறேன் என்று இன்று இந்த மேடையிலே கூடச் சொல்லத் தேவையில்லை – தொடர்ந்து கடிதம் எழுதியிருக்கிறேன் – அதற்குத் தருகிற பதிலில் "உங்கள் கோரிக்கை ஏற்கப்படுகிறது" என்று ஒருவரி எழுதினால் போதும், நான் மிகுந்த மகிழ்ச்சியடைவேன்.

**நடமாடும் கோவில் திருப்பணி**

ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்பதற்காகத் தான் இந்தத் திட்டங்களையெல்லாம் திராவிட முன்னேற்றக் கழக அரசு தொடர்ந்து நடத்தி வருகிறது. நான் ஆரம்பப் பள்ளியிலே படித்த போதும் சரி – உயர் நிலைப் பள்ளியிலே ஒருசில வகுப்புகளுக்குச் சென்று கல்வி கற்ற நேரத்திலும் சரி – எங்கள் திருவாரூரில் இருக்கின்ற அகலமான – உயரமான கோவில் சுவர்களில் ஒரு அழகான விளம்பரம் எழுதப்பட்டிருக்கும். என்ன விளம்பரம் என்றால் "நடமாடும் கோவில் திருப்பணி" என்று அதிலே தலைப்பு எழுதப்பட்டிருக்கும்.

நடமாடும் கோவில் திருப்பணி என்றால், ஏதோ கோயிலை நடமாடுகின்ற கோயில்களாக கட்டப் போகிறார்கள் என்று பொருள் அல்ல அல்லது சிலர் அதற்கு விளக்கம் தந்தார்கள் – "மொபைல் ஆஸ்பிடல்" என்று! என்னுடைய தமிழ் ஆசிரியர் அதற்கு உரைத்த பொருள் என்னவென்றால், மனிதனின் உடலே நடமாடும் கோயில்தான் – அதிலே ஏற்படுகின்ற பழுதுகளைப் பார்ப்பதற்கு "திருப்பணி" என்று சைவ சித்தாந்தப்படி நாங்கள் சொல்கிறோம் – ஆகவே நடமாடும் கோயில் திருப்பணி என்றால் மருத்துவம்தான் என்று அவர்கள் சொன்னார்கள். அந்த நடமாடும் கோயில் திருப்பணியைத்தான் திராவிட முன்னேற்றக் கழக அரசு எவ்வெப்போதெல்லாம் தமிழகத்திலே அமைகிறதோ, அப்போதெல்லாம் நாங்கள் ஆற்றிக் கொண்டிருக்கிறோம்.

தம்பி ஸ்டாலின் இங்கே எடுத்துக் காட்டியதைப் போல ஏழையெளியோருக்கு – நோயாளிகளுக்கு சமுதாயத்தில் இருக்கிற அடித்தட்டு மக்களுக்குப் பாதிக்கப்பட்டவர் களுக்கு – இராமலிங்க அடிகளார் சொன்னதைப் போல் "வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" என்றாரே – அத்தகைய நிலையில் உள்ளவர்களுக்கெல்லாம் உதவிடுவது அவர்களுக்கெல்லாம் கை கொடுப்பது – அவர்களையெல்லாம் வாழ வைப்பது – வாட்டத்தைப் போக்குவது என்ற இந்தப் பணியை திராவிட முன்னேற்றக் கழக அரசு தொடர்ந்து ஆற்றி வருகின்றது. அதிலே ஒரு பணியாகத்தான் இன்றைக்கு இந்தப் பெரும் பணியை நாங்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறோம்.

இந்தப் பணியினால், ஒரு கோடி மக்கள் வாழ்வதற்கு நோயிலிருந்து பிழைப்பதற்கு உயிர்காக்கின்ற உயர் சிகிச்சையைப் பெறுவதற்கு இந்தத் திட்டத்தை தொடங்கியிருக்கிறோம்.

## ஆபத்தை நீக்க அபயக்கரம்

பிச்சைக்காரர்கள் மறுவாழ்வுத் திட்டத்தை 1971ஆம் ஆண்டு தொடங்கிய இந்த ஆட்சி – கண்ணொளி வழங்கும் திட்டத்தை 1972இல் நிறைவேற்றிய இந்த ஆட்சி – இலவச சைக்கிள் ரிக்ஷா திட்டத்தை 1973இல் நிறைவேற்றிய இந்த ஆட்சி – ஊனமுற்றோர் நல்வாழ்வுத் திட்டத்தை 1974இல் தொடங்கிய இந்த ஆட்சி – கருணை இல்லங்களை 1975இல் அமைத்த இந்த ஆட்சி – மூவலூர் மூதாட்டியார் நினைவாக ஏழைப்பெண்கள் திருமண உதவித் திட்டத்தை – நாகம்மையார் நினைவு ஏழை மகளிர் இலவசப் பட்டப் படிப்பு திட்டத்தை – டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதியுதவித் திட்டத்தை உருவாக்கிய இந்த ஆட்சிதான் இன்றைக்கு இந்தப் பெரும் திட்டத்தை உங்கள் முன்னால் வைத்திருக்கின்றது.

இந்தத் திட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ள தமிழகத்திலே உயிர் காக்கும் வரம் யார் தருவார்கள் என்று ஏங்கியிருப்போருக்கெல்லாம் இந்தத் திட்டம் நிச்சயமாக அவர்களுடைய ஆபத்தை நீக்க – அபயக்கரம் நீட்டும் என்ற உறுதியை இந்த நேரத்திலே இந்த இனிய விழாவிலே நான் எடுத்துக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

## இளஞ்சிறார் இருதயப் பாதுகாப்புத் திட்டத்தால் பயன்பெற்று – உலாவரும் குழந்தைச் செல்வங்கள்!

அரசின் சாதனைகளை தம்பி பன்னீர் செல்வம் இங்கே எடுத்துக்காட்டியதைப் போல – நான் அடுக்கிக் காட்ட விரும்பவில்லை. அவைகள் உங்களுக்குத் தெரியாதது அல்ல. ஆனால் நீங்கள் தெரிந்து செயல்படுத்த வேண்டிய திட்டம், பயன்படுத்திக் கொள்ள வேண்டிய திட்டம் இந்தத் திட்டம்.

## இளஞ்சிறார் இருதயப் பாதுகாப்புத் திட்டம்

இதயத்தைப் பாதுகாக்க இளஞ்சிறார் களுக்கு பள்ளிச் சிறார்களுக்கு "இருதயப் பாதுகாப்புத் திட்டம்" இந்த ஆட்சியினால் இப்போது நடத்தப்பட்டு வருகின்றது. குழந்தைகளுக்கு இருதய அறுவை சிகிச்சை செய்வதின் மூலம் – இந்த ஆட்சியில் 13 கோடியே 65 இலட்சம் ரூபாய் செலவில் 653 இளஞ் சிறார்க்கும் 1,663 பள்ளி மாணவர்களுக்கும் இருதய அறுவை சிகிச்சைகள் இலவசமாகச் செய்யப்பட்டுள்ளன. அவர்களும் உயிர் பிழைத்து நம்மிடையே இன்றைக்கு உலவிக்கொண்டிருக்கின்ற காட்சியைப் பார்த்து நாமெல்லாம் உவகை கொள்கிறோம்.

இந்தத் திட்டத்தின் அடுத்தவொரு பணியாகத்தான் – இன்றைய பெரும் திட்டத்தை – காப்பீட்டுத் திட்டத்தை அரசு ஆண்டு ஒன்றுக்கு 517 கோடி ரூபாய் செலவழிக்கும் திட்டத்தை மக்களுக்கு உதவிடும் திட்டம் என்பதை மனதிலே கொண்டு மத்திய அரசின் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் உதவிடுவார் என்ற நம்பிக்கையோடு மத்திய நிதி அமைச்சருக்கு பரிந்துரை செய்வார் என்கின்ற உணர்வோடு இன்றைய இந்த விழாவிலே வேண்டுகோள் வைத்திருக்கிறோம்.

இந்தத் திட்டத்தை தமிழகத்திலே இன்றைக்குத் தொடங்கியிருக்கிறோ மென்றாலும் – ஆந்திரத்திலே இந்தத் திட்டம் ஒவ்வொரு மாவட்டம் என்ற அளவிலே – செயல்படுத்தப்பட்டு வருகிறது. கருநாடகத்திலே காப்பீட்டுத் தொகையை நோயாளிகளே கட்ட வேண்டுமென்ற அளவிற்கு செயல்படுத்தப்பட்டு வருகிறது. நான் நம்முடைய குலாம் நபி ஆசாத்

அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். தமிழகத்திலே இன்றைக்கு வேர் விட்டிருக்கின்ற இந்தத் திட்டம் இந்தியா முழுமையும் பரவி – இந்தியாவிலே உள்ள ஏழையெளிய மக்கள் – அவர்களுடைய உயிர் காக்கின்ற திட்டமாக இந்தத் திட்டத்தை ஏற்றுக் கொள்கிற நிலையை உருவாக்க வேண்டும் என்று நான் நம்முடைய ஆசாத் அவர்களை இந்த விழாவிலே கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய விழாவில் ஒரு அறிவிப்பைச் செய்ய நான் விரும்புகிறேன். இது மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் தமிழ்நாட்டு மக்களுக்கு நலன் பயக்கும் ஒரு விழா.

இந்த விழாவில் உங்களில் ஒருவன் என்ற முறையில் ஓர் அறிவிப்பினை செய்திட விரும்புகிறேன்.

பொது வாழ்க்கை என்பது புனிதமானது. அது என்றும் தூய்மையானதாக இருக்க வேண்டுமென்று நினைப்பவன் நான். நான் ஆட்சிப் பொறுப்புக்கு வருவதற்கு முன்பும்; பின்பும் என் பெயரில் வாங்கப்பட்ட சொத்து என்று பார்த்தால் – கோபாலபுரத்தில் தற்போது நான் வசிக்கும் ஒரு வீடும் (Street House) (தற்போதைய சந்தை மதிப்பு சுமார் எட்டு கோடி ரூபாய்) – திருவாரூருக்கு அருகில் காட்டூர் கிராமத்தில் பதினான்கு ஏக்கர் நிலமும் உள்ளது. இந்தியாவிலேயே தனி பங்களா என்று இல்லாமல், தெருவிலே உள்ள பல வீடுகளில் ஒன்றாக ஒரு முதலமைச்சரின் வீடு இருப்பது என்று எடுத்துக்கொண்டால், அது என்னுடைய வீடாகத்தான் இருக்குமென்று நினைக்கிறேன். நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்கும் நேரத்தில் எல்லாம் – இப்போது கோபாலபுரத்தில் இந்த வீட்டிற்கு பதிலாக அரசு பங்களா ஒன்றில் நான் வசிக்க வீடு ஏற்பாடு செய்யப்பட்ட போது, அதை நான் ஏற்றுக்கொள்ளவில்லை.

வருகின்ற பார்வையாளர்களையும், வெளிநாட்டுக்காரர்களையும் என் இல்லத்தில் வரவேற்றுப் பேசுவதற்குக் கூட போதுமான அளவிற்கு இடம் கிடையாது. புகைப்படக்காரர்கள் நின்று படம் எடுக்கக் கூட வசதி இல்லாத நிலை என்பதை தமிழ்நாட்டில் உள்ள அரசியல்வாதிகள் அனைவரும் நன்கு அறிவீர்கள்.

கோபாலபுரத்தில் நான் வசிக்கும் இந்த இல்லத்தை பல ஆண்டுகளுக்கு முன்பு 1968இல் என் பிள்ளைகளின் பெயரில் செட்டில்மென்ட் எழுதி பதிவு செய்துள்ளேன். தற்போது அந்த இல்லத்தினை என்னுடைய காலத்திற்குப் பிறகும், என் மனைவி காலத்திற்குப் பிறகும், தமிழக அரசுக்கோ அல்லது கலைஞர் அறக்கட்டளைக்கோ உடைமையாக்குவதென்றும், அந்த இல்லத்தில் ஒரு இலவச மருத்துவமனையினை என் தாய் தந்தையர்களான ''அஞ்சுகம் முத்துவேலர்'' பெயரில் நடத்துவதென்றும் அதற்கு என் மனைவி மற்றும் பிள்ளைகளின் ஒப்புதலையும் பெற்றுள்ளேன் என்பதையும் அரசின் மருத்துவத் துறை சம்மந்தப்பட்ட இந்த விழாவில் அறிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

ஆயிரக்கணக்கிலே வந்திருந்து இந்த விழாவைச் சிறப்பித்த உங்கள் அனைவருக்கும் – குறிப்பாகவும், சிறப்பாகவும் நம்முடைய குலாம் நபி ஆசாத் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை மகிழ்ச்சியைத் தெரிவித்து உரையை நிறைவு செய்கிறேன்.

★ ★ ★

# மருத்துவத் துறையில் தமிழ்நாடு மற்ற மாநிலங்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்கிறது!

உயிர் காக்கும்
உயர் சிகிச்சைக்கான
கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தை
23–7–2009 அன்று
தொடங்கி வைத்து
மாண்புமிகு மத்திய
மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
திரு. **குலாம்நபி ஆசாத்** அவர்கள்
ஆற்றிய உரை:

இன்று இங்கு உயிர்காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தைத் தொடங்கி வைக்கும் விழாவில் பங்குபெறுவதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். குடிமக்களுக்கு மருத்துவ உதவி வழங்குவதில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது. இந்தக் காப்பீட்டுத் திட்டம் கலைஞர் அவர்களின் மகுடத்தில் மேலும் ஒரு வைரக்கல்லாக அமையும். இந்த வாய்ப்பை நான் நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை பாராட்டப் பயன்படுத்திக் கொள்கிறேன். அவருடைய திறமையான வழிகாட்டுதலில் நிலையான ஆட்சி மனிதவள குறியீடுகள் மேம்படுத்தப்பட கொள்கைகளும் திட்டங்களும் வெற்றிகரமாக செயல்படுத்தப் பட்டு வருகின்றன.



**பாராட்டுக்குரிய முதலமைச்சர்**

பல பத்தாண்டுகளுக்கு முன்னர் மாபெருந்தலைவர் காமராஜர் அவர்கள் மதிய உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தி நாட்டுக்கே வழிகாட்டினார். தற்போது அத்திட்டம் தமிழகம் மட்டுமின்றி நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் தற்போது புதிய தலைமையால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் நல்ல நடைமுறைகள் நாட்டிலுள்ள ஒவ்வொரு டாக்டர் மன்மோகன் சிங் ஆகியோரது தலைமையிலான நமது அரசு அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்பதற்கு கடமைப்பட்டுள்ளது. மனித வள வளர்ச்சி என்பது அரசின் கொள்கைகளின் இதயமாகத் திகழ்கிறது.

மக்கள் நல்வாழ்வுத் துறை என்பது மாநில அரசுகளின் துறை என்றபோது, நமது ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு கடந்த 2005ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மிகப் பெரிய அளவில்




மாநிலத்திற்கும் மிகச் சிறந்த நடைமுறைகளாக அமையும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். ஒவ்வொரு குடிமக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் வகையில் மத்தியில் தலைவர் சோனியா காந்தி, பிரதமர் தேசிய ஊரக மக்கள் நல்வாழ்வுத் திட்டத்தைத் தொடங்கியது. இத்திட்டம் மாநில அரசுகளின் முயற்சிகளுக்கு உறுதுணையாக இருப்பதுடன் பொது மருத்துவத்துறையில் சீர்திருத்தங் களையும், புதிய கண்டுபிடிப்புகளையும்

நிறைவேற்ற உதவியாக இருக்கும். இந்தத் திட்டம் நம்பகத்தன்மை கொண்ட மருத்துவ முறையை வழங்கவும், போதுமான மனிதவள மேம்பாட்டை உருவாக்கவும் பெரும் முக்கியத்துவத்தை அளிக்கிறது. தமிழ்நாட்டில் தேசிய ஊரக மக்கள் நல்வாழ்வுத் திட்டம் மிகச் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாநிலத்திலுள்ள அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும் இத்திட்டத்தின் கீழ் செவிலியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்தத் திட்டத்தின் நிதியை மிகத் திறமையாகவும், வீணாகாமலும் பயன்படுத்தியுள்ளதால் தமிழ்நாட்டிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் தரமான மருத்துவ சேவை வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் மருத்துவ சேவை மிகச் சிறப்பாக இருப்பதால் தற்போது ஏராளமான பெண்கள் மருத்துவமனைகளில் பிரசவத்திற்காக வரத் தொடங்கியுள்ளனர். இதனால் மாநிலத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்களில் தரமான மருத்துவ சேவை வழங்கப்பட்டு வருகிறது. மணிக்கு 50 பிரசவங்கள் என்ற அளவில் இவை 15 சதவீதம் அதிகரித்துள்ளன. அதே நேரத்தில் தனியார் மருத்துவமனைகளில் பிரசவங்கள் 5 சதவீதம் குறைந்துள்ளன. இது நாட்டிலேயே மிகச் சிறப்பானதாக உள்ளது. இதற்காக நான் மாநில அரசையும் குறிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

இது மருத்துவ வசதிகளை அளிப்பதற்கான நம்பகத் தன்மைகொண்ட பொது முறையை உருவாக்க நாம் கடமைப்பட்டுள்ளதை உறுதி செய்கிறது. தேசிய ஊரக மக்கள் நல்வாழ்வுத் திட்டம் அனைவருக்கும் எளிதில், செலவேதுமின்றி தொலைதூரங்களில் உள்ளவர்களுக்கும் மருத்துவ வசதியை வழங்கும் நோக்கம் கொண்டதாகும்.

அரசு மருத்துவமனைகள் தவிர நாட்டின் பல பகுதிகளில் தனியார் மருத்துவமனைகள், நர்சிங் ஹோம்கள் போன்றவைகளும் உருவாக்கப்பட்டு வருகின்றன. நமது மருத்துவர்களும், மருத்துவ உதவியாளர்களும் செவிலியர்களும் தரமான மருத்துவ உதவி அளிப்பதில் தங்களுடைய திறமைகளை நிலைநாட்டி, அதனால் நாட்டில் மருத்துவ சுற்றுலா பெருகத் தொடங்கியுள்ளது. இந்தியாவில் மிகப்பெருமளவு இளைஞர்கள் மக்கட் தொகை இருப்பதை உலகத்திற்கே பயனுள்ளதாக மாற்ற இயலும்.

**காப்பீட்டுத் திட்டங்களில்**
**அரசு மருத்துவமனைகளின் பங்கு**

தமிழ்நாட்டில் மருத்துவம், உதவி மருத்துவம் மற்றும் செவிலியர் கல்விகள் கடந்த ஆண்டுகளில் விரிவுபடுத்தப்பட்டது மிகப் பெருமளவு பயனளிக்கத் தொடங்கியுள்ளன. தேசிய ஊரக மக்கள் நல்வாழ்வுத் திட்டத்தின் விளைவாக மேம்படுத்தப்பட்ட மனிதவள குறியீடுகள் அடையப்பட்டிருப்பதால் மத்திய அரசு தமிழ்நாட்டில் சென்னை மருத்துவக் கல்லூரியில் மிக உயர்ந்த மகப்பேறு மருத்துவ மையம் (Reproductive Health Care Centre For Excellance) உருவாக்க முடிவு செய்துள்ளது. இந்த மையத்தில் நாடு முழுவதிலிருந்து வரும் மருத்துவர்கள், மருத்துவ உதவியாளர்கள், செவிலியர்கள் ஆகியோர் இங்குள்ள சிறப்பான நடைமுறையைப் பயின்று அவரவர் நாடுகளில் பயன்படுத்துவார்கள். இதற்காக மத்திய அரசு பல கோடி ரூபாய் வழங்குகிறது.

மேலும் மிகச் சமீபத்தில் பதினைந்து நாட்களுக்கு முன்பு எனது துறை தமிழ்நாட்டுக்கு மேலும் ஒரு திட்டத்தை ரூ.250 கோடி மதிப்பிலான பிளாஸ்மா தொடர்பான திட்டத்தை அனுமதித்துள்ளது என்று தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழகத்தின் மனித வளம் நாட்டின் இதர பகுதிகளுக்கு பயனளிக்கும் வகையில் கூட்டுறவு பாத்திரத்தை வகிக்க முடியும். மருத்துவ சேவை கூட்டுறவில் தமிழ்நாடு இதர மாநிலங்களுக்கு முன் மாதிரி மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது. மருத்துவ உபகரணங்கள், மருந்துகள் ஆகியவற்றை கொள்முதல் செய்வதற்கும், இதர பயன்பாட்டு முறைகளுக்கும் தமிழ்நாட்டிலுள்ள மருத்துவ சேவை கூட்டுறவு அமைப்பை மற்ற மாநிலங்களும் கடைப்பிடிக்க வேண்டும் என்று நாங்கள் கூறி வருகிறோம்.

மருத்துவமனையில் சிகிச்சை பெறுவதற்கு மிகவும் செலவாகும் என்பதால் வறுமைக்கோட்டுக்குக் கீழுள்ள மக்களுக்கு பணமின்றி மருத்துவக் காப்பீடு வழங்கப்பட வேண்டியது அவசியமாகிறது. ஏழை மக்கள் பணமின்றி மருத்துவ சேவைகளைப் பெற மருத்துவக் காப்பீட்டுக்கு ஐந்து விதமான மாதிரிகளை தேசிய ஊரக மருத்துவத் திட்டம் வகுத்துள்ளது.

ஏற்கெனவே மத்திய அரசு தொழிலாளர் நலத்துறை மூலமாக வறுமைக்கோட்டுக்குக் கீழுள்ள குடும்பங்களுக்கு ரூ.30,000 வரை மருத்துவமனை சிகிச்சை பெற ராஷ்டிரிய ஸ்வத்தியா பீமா யோஜனா திட்டத்தை மத்திய அரசு துவங்கியுள்ளது. காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்க அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. ஏராளமான அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளைக் கொண்ட தமிழ்நாடு இந்தத் திட்டத்தில் பங்கு பெற முன்வரும் என்று உறுதியாக நம்புகிறேன்.

ஆந்திர மாநிலத்தில் ராஜிவ் ஆரோக்யஸ்ரீ மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் ஏழை மக்களை குறிப்பிட்ட அளவு சென்றடைந்துள்ளது. மத்திய பிரதேசத்தில் தீன்தயாள் உபோஹர் யோஜனா திட்டம் வறுமைக்கோட்டுக்குக் கீழுள்ள குடும்பங்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கிறது. கர்நாடகா மாநிலத்தில் யெஸ்யெஸ்வாணி திட்டம், ராஜஸ்தானில் ரக்ஷாகோஷி திட்டம் ஆகியவை இப்படிப்பட்ட குடும்பங்களுக்கு மருத்துவ உதவி வழங்கி வருகின்றன.

சிகிச்சைக் கட்டணங்களை ஓரளவு குறைவாக வைத்திருக்க உதவும் வகையில் காப்பீட்டுத் திட்டங்களில் அரசு மருத்துவமனைகளும் பங்கு பெறுவது அவசியமாகும். இது அரசு தனது சேவைகளை மேம்படுத்த உதவும். காப்பீட்டுத் திட்டம் மூலம் பெறப்படும் பணம் அரசு மருத்துவமனைகளை மேம்படுத்தவும், அவற்றில் பணிபுரியும் மருத்துவர்கள், மருத்துவ உதவியாளர்கள் போன்றவர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கவும் பயன்படும்.

நோயாளிகளின் உரிமைகள் நன்கு பாதுகாக்கப்படுவதை உறுதி செய்யும் வகையில் மருத்துவக் காப்பீட்டின் அனைத்து அம்சங்களையும் தமிழ்நாடு அரசு பரிசீலித்திருக்கும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். இறுதியில் எந்த திட்டத்தின் வெற்றியும் வரிசையில் கடைசியில் நிற்கும் காந்திய மனிதன் பெறுவதில் உள்ளது.

**கலைஞரின் திட்டம் ஏழைகளைக் காப்பாற்றும்**

மருத்துவச் செலவு என்பது குடும்பங்கள் ஏழ்மையில் இருப்பதற்கான முக்கியமான காரணங்களில் ஒன்றாக இருப்பதால் ஏழைக்குடும்பங்கள் மேலும் வறுமையடை வதிலிருந்து காப்பாற்றும் வகையில் உயிர்காக்கும் உயர் சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத்திட்டம் ஏழைக் குடும்பங்கள் தங்கள் கைகளிலிருந்து செலவு செய்வதைக் குறைத்து அவர்களுக்கு தரமான மருத்துவ சேவைகளை வழங்க வேண்டும். காப்பீட்டின் விளைவுகளை மாநில அரசு மிகக் கவனமாகப் பரிசீலித்திருக்கும் என்று நம்புகிறேன். பல மாநிலங்கள் தங்களது மக்களுக்கான மருத்துவ வசதிகளை மேம்படுத்த தீவிரமாக முயன்று வருகின்றன என்பது மகிழ்ச்சி அளிக்கிறது. இருப்பினும் பெருகிவரும் நமது மக்கள் தொகையை நாம் கட்டுப்படுத்தத் தவறினால் இந்த முயற்சிகள் அனைத்தும் பலனின்றிப் போய் விடும். இத்துறையிலும் தமிழ்நாடு இதர மாநிலங்களுக்கு கலங்கரை விளக்கமாகத் திகழ்கிறது.

பொதுவாக தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வுத் துறையையும் குறிப்பாக முதலமைச்சர் கலைஞர் அவர்களையும் மக்கள் தொகையை நிலை நிறுத்தியமைக்காக நான் பாராட்டுகிறேன். நான் பல மேடைகளில் சொல்லியிருக்கிறேன்; நாம் ஒரு எரிமலையின் மேல் அமர்ந்துள்ளோம். இப்போதெல்லாம் எவரும் குடும்பக் கட்டுப்பாடு பற்றி பேசுவதில்லை. எவரும் குழந்தை பிறப்பைக் கட்டுப்படுத்துவது பற்றிப் பேசுவதில்லை. நமது நாட்டின் மக்கள்தொகை ஆண்டுக்கு ஆண்டு வெகு வேகமாகப் பெருகி வருகிறது. ஆனால் நிலப்பரப்பு நாளுக்கு நாள் சுருங்கி வருகிறது. உலக மக்கள் தொகையில் 17 சதவீதப் பேர் நமது நாட்டில் உள்ளனர். ஆனால் பூமியின் நிலப்பரப்பில் இரண்டு சதவீத நிலம்தான் நம்மிடம் உள்ளது. இரண்டு சதவிகித நிலம் 17 சதவிகித மக்களைச் சுமந்து வருகிறது. நாளுக்கு நாள் நாம் ஆயிரக்கணக்கான, ஏன் இலட்சக்கணக்கான வீடுகளைக் கட்டுகிறோம். பள்ளிக் கட்டடங்கள், மருத்துவமனைகள், பாலங்கள், இரயில் தடங்கள் என்று நமது கட்டுமானப் பணிகள் பன் மடங்கு அதிகரித்து விவசாயத்திற்கு நில அளவு குறைந்து வருகிறது. எவ்வளவு காலம் எப்படி நம்மால் இப்படி நிலத்திற்கும் மக்கள் தொகைக்கும் பொருந்தாத நிலைமையைத் தாக்குபிடிக்க முடியும். எனவே நாம் ஒருநாடாக எழுந்து இந்தச் சவாலைச் சந்தித்து மக்கள்தொகையை நிலைநிறுத்த வேண்டும். தென் மாநிலங்கள், குறிப்பாகத் தமிழ்நாடு இத்துறையில் மாபெரும் சாதனைகளைப் படைத்துள்ளது மகிழ்ச்சி அளிக்கிறது. ஆனால் இது போதாது, வட மாநிலங்கள், கிழக்கு, மேற்கு, மைய மாநிலங்களும் இந்த சவாலைச் சந்திக்க தயாராக வேண்டும்.

மீண்டும் தமிழ்நாட்டைப் பற்றிப் பேசுகிறேன்.


மருத்துவமனைகளில் 99 சதவீத பிரசவங்கள் பார்க்கப்படுவதால், தமிழ்நாடு இதர மாநிலங்கள் கடைப்பிடிக்க வேண்டிய உதாரண மாநிலமாகத் திகழ்கிறது. மாநிலத்தில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நல்வாழ்வு சேவைகளை செயல் துடிப்புடன் மேம்படுத்தி வருவதற்காக கலைஞர் அவர்களையும் தமிழ்நாடு அரசையும், தமிழ்நாடு மக்களையும் மீண்டும் பாராட்டுகிறேன். கலைஞர் காப்பீட்டுத் திட்டம் வெற்றிபெற வாழ்த்துகிறேன். இத்திட்டம் தொடங்கப்படுவதுடன் மருத்துவ உதவியின் தரம் மேலும் உயரும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

★ ★ ★

# தமிழகமே சமத்துவபுரமாக வளர்ச்சி அடைய அனைவரும் பாடுபடுவோம்! பணியாற்றுவோம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள்
14.6.2009 அன்று சென்னை, தலைமைச் செயலகத்தில்
மின் ஊடக தொலைத் தொடர்பு வாயிலாக திருச்சி மாவட்டம், மல்லிகைப்பட்டி
பெரியார் நினைவு சமத்துவபுரத்தைத் திறந்து வைத்து ஆற்றிய உரை:

திருச்சி மாவட்டம், மல்லிகைப்பட்டியில் பெரியார் நினைவு சமத்துவபுரத் திறப்பு விழாவில், பெரியார் அவர்களின் திருவுருவச் சிலையைத் திறந்துவைக்க வருகை தந்துள்ள தமிழகத்தின் துணை முதலமைச்சர் தம்பி மு.க. ஸ்டாலின் அவர்களே, விழாவிற்குத் தலைமையேற்றுள்ள தம்பி கே.என். நேரு அவர்களே, தமிழ்நாடு மின்துறை அமைச்சர் ஆர்க்காடு வீராசாமி அவர்களே, தமிழ்நாடு உயர் கல்வித் துறை அமைச்சர் தம்பி பொன்முடி அவர்களே, மத்திய இணை அமைச்சர் தம்பி நெப்போலியன் அவர்களே, தமிழ்நாடு வனத்துறை அமைச்சர் தம்பி செல்வராஜ் அவர்களே, மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி அவர்களே, வரவேற்புரை ஆற்றிய திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் சவுண்டையா, இ.ஆ.ப., அவர்களே வாழ்த்த வந்துள்ள நாடாளுமன்ற, சட்டப்பேரவை முன்னாள் இந்நாள் உறுப்பினர்களே, பெரியோர்களே, தாய்மார்களே, என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளே அனைவருக்கும் என்னுடைய வணக்கத்தையும், வாழ்த்துகளையும் இந்த நல்ல நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.



திருச்சி மாவட்டம் மருங்காபுரி ஊராட்சி ஒன்றியம், மல்லிகைப்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள பெரியார் நினைவு சமத்துவபுரத்தை மின் ஊடகத் தொலைத்

தொடர்பு வாயிலாகத் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலகத்திலிருந்து தொடங்கி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்தச் சமத்துவபுரத்தில் அமைந்துள்ள வீடுகளை எல்லாம் தொலைக்காட்சி மூலமாக கண்டு வியப்படைந்து – பூரிப்படைந்து திருச்சி மாவட்டத்தில் இப்படி ஒரு அற்புதமான சாதனையா, அதுவும் நம்முடைய கழக ஆட்சியிலா என்ற பெருமிதமும் கொண்டேன். திருச்சி சில நேரங்களில் நமக்கு ஏமாற்றத்தை (?) அளித்திருக்கிறது என்றாலும், ஏற்றத்தையும் அளித்திருக்கிறது என்பதற்கு இன்றைய விழா உதாரணமாக அமைந்திருக்கிறது. இந்த விழாவிற்கான சிறப்பு பெரியார் நினைவு சமத்துவபுரம் எவ்வளவு அருமையாக, அற்புதமாக அமைந்திருக்கிறது என்பதைப் பார்க்கும்போது நமக்கு ஏற்படுகிறது.

“தீண்டாமையை ஒழிக்க வேண்டும்” என்றார் நமது தேசத்தந்தை அண்ணல் காந்தி அடிகள்!

“சாதி வித்தியாசம் என்பது கற்பிக்கப்பட்டதே ஒழிய வேறில்லை. வலுத்தவன் இளைத்தவனை அடக்கி வைப்பது என்பதற்கு சாட்சி சாதி வித்தியாசமே ஆகும். இது, இன்னும் நிலைத்திருப்பது என்றால் இந்த நாடு மிருகப்பிராயத்திலிருந்து மனிதப் பிராயத்திற்கு இன்னமும் வரவில்லை என்பதைத்தான் இது தெளிவாகக் காட்டுகிறது” என்று கூறி, “சாதி ஒழிந்த சமுதாயத்தை நான் உள்ளபோதே காண விழைகிறேன்” என்றார் தந்தை பெரியார்!

“தோழமைதான் சமத்துவத்தின் கனி; சமதர்ம மணம்; அதைக் காண வேண்டுமானால் சாதி தொலைய வேண்டும்” என்றார் பேரறிஞர் அண்ணா!

அண்ணல் அம்பேத்கர் சாதி மத பேதங்கள் இந்த மண்ணிலிருந்து அகற்றப்பட வேண்டும் என்பதற்காக வாழ்நாள் முழுதும் போராடினார்!

நாடு விடுதலை பெற்றபின் சாதி பேதம் ஒழிய, தீண்டாமைக் கொடுமை அகல பல்வேறு சட்டங்களும், திட்டங்களும் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன.

என்றாலுங்கூட, சாதியும் மதமும் நாட்டின் முன்னேற்றத்திற்குத் தடையாக அமைந்து மக்களிடையே பகைமை உணர்வுகளையும், பிளவுகளையும் ஏற்படுத்துவதற்குக் கருவியாகவும், காரணமாகவும் இருக்கின்றன.

**இந்தியாவிலேயே முதலாவதாக அறிவிக்கப்பட்ட திட்டம்**

இந்த நிலையில், சாதி வேறுபாடுகளை முற்றிலும் மறந்து தமிழ்ச் சமுதாயம் ஒரே சமுதாயமாக வாழவேண்டும் என்கிற குரல், மெல்ல மெல்ல, ஆனால், உறுதியாக வெற்றிபெற வேண்டும் என்பதற்காகக் கழக அரசால் உருவாக்கப்பட்ட ஒரு திட்டம்தான் பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டம்.

**1997** ஆம் ஆண்டில், நமது இந்தியத் திருநாட்டின் சுதந்திரப் பொன்விழா கொண்டாடப்பட்டபொழுது,

“ஆதிதிராவிட மக்கள் உட்பட அனைத்துச் சமூகத்தினரும் நல்லிணக்கத்தோடு சமத்துவமாக ஒரே குடியிருப்பில் அருகருகே ஒற்றுமையாக வாழும் வகையில் தலா 100 வீடுகளைக் கொண்ட சமத்துவபுரங்கள் தமிழகம் முழுவதும் அமைக்கப்படும்” என முதலமைச்சர் என்ற முறையில் இந்தியாவிலேயே முதன்முதலாக என்னால் அறிவிக்கப்பட்டது.

**மதுரை மாவட்டத்தில்**
**முதல் பெரியார் நினைவு சமத்துவபுரம்**

அந்த அறிவிப்பினைத் தொடர்ந்து, தமிழகத்தில் அமைக்கப்பட்ட முதல் பெரியார் நினைவு சமத்துவபுரத்தை மதுரை மாவட்டம், திருமங்கலம் அருகே மேலக்கோட்டையில் 17.8.1998 அன்று நான் திறந்து வைத்தேன்.

அப்படி திறந்து வைத்த அந்த விழாவில்,

"பல்வேறு பிரிவு மக்களையெல்லாம் ஒன்றாக்குகின்ற சமத்துவம் முகிழ்க்க வேண்டும் என்பதற்காக இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது என்பதை எண்ணிப் பார்த்து, இதைப் பயன்படுத்துகின்றவர்கள் நல்ல தூய்மையை இங்கே வளர்க்கவும், அறிவினை இங்கே வளர்க்கவும், நல்ல பிள்ளைகளை வளர்த்து உருவாக்கவும் எங்களோடு, இந்த அரசோடு ஒத்துழைக்க வேண்டுமென்று அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன். சமத்துவபுரத்திலே குடியேறுகின்ற நீங்கள் காட்டுகின்ற இந்த ஒற்றுமை இந்த மாநிலத்திற்கே, இந்த நாட்டிற்கே வழிகாட்டியாக அமையட்டும் என்றும் கேட்டுக் கொண்டு, சமத்துவபுரங்கள் வளரட்டும்! வளரட்டும்! தமிழ்நாடே சமத்துவபுரமாக ஆகட்டும்! இந்தியத் திருநாடே சமத்துவபுரமாக ஆகட்டும்!" என்று கூறினேன்.

அதனைத் தொடர்ந்து, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடைபெற்ற 2001 மே திங்கள் வரை தமிழகம் முழுவதிலும் 145 சமத்துவபுரங்கள் ஒன்றன்பின் ஒன்றாக உருவாக்கப்பட்டன.

ஒவ்வொரு சமத்துவபுரத்திலும் ஆதிதிராவிடர்களுக்கு 40 வீடுகள், பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 25 வீடுகள், மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு 25 வீடுகள், பிராமணர்கள் உட்பட இதர சாதியினருக்கு 10 வீடுகள் – என 100 வீடுகள் வீதம், மொத்தம் 145 சமத்துவபுரங்களிலும் 14 ஆயிரத்து 500 வீடுகள் அனைத்து அடிப்படை வசதிகளுடனும் கட்டப்பட்டு, அந்தந்த சாதியினர்க்கு ஒதுக்கீடுகள் செய்யப்பட்டன.

**பெரியார் சிலையுடன் கூடிய சமத்துவபுரங்கள்**

அவ்வாறு பொதுமக்களாலும், சான்றோர்களாலும், பத்திரிகைத் துறை நண்பர்களாலும் பாராட்டப்பட்ட இந்த பெரியார் நினைவு சமத்துவபுரங்கள் 2001இல் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவர்களால் முறையாகவும், சரியாகவும் பராமரிக்கப்படாத நிலை ஏற்பட்டு, தொய்வுற்று,

அடுத்த 2006இல் மீண்டும் இந்த கழக அரசு அமைந்தபிறகு பெரியார் நினைவு சமத்துவபுரக் குடியிருப்புகளை மேம்படுத்திட 14 கோடியே 50 இலட்ச ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அவை செப்பனிடப்பட்டுள்ளன என்பதையும் இவ்வேளையில் சுட்டிக்காட்டிட விரும்புகிறேன்.

தந்தை பெரியார் அவர்கள் வாழ்ந்த 95 ஆண்டுகளைக் குறிக்கும் வகையில் பெரியாருக்கு 95 அடி உயரச் சிலை ஒன்றினை அமைக்க வேண்டும் என்று, திராவிடர் கழகப் பொதுச் செயலாளர், இளவல் கி. வீரமணி அவர்கள் தமிழக அரசுக்கு விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில், தந்தை பெரியார் அவர்களுக்கு 95 அடி உயரமுள்ள சிலையை ஓரிடத்தில் மட்டும் அமைப்பதைக் காட்டிலும்,

"பெரியார் பெயரால் மேலும் 95 சமத்துவபுரங்களை அமைத்து, அனைத்து சமூகத்தினரும் சகோதர பாசத்துடன் ஒருமித்து

வாழ்கின்ற அந்த ஒவ்வொரு சமத்துவபுர முகப்பிலும் தந்தை பெரியார் அவர்களின் சிலையை அமைப்பதால் அவருடைய தலையாயக் கொள்கையான சமுதாயச் சமத்துவக் கொள்கை பரவுவதற்கு வழி ஏற்படும் என்பதற்காக, அந்தப் பணியை இந்த அரசு தொடங்க முடிவு செய்துள்ளது. ஏற்கெனவே இவ்வரசு அமைத்துள்ள 145 சமத்துவபுரங்களுடன் சேர்த்து இப்பணி முடிவுற்றபின் பெரியார் சிலையுடன் கூடிய 240 சமத்துவபுரங்கள் தமிழகத்தில் அமையும்'' என அறிவிக்கப்பட்டதின் விளைவாக,

நமது மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உரிய இடங்களைத் தேர்வு செய்து பெரியார் நினைவு சமத்துவபுரங்களைத் தந்தை பெரியார் அவர்களின் திருவுருவச் சிலையோடு அமைக்கும் பணிகளில் முனைப்புடன் ஈடுபட்டுள்ளார்கள்.

பெரியார் வாழ்க்கை வரலாற்றுத் திரைப்படம் தயாரிக்கவும் இந்த அரசு அவருடைய வயதிற்கேற்ப 95 இலட்சம் ரூபாய் நிதி வழங்கி பெருமையுற்றது.

திருச்சி மாவட்டத்தில் மல்லிகைப்பட்டியில் தந்தை பெரியார் அவர்களின் திருவுருவச் சிலையோடு 8.67 ஏக்கர் பரப்பில் 2 கோடியே 23 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள தமிழகத்தின் 146வது பெரியார் நினைவு சமத்துவபுரம் 15.07.2009 அன்று திறந்து வைக்கப்படுகிறது என்பதை எண்ணிப் பெருமிதம் அடைகிறேன்.

நடப்பு நிதியாண்டில், மேலும் 29 பெரியார் நினைவு சமத்துவபுரக் குடியிருப்புகள் அமைக்கப்படுவதற்காக 7.5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

*எரிமலையாய்ச் சுடுதழலாய்*
*இயற்கைக் கூத்தாய்*
*எதிர்ப்புகளை நடுங்கவைக்கும் இடி ஒலியாய்*
*இன உணர்வுத் தீப்பந்தப் பேரொளியாய்*
*இழிவுகளைத் தீர்த்துக் கட்டும் கொடுவாளாய்*
*எப்போதும் பேசுகின்ற ஏதென்சுநகர்*
*சாக்ரடீசாய்*
*ஏன் என்று கேட்பதிலே வைர நெஞ்ச*
*வால்டேராய்*

வாழ்ந்திட்ட எம் தந்தை பெரியாரின் நினைவால் அமைந்திட்ட சமத்துவபுரத்தை திறந்து வைப்பதில் பெருமையடைகிறேன்.

பெரியார் அவர்களின் சமூகநீதிச் சிந்தனைகள் வலுப்பெறவும், சாதி சமயமற்ற, சமத்துவ சமுதாயம் உருவாக்கப்படவும் மக்கள் ஒற்றுமையுடனும், அமைதியுடனும் வாழவும், மொத்தத்தில் தமிழகமே சமத்துவபுரமாக வளர்ச்சி அடையவும் அனைவரும் பாடுபடுவோம், பணியாற்றுவோம் என்று கூறி விடை பெற்றுக் கொள்கிறேன்.

அதற்கு முன்பு இந்தச் சமத்துவபுரத்தை இவ்வளவு அழகாகவும், எழிலாகவும், பொலிவு நிறைந்த நிலையிலும், காண்பதற்கே வியப்படைய வைக்கும் நிலையிலும் உருவாக்கியுள்ள மாவட்ட அரசின் அதிகாரிகளையும், அமைச்சர் பெருமக்களையும் குறிப்பாக இந்தச் சமத்துவபுரம் விரைவிலே உருவாகி இதனைத் திறந்து வைக்கின்ற அரும்பணியினை ஆற்றியுள்ள நம்முடைய துணை முதலமைச்சர் தம்பி ஸ்டாலின் அவர்களையும் மற்ற அமைச்சர் பெருமக்களையும் பாராட்டி வாழ்த்தி விடைபெறுகிறேன்.

★ ★ ★

# 10ஆம் வகுப்புப் பொதுத்தேர்வில் தமிழ் வழி பயின்று அதிக மதிப்பெண் பெற்ற 1,100 மாணவ, மாணவியருக்கு ரொக்கப்பரிசு

மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
**கலைஞர்** அவர்கள்
திட்டத்தைத்
தொடங்கி வைத்தார்!

2009 மார்ச்சுத் திங்களில் நடைபெற்ற பத்தாம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில், தமிழ்வழி பயின்று அதிக மதிப்பெண்கள் எய்தி முதல் 1,000 இடங்களைப் பெற்றுள்ள 1,100 மாணவ, மாணவியருக்கு 3 கோடியே 26 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் செலவில் ஊக்கப் பரிசாக மடிக்கணினிகள் வழங்கப்படுகின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களைச் சார்ந்த 10 மாணவ, மாணவியருக்கு மடிக்கணினிகளை 8.6.2009 அன்று வழங்கித் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.



தமிழ்வழியில் பயின்று பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் 1,000 மாணவ, மாணவியருக்கு ஊக்கப் பரிசாக மடிக் கணினிகள் அளிக்கும் திட்டத்தின்கீழ், தமிழை ஒரு பாடமாக எடுத்துப் படித்து, 10–ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் முதல் மூன்று இடங்கள் பெறும் மாணவ, மாணவியரின் உயர் கல்விச் செலவினங்களைத் தமிழக அரசு ஏற்கும் திட்டத்துடன் அம்மாணவ, மாணவியருக்கு அளிக்கப்படும் 7 ஆயிரத்து 500 ரூபாய் பரிசுத் தொகையை 25 ஆயிரம் ரூபாய் என்று உயர்த்தியும், இரண்டாம் இடம் பெறுபவருக்கு வழங்கப்படும் 6 ஆயிரம் ரூபாய் பரிசுத் தொகையை 20 ஆயிரம் ரூபாய் என்று உயர்த்தியும், மூன்றாம் இடம் பெறுபவருக்கு வழங்கப்படும் 5 ஆயிரம் ரூபாய் பரிசுத் தொகையை 15 ஆயிரம் ரூபாய் என்று உயர்த்தியும் இந்த ஆண்டு முதல் வழங்கிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

அதன்படி, 2009 மார்ச்சுத் திங்களில் நடைபெற்ற 10ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில் 500க்கு 496 மதிப்பெண்கள் ஈட்டி, மாநில அளவில் முதல் இடம் பெற்றுள்ள கன்னியாகுமரி மாவட்டம் புனித மரிய கொறட்டி மேல்நிலைப் பள்ளி மாணவர் ப.மா. ஜோஸ் ரிஜன் என்பவருக்கு 25 ஆயிரம் ரூபாய்;

500க்கு 495 மதிப்பெண்கள் ஈட்டி மாநில அளவில் இரண்டாம் இடம் பெற்றுள்ள பாளையங்கோட்டை சாராடக்கர் மகளிர் மேல்நிலைப்பள்ளி மாணவி ஜே. ஹெப்சிபா பியூலா; மதுரை புனித மரியன்னை மேல்நிலைப் பள்ளி மாணவர் அ. ஜேம்ஸ் மார்டின், கோபிசெட்டிபாளையம் மொடச்சூர் சாரதா மேல்நிலைப் பள்ளி மாணவி சி.சுஷ்மா, காவேட்டிப்பட்டி குறிஞ்சி மேல்நிலைப்பள்ளி மாணவி இரா. அபிநயா, பட்டுக்கோட்டை புனித இசபெல் பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவி எஸ். துளசி ராஜ் ஆகிய ஐந்து பேருக்கும் தலா 20 ஆயிரம் ரூபாய்;

500க்கு 494 மதிப்பெண்கள் ஈட்டி மாநில அளவில் மூன்றாம் இடம் பெற்றுள்ள அருப்புக்கோட்டை எஸ்.பி.கே. மேல்நிலைப்பள்ளி மாணவர் ஆ. இரா. பாலச்சந்திரன், வேடசந்தூர் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி மாணவி ச. உமா நந்தினி, கரூர் காக்கவாடி பி. ஏ. வித்யாபவன் மேல்நிலைப்பள்ளி மாணவர் இரா.விமல் ஆகிய மூன்று பேருக்கும் தலா 15 ஆயிரம் ரூபாய்;

மெட்ரிக்குலேஷன் தேர்வில் மாநில அளவில் முதல் மூன்று இடங்கள் பெறும் மாணவ, மாணவியருக்கு இதுவரை பரிசுகள் வழங்கப்படவில்லை. அவர்களுக்கும் இந்த ஆண்டு முதல் பரிசுகள் வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார். இப்புதிய திட்டத்தின்படி, மெட்ரிக்குலேஷன் தேர்வில் தமிழை முதன்மை மொழியாகக் கொண்டு 500க்கு 490 மதிப்பெண்கள் ஈட்டி மாநில அளவில் முதல் இடம் பெற்றுள்ள தூத்துக்குடி, எக்ஸ் அன் மெட்ரிகுலேஷன் பள்ளி மாணவி அ.பால பிரியதர்ஷனிக்கு 25 ஆயிரம் ரூபாய்;

500க்கு 489 மதிப்பெண்கள் பெற்று மாநில அளவில் இரண்டாம் இடம் பெற்றுள்ள, காஞ்சிபுரம், சேலையூர், சீயோன் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி மாணவர் ந.ல. தினேஷுக்கு 20 ஆயிரம் ரூபாய்;

500க்கு 487 மதிப்பெண்கள் பெற்று மாநில அளவில் மூன்றாம் இடம் பெற்றுள்ள, மதுரை, டி.வி.எஸ். மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி மாணவி அ. மிருணாஸ்ரீ, பெருந்துறை, கொங்கு வேளாளர் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி மாணவி செல்வி கு. சங்கவி ஆகிய இருவருக்கும் தலா 15 ஆயிரம் ரூபாய் – என மொத்தம் 13 மாணவ, மாணவியருக்குப் பரிசுத் தொகையாக மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 2 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய்க்கான காசோலைகளை 8.6.2009 அன்று வழங்கிப் பாராட்டியதுடன், பரிசு பெற்ற மாணவ, மாணவியரின் உயர்கல்விச் செலவு முழுவதையும் தமிழக அரசே ஏற்கும் என்பதற்கான சான்றிதழ்களையும் அவர்களிடம் வழங்கி வாழ்த்துகள் தெரிவித்தார்.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களிடமிருந்து மடிக்கணினிகளையும், காசோலைகளையும் பரிசுகளாகப் பெற்ற மாணவ, மாணவியரும், அவர்களுடைய பெற்றோரும் இந்த மகத்தான திட்டங்கள் தமிழகப் பள்ளி மாணவ, மாணவியர் இடையே, நன்கு படித்து மாநில அளவில் சாதனைகள் படைத்திட வேண்டுமெனும் உணர்வை வளர்ப்பதாகவும், இத்தகைய திட்டங்களை அறிமுகப்படுத்தி, குழந்தைகளுக்கு ஊக்கமளித்து, தமிழகத்தில் தரமான கல்வி வளர்ச்சிக்கு வழிவகுத்துவரும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களை நன்றியுணர்வுடன் பாராட்டுவதாகவும் மகிழ்ச்சியுடன் கூறினர்.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக்கல்வித் துறைச் செயலாளர் திரு. எம். குற்றாலிங்கம், இ.ஆ.ப., பள்ளிக் கல்வி இயக்குநர் முனைவர் பி. பெருமாள்சாமி, அரசுத் தேர்வுகள் இயக்குநர் திருமதி. வசந்தரா தேவி, மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் இயக்குநர் திரு. பி. மணி ஆகியோர் உடனிருந்தனர்.

★ ★ ★

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்களின் கோரிக்கையை ஏற்று இலங்கைத் தமிழர்களின் நிவாரணத்திற்காக ரூ.500 கோடி மத்திய அரசு ஒதுக்கீடு



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நாடாளுமன்றத் தேர்தல் வெற்றிக்குப்பிறகு புதுடெல்லி சென்ற போது மாண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர். மன்மோகன் சிங் அவர்கள், அகில இந்திய காங்கிரஸ் கட்சித் தலைவர் திருமதி. சோனியாகாந்தி அவர்கள் ஆகியோரைச் சந்தித்து இலங்கையில் ராணுவத் தாக்குதலால் வீடிழந்தும் உடைமைகளை இழந்தும் தவிக்கும் தமிழ் மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றவும் மறுவாழ்வுக்காகவும் மத்திய அரசு குறைந்தது 1,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

அதன்படி, உடனடியாக 100 கோடி ரூபாயை மத்திய அரசு ஒதுக்கீடு செய்தது. இலங்கைத் தமிழர்களுக்காக கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய

வேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலம் தொடர்ந்து வலியுறுத்தியதையொட்டி மாண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர். மன்மோகன் சிங் அவர்கள் இலங்கைத் தமிழர்களின் மறுவாழ்வுக்காக மேலும் 500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து 9.6.2009 அன்று மக்களவையில் அறிவித்தார்.

மாண்புமிகு இந்தியப் பிரதமர் டாக்டர். மன்மோகன் சிங் இலங்கைத் தமிழர்களுக்காக 500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்ததற்கு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சார்பில் 9.6.2009 அன்று திரு. டி.ஆர். பாலு தலைமையில் மத்திய அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் மாண்புமிகு பிரதமர் டாக்டர். மன்மோகன் சிங், திருமதி. சோனியா காந்தி ஆகியோரை நேரில் சந்தித்து பொன்னாடை அணிவித்து நன்றி தெரிவித்தனர்.

அப்போது மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களிடம் இலங்கைத் தமிழர்களின் மறுவாழ்வுக்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வலியுறுத்தியதின் பேரில் 500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்ததற்கு மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

இலங்கைத் தமிழர்களின் மறுவாழ்வுக்காக 1,000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கேட்டுக்கொண்டார். மேலும் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் சார்பில் கேட்டுக் கொண்டனர்.

**தமிழகத்தின் மீது எனக்கு தனி அக்கறை உண்டு**

அப்போது மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் ''தமிழ்நாட்டின் மீதும் இலங்கைத் தமிழர்கள் மீதும் எனக்கு எப்போதும் தனி அக்கறை உண்டு. தாங்கள் தமிழ்நாட்டின் பிரச்சினைகளுக்கு எந்த நேரமும் என்னை அணுகலாம்'' என்று பிரதமர் உறுதியளித்தார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உடல் நலம் குறித்தும் விசாரித்தறிந்தார்.

அதேபோல் திருமதி. சோனியாகாந்தி அவர்களையும் திரு. டி.ஆர். பாலு தலைமையில் மத்திய அமைச்சர்கள், நாடாளுமன்ற கழக உறுப்பினர்கள் சந்தித்து இலங்கைத் தமிழர்களின் மறுவாழ்வுக்காக 500 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் சார்பில் நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

அப்போது திருமதி. சோனியாகாந்தி அவர்கள் ''இலங்கைத் தமிழர்களின் துயர் துடைக்க மத்திய அரசு மேலும் என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்வதற்கு பிரதமரிடம் பரிந்துரை செய்வேன்'' என்று கூறினார்.

மேலும் அப்போது மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அவர்களின் உடல்நிலை குறித்து திருமதி. சோனியாகாந்தி அவர்கள் விசாரித்து அறிந்ததோடு, தனது மரியாதையையும், வணக்கத்தையும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களிடம் தெரிவிக்குமாறு கூறினார்.

இந்த சந்திப்பின்போது மாண்புமிகு மத்திய அமைச்சர்கள் திரு. ஆ. இராசா, திரு. எஸ். எஸ். பழநிமாணிக்கம், திரு. து. நெப்போலியன், திரு. செ. காந்தி செல்வன், மக்களவை உறுப்பினர்கள் திரு. டி.ஆர். பாலு, திரு. ஏ.கே. எஸ். விஜயன், திரு. டிகே.எஸ். இளங்கோவன், திரு. இ.ஜி. சுகவனம், திரு. த. வேணுகோபால், திரு. ஆதி. சங்கர், இரா. தாமரைச் செல்வன், திரு. எஸ். ஆர். ஜெயதுரை, திருமதி. ஜே. ஹெலன்டேவிட்சன் ஆகியோர் பங்கேற்றனர்.

★

# இராமநாதபுரம் மாவட்ட மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் கூட்டுக் குடிநீர்த் திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள் இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை சென்னை, தலைமைச் செயலகத்தில் இருந்து மின் ஊடகத் தொலைத் தொடர்பு மூலமாக 11.6.2009 அன்று தொடங்கி வைத்து ஆற்றிய உரை:

இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத் தொடக்க விழாவிற்குத் தலைமையேற்கும் துணை முதலமைச்சர் தம்பி மு.க.ஸ்டாலின் அவர்களே!

முன்னிலையேற்கும் குடிசைமாற்று வாரிய அமைச்சர் தம்பி சுப. தங்கவேலன் அவர்களே!

வாழ்த்துரை வழங்கும் தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. கே.எஸ். ஸ்ரீபதி, இ.ஆ.ப., அவர்களே!

வரவேற்புரை வழங்கியுள்ள நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலாளர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., அவர்களே!


திட்ட விளக்கவுரை ஆற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. ஸ்வரன்சிங், இ.ஆ.ப., .அவர்களே!

நன்றியுரை ஆற்றும் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ஆர். வாசுகி, இ.ஆ.ப., அவர்களே!

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளே!

அனைவர்க்கும் என்னுடைய வணக்கத்தை – வாழ்த்துகளை உரித்தாக்குகிறேன்.



பேறறிஞர் அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு, முதலமைச்சர் பொறுப்பையேற்று பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டிருந்த நிலையில், நீலகிரியில் 21.5.1989 அன்று நடைபெற்ற மலர் கண்காட்சியைத் திறந்து வைக்கச் சென்ற போது, அந்த மலர் கண்காட்சியைப் பார்த்து விட்டு – நீலகிரியில் பூத்துக் குலுங்கியிருந்த மலர் கூட்டத்தைப் பார்த்து விட்டு, துள்ளியோடிய அருவிகளைப் பார்த்து விட்டு எண்ணிக் கொண்டேன்; அந்த எண்ணத்தையும் அப்போதே அந்த நிகழ்ச்சியில் வெளியிட்டேன். ''நான் நீலகிரியைப் பார்த்து – இந்தச் செழிப்பைப் பார்த்து – இந்த மலர் வனத்தைப் பார்த்து மகிழ்ச்சி அடைகின்ற அதே நேரத்தில், வறண்டு கிடக்கின்ற இராமநாதபுரம் மாவட்டத்தையும் எண்ணிக் கவலைப்படுகிறேன்'' என்று அப்போது அந்தக் கண்காட்சி விழாவிலே குறிப்பிட்டேன்.

குறிப்பிட்டதோடு இருந்துவிடவில்லை. இராமநாதபுரம் மாவட்டத்தையும் வளம் மிக்க நீலகிரி மாவட்டம் போல அப்படியே ஆக்கிட முடியாதென்றாலும் – ஓரளவு அவ்வாறு மாற்றிட வேண்டும் என்ற முனைப்போடு ஆட்சிப் பொறுப்பிலே செயல்பட்டேன். அதன் விளைவாகத்தான் 1996 ஆம் ஆண்டில் கழக அரசு அமைந்த பொழுது, இராமநாதபுரம் மாவட்டத்தில் 72 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் உவர் நீரை நன்னீராக்கும் 11 திட்டங்களைச் செயல்படுத்தினோம். அந்தத் திட்டங்களின் கீழ் அமைக்கப்பட்ட உவர்நீரை நன்னீராக்கும் 11 கலன்கள் மூலம் மொத்தம் 237 கிராமக் குடியிருப்புகள் குடிநீர் வசதி பெற்று வருகின்றன.

அதேபோல, ஆசியாவிலேயே மிகப் பெரிய திட்டமாகிய கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம், இராமநாதபுரம் மாவட்டம் நரிப்பையூரில் 51 கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்டு, 27.6.1999 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. அது இன்றும் இராமநாதபுரம் மாவட்ட மக்களுக்கு நல்ல முறையில் பயனளித்து வருகிறது.

**விரைந்து நிறைவேறிய பணிகள்**

2006 மே திங்களில் தமிழகத்தில் இந்த அரசு மீண்டும் அமைந்த பிறகு, சட்டப்பேரவையில் அளித்த நிதிநிலை அறிக்கையில் 22.7.2006 அன்று செய்யப்பட்ட அறிவிப்பினை உடனடியாகச் செயல்படுத்துவதற்காக வகுக்கப்பட்ட திட்டம்தான் இந்த இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆகும்.

616 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான இத்திட்டப் பணிகளுக்கு, 30.1.2007 அன்று பரமக்குடியில் நடைபெற்ற விழாவில் அடிக்கல் நாட்டி தொடங்கி வைக்கப்பட்ட நிகழ்ச்சி இன்றும் என் மனக்கண் முன் நிழலாடிக் கொண்டிருக்கின்றது. அன்று அடிக்கல் நாட்டப்பட்ட வேகத்தில், பணிகள் படிப்படியாக முடிக்கப்பட்டு, இன்று முதல் இத்திட்டம் பயன்பாட்டிற்கு வருகிறது.

மகத்தான இந்தத் திட்டத்தில், முதற்கட்டமாக இராமநாதபுரம், இராமேசுவரம், பரமக்குடி, கீழக்கரை ஆகிய நகராட்சிப் பகுதிகளில் வாழும் மக்களுக்கும், மண்டபம், சாயல்குடி, முதுகுளத்தூர், கமுதி, அபிராமம் ஆகிய பேரூராட்சிப் பகுதிகளில் வாழும் மக்களுக்கும் இன்று முதல் குடிநீர் வழங்கப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து, இரண்டாம் கட்டமாக இத்திட்டத்தின் வழியோரப் பகுதிகளாகிய புதுக்கோட்டை மாவட்டத்தில் விராலிமலை, ஆலவயல்,

பொன்னமராவதி பகுதிகளைச் சேர்ந்த 32 குடியிருப்புகளுக்கும், சிவகங்கை மாவட்டத்தில் சிவகங்கை நகராட்சியுடன், திருப்பத்தூர், காளையார்கோவில், இளையான்குடி முதலிய பகுதிகளைச் சேர்ந்த 799 குடியிருப்புகளுக்கும் இராமநாதபுரம் மாவட்டத்தின் பல்வேறு ஊரகப் பகுதிகளுக்கும் விரைவில் குடிநீர் வழங்கப்பட உள்ளது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் அதிகாரிகளுக்கு ஆலோசனைகள் வழங்கி இத்திட்டத்தை நிறைவேற்றியுள்ளார்**

இத்திட்டப் பணிகளை அடிக்கடிப் பார்வையிட்டு, அதிகாரிகளுக்கு ஆலோசனைகள் வழங்கி, சிட்டெனப் பறந்து, ஊக்கப்படுத்தி இரண்டாண்டு காலத்திற்குள் நிறைவேற்றி முடித்துள்ள துணை முதலமைச்சர் தம்பி திரு. மு.க.ஸ்டாலின் அவர்களை மனமாரப் பாராட்டி, வாழ்த்துகின்றேன்.

இத்திட்டப் பணிகளை விரைந்து முடிப்பதில் தம்பி திரு. மு.க.ஸ்டாலின் அவர்களுக்குத் துணையாக நின்று அயராது பாடுபட்டு வெற்றி குவித்துள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் நிருவாக இயக்குநர் உள்ளிட்ட அனைத்து அதிகாரிகளையும், பணியாளர்களையும், ஒப்பந்ததாரர்களையும், இராமநாதபுர மாவட்ட நிருவாகத்தையும் உளமாரப் பாராட்டுகிறேன்.

இந்த இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் வாயிலாக இராமநாதபுரம் மாவட்ட மக்கள் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி பெற்று வளமாகவும், நலமாகவும் வாழ வேண்டுமென உளமார வாழ்த்துகிறேன்.

அத்துடன், ஏறத்தாழ 150 ஆண்டுகளுக்கு மேலாக வலியுறுத்தப்பட்டு – மத்தியில் ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசினால் 2 ஆயிரத்து 427 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அனுமதிக்கப்பட்டு தம்பி டி.ஆர். பாலு அவர்களுடைய முயற்சியால் ஏறத்தாழ 60 விழுக்காடு பணிகள் முடிவடைந்துள்ள நிலையில் சிலரது சூழ்ச்சிகளால் தடைபட்டுள்ள சேதுசமுத்திரத் திட்டப் பணிகள் மீண்டும் தொடங்கப்பட்டு, விரைந்து நிறைவேற்றப்பட வேண்டும். அதற்கான முயற்சிகளை இப்போது அமைந்துள்ள மத்திய புதிய அரசு மேற்கொள்ள வேண்டும், மேற்கொள்ளும் என்ற நம்பிக்கையை நான் தெரிவிக்கின்றேன்.

சேதுசமுத்திரத் திட்டத்தின் மூலம் இராமநாதபுரம் மாவட்டம் உள்பட தென்தமிழகம் முழுவதும் தொழில்கள் வளர்ச்சி பெறும்; வேலைவாய்ப்புகள் பெருகும்; மக்கள் வாழ்வில் சமூக, பொருளாதார நிலைகள் முன்னேற்றம் அடையும். எனவே, இந்த சேதுசமுத்திரத் திட்டத்தினை மத்தியில் மீண்டும் அமைந்துள்ள ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் துணையோடு விரைவில் நிறைவேற்றி முடிப்போம் என்று தெரிவித்துகொள்கிறேன்.

குடிநீர் மக்களுக்கு தடையின்றி கிடைக்க வேண்டும் என்பதற்காக தி.மு. கழக ஆட்சியிலே தான் 1971ஆம் ஆண்டு குடிநீர் வடிகால் வாரியம் தொடங்கப்பட்டது. குடிசை மாற்று வாரியம் போன்ற வாரியங்களும் அதே நேரத்தில் குடிநீர் வடிகால் வாரியமும் 1971ஆம் ஆண்டு தி.மு. கழக ஆட்சியிலே தொடங்கப்பட்டது.

இந்தியாவிலேயே தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தான் தலை சிறந்த வாரியமாகத் திகழ்கிறது என்று "ஹட்கோ" நிறுவனம் நற்சான்றிதழும், கேடயமும் வழங்கியிருக்கின்றது. குடிநீர்த் திட்டங்களை சிறப்பாகவும் தரக்கட்டுப்பாட்டுடனும் செயல்படுத்துவதில் தெற்காசியாவிலேயே சென்னை குடிநீர் வாரியம் தான் சிறந்த வாரியம் என்று உலக வங்கி சான்றிதழ் அளித்துள்ளது.

ஒரு புள்ளி விவரம் பாருங்கள்!

1995–96ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியிலே குடிநீர் வழங்கும் பணிகளுக்காக செலவிடப்பட்ட தொகை 213 கோடியே 82 இலட்சம் ரூபாய்.

2000–2001ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியிலே குடிநீர் வழங்கும் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகை 842 கோடி ரூபாய்.

இந்தப் புள்ளி விவரம் மூலமாகவே உங்களுக்குப் புரியும். எந்த அளவிற்கு தி.மு.கழக ஆட்சி மக்கள் பிரச்சினைகளிலே கவலை கொண்டுள்ளது என்ற உண்மை.

சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து 1996ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டில் அமைக்கப்பட்ட மேல்நிலை குடிநீர்த் தொட்டிகளின் எண்ணிக்கை 17,501.

1996 முதல் 2001 வரை தி.மு. கழக ஆட்சியில் 5 ஆண்டுகளில் மட்டும் அமைக்கப்பட்ட மேல்நிலை குடிநீர்த் தொட்டிகளின் எண்ணிக்கை 24,793.

**இந்த முயற்சி தமிழகம் எங்கும் பரவ வேண்டும்**

எனவே இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைத் தொடங்கிவைக்கும் இந்த விழாவில் கலந்து கொண்டுள்ள உங்கள் அனைவரையும் அன்போடும், நட்புணர்வோடும் வறண்ட பகுதியிலே வளத்தை உருவாக்குவதற்காக எடுத்துள்ள முயற்சிக்கு உறுதுணையாக இருக்கின்ற உங்களுடைய நல்ல எண்ணத்தோடு என்னுடைய எண்ணத்தையும் கலந்து – என்னுடைய மகிழ்ச்சியையும் கலந்து – இன்றைய தினம் இராமநாதபுரம் மாவட்டத்திலே நாம் தொடங்குகின்ற இந்த முயற்சி தமிழகம் முழுவதும் பரவிடவேண்டும். இராமநாதபுரம் விரைவிலே செழிப்படையும், வளம் அடையும் – அந்த வளத்தை தமிழகம் முழுவதும் பெறுவதற்கு முயற்சிப்போம் என்ற சூளுரையை இந்த விழாவிலே அனைவரும் ஏற்போமென்று கூறி இந்த முயற்சிக்கு வித்திட்டு – இதைச் செடியாக்கி, மரமாக்கி வளர்க்க ஒத்துழைத்த எல்லாப் பகுதியினருக்கும், அரசின் உயர் மட்டத்திலிருந்து அடி மட்டம் வரையிலே இருக்கின்ற அலுவலர் அனைவருக்கும், பொறியாளர்களுக்கும், குறிப்பாக முதலில் குறிப்பிட்டதைப் போல துணை முதலமைச்சர் தம்பி ஸ்டாலின் அவர்களுக்கும், உங்கள் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, இந்த வட்டாரம் வளம் பெற வேண்டும், செழிக்க வேண்டுமென்று அரும்பாடுபட்டுக் கொண்டிருக்கின்ற அருமைத் தம்பி சுப. தங்கவேலன் அவர்களின் முயற்சிக்கும் என்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்து இந்த அளவில் என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன்.

★ ★ ★

# ரூ.616 கோடியில் இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம்

இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்ட தொடக்க விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இராமநாதபுரம் காவல்துறை விளையாட்டு மைதானத்தில் 11.6.2009 அன்று நடைபெற்றது. விழாவில் கலந்துகொண்டு மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் ஆற்றிய உரை:

“இராமநாதபுரம் மாவட்ட மக்களின் கனவுத்திட்டமாக விளங்கிய ஒன்று, இன்றைய தினம் நினைவுத் திட்டமாக உருவாகி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சென்னையிலிருந்து மின் ஊடக தொலைத்தொடர்பு மூலமாக இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளார்கள். அதனைத் தொடர்ந்து திட்டத்தைப்பற்றியும், வரலாற்று நிகழ்ச்சி பற்றியும், திட்டம் எப்படி உருவாக்கப்பட்டது, எவ்வாறு நிறைவேற்றப்பட்டு மக்களிடையே கொண்டுவரப்பட்டது என்றெல்லாம் குடிசைமாற்று மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களும், அலுவலர்களும் எடுத்துரைத்தார்கள்.

**24ஆவது தீர்த்தம்**

குடிநீர்த்திட்ட தொடக்க விழா மட்டுமல்லாமல் நலத்திட்ட உதவிகளை வழங்கும் நிகழ்ச்சியும் இவ்விழாவில் இணைக்கப் பட்டுள்ளது. வருவாய்த் துறையின் சார்பாக 11,920 பயனாளிகளுக்கு ரூ.290 கோடி மதிப்பீட்டில் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள், இலவச எரிவாயு இணைப்பு மற்றும் அடுப்புகள், இலவச வீட்டு மனைப் பட்டாக்கள், நலிந்தோர் மற்றும் முதியோர் உதவித் தொகைகள், இலவச தேய்ப்புப்பெட்டிகள் ஆகியவை வழங்கப்பட





உள்ளன. டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டத்தின் கீழ் 1,880 பயனாளிகளுக்கு ரூ.1.09 கோடி உதவித்தொகை, வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின்கீழ் 14 கிராமங்களைச் சேர்ந்த பயனாளிகளுக்கு அமுதசுரபி நிதியாக ரூ.20.81 இலட்சம், ஊனமுற்றோர் மறுவாழ்வுத்துறையின் சார்பாக 25 பயனாளிகளுக்கு ரூ.81,000 மதிப்பீட்டில் இலவச மூன்று சக்கர சைக்கிள்கள், சுனாமி வீடு கட்டும் திட்டத்தின்கீழ் 146 பயனாளிகளுக்கு ரூ.4.21 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட வீடுகள், மகளிர் திட்டத்தின் கீழ் 589 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.4.37 கோடி சுழல் நிதி ஆகியன இந்த விழாவில் வழங்கப்பட உள்ளன.

இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்குதல் போன்றவை சேர்ந்து மொத்தம் ரூ.628.78 கோடி மதிப்பீட்டில் திட்டச் செயல்பாடுகளுடன் இந்த விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இராமநாதபுரம் மக்களுக்கான இந்த கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை தமிழக முதலமைச்சர் கொண்டு வந்து அவர்களின் தாகத்தை தீர்த்து வைத்துள்ளார்கள். இராமேஸ்வரத்தில் 23 தீர்த்தங்கள் உள்ளதாக ஆன்மீகவாதிகள் குறிப்பிடுவார்கள். 24ஆவது தீர்த்தமாக இந்த கூட்டுக் குடிநீர்த் திட்டம் உள்ளது. இந்தக் கூட்டுக் குடிநீர் திட்டம் 2006ஆம் ஆண்டு தீர்மானிக்கப்பட்டு ரூ.616 கோடியில் நிறைவேற்றப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதன்பின்னர் 30.01.2007இல் அதற்கான அடிக்கல் நாட்டு விழா பரமக்குடியில் நடைபெற்றது. தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையேற்று விழாவை நடத்தி வைத்தார்கள்.

விழாவில் அலுவலர்கள் பேசும்போது திட்டப்பணிகள் 3 ஆண்டு காலத்தில் நிறைவேற்றப்படும் என திட்டத்தின் அடிப்படையில் கூறினார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பேசுகையில் மூன்று

ஆண்டு காலம் என்பதைக் குறைத்து 2 ஆண்டில் நிறைவேற்றினால் இம்மாவட்ட மக்களின் தாகம் தீர்க்கப்பட்டு அவர்களுக்கு மகிழ்ச்சி ஏற்படுத்தும் வகையில் அதிகாரிகள் செயல்பட வேண்டுமென தெரிவித்தார். அதிகாரிகளும் வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்தின்கீழ் முதல்கட்டமாக இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள நகராட்சிகள், பேரூராட்சிகள் இன்று முதல் பயனடைய உள்ளன. 2ஆவது கட்டமாக மிக விரைவில் ஊரகப் பகுதிகளுக்கும் குடிநீர்



முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று நிறைவேற்றுகிறோம் என தெரிவித்தார்கள்.

**தமிழகத்திற்கு கிடைத்த பெருமை**

அதன்படி அவர்கள் பணியில் ஈடுபட்டு அதில் முன்னேற்றம் கண்டார்கள். 2 ஆண்டுகளில் இந்தத் திட்டப்பணிகளை முடித்த அலுவலர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். முதலமைச்சர் அவர்கள் அறிவித்தபடி அவர்களுக்கு பரிசுகளும் விரைவில் வழங்கப்பட உள்ளது. நாட்டில் உள்ள பெண்கள் தன்னம்பிக்கை பெற்றவர்களாக வாழ வேண்டும் என்பதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தருமபுரியில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் துவங்கப்பட்டது.

தற்போது சுயஉதவிக் குழுக்களுக்கு தொடர்ந்து சுழல்நிதிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்தக் குழுக்கள் சுய தொழில் தொடங்குவதற்காக தேவையான நிதியை வங்கிகளில் குறைந்த வட்டியில் பெற்று வருகின்றன. அதேபோன்று 99 சதவீதம் வங்கிக்கடனைத் திருப்பிச் செலுத்தும்



மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகத் திகழ்கிறது. இது தமிழகத்திற்குக் கிடைத்த பெருமையாக உள்ளது. இன்றைய தினம் தமிழ்நாட்டில் **3,91,311** சுயஉதவிக் குழுக்கள் உள்ளன. இவற்றில் **6,29,300** உறுப்பினர்கள் உள்ளனர். இவர்கள் ரூ.**2,062** கோடி சேமிப்பு நிதியாக வைத்துள்ளனர். இந்த ஆட்சி பொறுப்பேற்ற பின்னர் **96,527** சுய உதவிக் குழுக்களை புதிதாக உருவாக்கியுள்ளது. இந்தக்குழுக்களின் மூலம் பெண்களின் முன்னேற்றம் தொடர்ந்து வளர்ந்து வருகிறது.

இராமநாதபுரம் மாவட்ட மக்களின் தாகத்தைத் தீர்க்கும் வகையில் ரூ.**616** கோடியில் இத்திட்டத்தை அரசு அறிவித்தாலும், அதனை இரவு பகலாக உழைத்து நிறைவேற்றிய அரசுத்துறை அலுவலர்களுக்கு இம்மாவட்ட மக்களின் சார்பாகவும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சார்பாகவும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்''.

விழாவில் மாண்புமிகு குடிசைமாற்று வாரியம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாட்டுத்துறை அமைச்சர் திரு. சுப. தங்கவேலன், தலைமைச் செயலாளர் திரு. கே.எஸ். ஸ்ரீபதி, இ.ஆ.ப., நாடாளுமன்ற உறுப்பினர் திரு. ஜே.கே. ரித்தீஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கே.ஹசன் அலி, திரு. கே. முருகவேல், திரு. கே.வி.ஆர். இராம்பிரபு, மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் திரு. ஆ. ரவிச்சந்திரராமவன்னி, இராமநாதபுரம் நகர்மன்றத் தலைவர் திருமதி. லலிதகலா ரத்தினம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசுச் செயலாளர் டாக்டர். நிரஞ்சன்மார்டி, இ.ஆ.ப., வரவேற்புரையாற்றினார். தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. ஸ்வரன்சிங், இ.ஆ.ப., திட்ட விளக்க உரையாற்றினார். மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. இரா. வாசுகி, இ.ஆ.ப., நன்றியுரையாற்றினார்.

❖ ❖ ❖

# உலகளாவிய பொருளாதாரத்தில் நாடு முதன்மைபெற பல்கலைக்கழகங்கள் ஆராய்ச்சிக்கு முக்கியத்துவம் தர வேண்டும்!




1.8.2009 அன்று அண்ணா பல்கலைக்கழகம் வழங்கிய டாக்டர் பட்டத்தைப் பெற்று கொண்ட மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் ஆற்றிய நன்றியுரை:

மேதகு ஆளுநர் – அண்ணா பல்கலைக்கழகத்தின் வேந்தர் அவர்களே,

உயர்கல்வித்துறை அமைச்சர் – இணைவேந்தர் டாக்டர் க.பொன்முடி அவர்களே, அண்ணா பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் மன்னர் ஜவஹர் அவர்களே, பட்டமளிப்பு விழா உரை நிகழ்த்திய அண்ணா பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் டாக்டர் எம்.அனந்தகிருஷ்ணன் அவர்களே, சிறப்புரை ஆற்றிய தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்களே, மதிப்புறு முனைவர் பட்டம் பெற்றுள்ள வானியல் அறிவியல் அறிஞர் மயில்சாமி அண்ணாதுரை அவர்களே, இசைமேதை ஏ.ஆர். ரஹ்மான் அவர்களே, அண்ணா பல்கலைக்கழகத்தின் ஆட்சிமன்றக் குழு உறுப்பினர்களே, நிருவாகக் குழு உறுப்பினர்களே, பேராசிரியப் பெருமக்களே, மாணவச் செல்வங்களே, மத்திய, மாநில

அமைச்சர் பெருமக்களே, சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, நாடாளுமன்ற, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்களே, ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர்களே, பெரியோர்களே, நண்பர்களே! உங்கள் அனைவருக்கும் எனது அன்புகலந்த வணக்கம்!

## தொழில்நுட்பக் கல்வியில் அளப்பரிய சாதனை

காஞ்சி தந்த கலைச்செல்வர், கன்னித் தமிழகத்தைத் தட்டியெழுப்பிய காவலர், திராவிட இயக்கத்தின் தென்றல், செழித்த நாவாலும், சிறந்த பேனாவாலும் நானிலத்தில் எழுச்சியை ஏற்படுத்திய நாவலர் – பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டினையொட்டி, சிறப்புப் பட்டமளிப்பு விழா நடத்திட முன்வந்துள்ள அண்ணா பல்கலைக்கழகத்தின் இந்த நல்ல முயற்சியை வரவேற்றுப் பாராட்டி, வாழ்த்துகிறேன்!

இந்தியத் திருநாட்டு அளவில் மட்டும் என்றில்லாமல், உலக அளவிலும் மிக உன்னதமான உயர்தனிச் சிறப்பிடம் பெற்று இருக்கக்கூடிய இந்த அண்ணா பல்கலைக்கழகத்தில், இன்றைக்கு மதிப்புறு முனைவர் பட்டம் பெற்றதை எண்ணி மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

தொழில்நுட்பக் கல்வியில் அளப்பரிய சாதனைகளைப் படைத்திருக்கின்ற பல்கலைக்கழகம் இது. உலகத்திலே எந்த நாட்டிற்குச் சென்றாலும், அண்ணா பல்கலைக்கழகத்தாலே உருவாக்கப் பட்டவர்கள், "யாதும் ஊரே; யாவரும் கேளிர்" என்ற பழந்தமிழர் பண்பாட்டுப் பக்குவத்தைப் பாரெங்கும் பரப்பிடும் வகையில், மிகப்பெரிய பதவிகளிலே அமர்ந்து, அலங்கரித்துக் கொண்டிருக் கிறார்கள் என்பதைக் கண்டும், கேட்டும் நாம் அனைவரும் களிப்பேருவகை கொள்கிறோம்.

அண்ணா பல்கலைக்கழகம் இன்றைக்கு உலகத்தின் தொழில்நுட்ப சவால்களைச் சந்தித்து, சமாளித்து வெற்றி கொள்வதற்குச் சரியான யுக்திகளையும், சான்றாண்மை மிக்க வல்லுநர்களையும் உருவாக்கிக் கொண்டு வருகிறது என்ற உண்மையறிந்து, நாம் உள்ளபடியே இறும்பூதெய்துகிறோம்.

இப்படி அனைத்து வகைகளிலும், பாரினில் உள்ள கல்வியாளர்கள் வியந்து போற்றிடும் பரிமாணங்களைத் தன்னகத்தே கொண்டு பரிமளித்திடும் இந்த அண்ணா பல்கலைக்கழகத்தில் –

"கற்றுத் தேர்ந்த செந்தமிழும்
கவனம் பதிந்த ஆங்கிலமும்
உற்ற இரட்டை மொழியாக
உனது நாக்கில் வரும்போது,

தெற்குக் காவிரி ஊற்றெடுக்கும்;
தேம்சு நதிக்கரைக் காற்றடிக்கும்!
அண்ணா நீ ஒரு அற்புதம் – நீ
அனைவரும் படிக்கும் புத்தகம் !
அண்ணா நீ ஒரு கனிமரம் – உன்
ஆற்றலில் நிமிர்ந்தது தமிழினம் !"

–என்று கன்னல் தமிழ்க் கவியெடுத்து, நற்றமிழ் நாட்டினரால் நாளும் போற்றிப் பாராட்டப்படும் பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரால் இயங்கிக் கொண்டிருக்கும் இந்தப் பல்கலைக்கழகத்தில் –




பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் – என்று வாழையடி வாழையென வந்த திருத்தொண்டர் மரபினில், யானும் ஒருவன் என்ற முறையில்; நீங்கள் வழங்கியுள்ள இந்த "டாக்டர்" விருது, மேலும் மேலும் என்னை அடக்கமுடையவனாக ஆக்கட்டும் என்ற உறுதியினை உங்கள் முன்னிலையில் மேற்கொள்கின்றேன்!

எனது உழைப்பிலும், முயற்சியிலும் நான் மேலும் உற்சாகம் பெற்றிடவும்; நான் கொண்டிருக்கும் கொள்கைகளில் மேலும் பற்றினைப் பெருக்கிக் கொள்ளவும்; இந்தச் சிறப்பு எனக்குத் தரப்பட்டுள்ளதாகக் கருதி, இந்தப் பெருமையினை எனது பெற்றோ ருக்கும், எனது ரத்த நாளங்களில் என்றென்றும் கலந்திருக்கும் எனதரும் இளைய சமுதாயத்தினருக்கும் காணிக்கையாக்கி மகிழ்கின்றேன்!

**கல்வியின் பெருமை**

மதிப்புறு முனைவர் பட்டத்தினை எனக்கு அளித்திட முன்வந்துள்ள அண்ணா பல்கலைக்கழகத்தின் வேந்தர், இணைவேந்தர், துணை வேந்தர், ஆட்சிமன்றக் குழுவினர், நிருவாகக் குழுவினர் ஆகிய அனைவருக்கும் எனது இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்!

"கல்வி தறுகண் புகழ்மை கொடையெனச்
சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே"

என்று தொல்காப்பியத்தின் பொருளதி காரத்தில் – பெருமிதம் நான்கு வகைப்படும் என்றும்; அவற்றில், கல்வி ஒன்றென்றும் வகுத்து அறிவிக்கப் பட்டுள்ளது.

"உற்றுழி உதவியும் உறுபொருள்
கொடுத்தும்
பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே"

என்று கல்வி கற்பதற்கான வழியினை புறநானூறு சுட்டிக் காட்டியுள்ளது.

"அறிவுடையோனாறு அரசும் செல்லும்" – அதாவது, அறிவுடையோன் செல்லும் நெறியில் அரசனும் செல்வான் என்று கல்வியறிவு படைத்தவனின் மேன்மையினை புறநானூறு தெளிவுபடுத்தியிருக்கிறது.

“கண்ணுடையர் என்பவர் கற்றோர்”;
“சாந்துணையும் கல்லாதவாறு”
“கேடில் விழுச்செல்வம் கல்வி”

—என்று அய்யன் திருவள்ளுவர் கல்வியின்பெருமையை எடுத்துக் காட்டியுள்ளார்.

“கல்வி அழகே அழகு”;
“கல்வி கரையில”;
“கல்வி மம்மர் அறுக்கும் மருந்து”
“மலைவாழை அல்லவோ கல்வி”

—என்றெல்லாம் கல்வியின் அவசியமும், அருமையும் தமிழ் இலக்கியம் அனைத்திலும் அடிக் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன. அத்தகைய கல்வியை வழங்கிடும் இத்தகைய பல்கலைக்கழகம் ஆலயத்திற்கு ஈடாக வைத்துப் போற்றத்தக்கதாகும்.

கல்வி முறையும், அதன் கட்டமைப்பும் காலத்திற்கேற்றவாறு மாறிக்கொண்டே இருக்கிறது. “Nothing is constant in the world, but change” – உலகத்தில் மாற்றமில்லாதது என்று ஒன்று இருக்குமேயானால், அது மாற்றம் என்பது மட்டும்தான் – என்று கி.மு.475இல் கிரேக்க தத்துவப் பேராசிரியர் ஹெராக்லிட்டஸ் சொன்ன கருத்தும்;

“பழையன கழிதலும், புதியன புகுதலும்,
வழுவல; கால வகையினானே”

—என்று நன்னூல் வகுத்த இலக்கணமும், கல்விமுறைக்கு மிகவும் பொருந்தி வரக்கூடிய ஒன்றே!

பாட நூல்களைப் படித்து அறிந்து கொள்வதுதான் படிப்பு என்ற நிலை மாறி, எதிர்காலம் விடுக்க எண்ணியிருக்கும் வினாக்களைக் கண்டுணர்ந்து, விடைகாணக் கூடிய விவேகத்தை மாணவர்களிடம் உருவாக்குதல் என்ற நிலை கல்விமுறையில் வந்திருக்கிறது.

மாணவர்களுக்கு வேலை வாய்ப்பினை உருவாக்குவது என்பதையும் தாண்டி, எதிர்காலப் புதிர்களின் தன்மை அறிந்து, அவற்றை விடுவிப்பதில் வெற்றி அடைவது என்பதுதான் இன்றைய கல்வியின் நோக்கமாக உள்ளது. தொழில்நுட்பப் படிப்பு என்பது அதற்கு விதிவிலக்கல்ல.

தொழில்நுட்ப வளர்ச்சியினால், தகவல் தொழில்நுட்பத்தின் மூலமாக, மாணவர்களுக்கு, தொழில் அறிவு மற்றும் தொழில்திறன்களைக் கற்பித்தல் என்பது தற்போது விரிந்துப்பரவி வருகிறது. கற்பித்தல் என்பது ஆசிரியர்களை மையமாகக் கொண்டு நடைபெற்று வந்த முறை மாறி, மாணவர்களை மையமாகக் கொண்டு நடைபெற்று வருகிறது. ஆசிரியர்கள், கற்பிக்கும் முறைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களின் அடிப்படையில், கற்பித்தலுக்கான உத்திகளை, உருமாற்றம் செய்திடல் வேண்டும். தொழில்நுட்பப் பல்கலைக் கழகங்களில் இத்தகைய மாற்றங்கள் சீரிய வழியில் செயல்படுத்தப் பட்டால்தான், கல்வியின் தன்மையும், தரமும் உயரும். ஆசிரியர்கள், காலத்தின் தேவைகளை உள்வாங்கிக் கொண்டு, அவற்றிற்கேற்ப, கற்பிக்கும் முறைகளில் உரிய மாற்றங்களைப் புகுத்தினால்தான், எதிர்காலத்தில், புதுமையைப் படைத்திடும் கற்பனைச் செறிவும், திறனும் மிக்கவர்களாக மாணவர்கள்பரிணாம வளர்ச்சியினைப் பெற்று, உயர்வார்கள்.



## அறிவுசார் பொருளாதாரம்

உயர்கல்வி, ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் மிக முக்கிய பங்காற்றுகிறது என்பது, வரலாறு நமக்கு வடித்தெடுத்துப் புலப்படுத்திடும் உண்மை. தற்போது வளர்ச்சியடைந்த நாடுகள் அனைத்துமே, உயர்கல்வியில் மகோன்னத நிலையினை அடைந்த நாடுகள் என்பதை மறுப்பதற்கில்லை.

உயர்கல்வியின் மூலமாகத்தான், பொருளாதார வளர்ச்சி – வறுமை ஒழிப்பு மற்றும் மிகப்பெரிய அளவில் வேலைவாய்ப்பு ஆகியவற்றின் அடிப்படையில், சமூக மாற்றங்களை அடைந்திட முடியும் என்பதற்கு – வளர்ச்சியடைந்த நாடுகள் நமக்குப் பாடம் சொல்லும் பயனுள்ள எடுத்துக்காட்டுகள்.

21ஆம் நூற்றாண்டு, அறிவுசார் நூற்றாண்டு என அடையாளங்கண்டு அறிவிக்கப் பட்டிருக்கிறது. அதனடிப்படையில், உலகப் பொருளாதாரமே அறிவுசார் பொருளாதாரம்தான் என உணரப்பட்டுள்ளது. தகவல் தொடர்பு மற்றும் தொழில்நுட்பங்களில் ஏற்பட்டிருக்கும் புதிய கண்டுபிடிப்புகளும், மாற்றங்களும் உலக அளவில் மிகப்பெரிய தாக்கங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. இப்புதிய மாற்றங்களுக்கு ஏற்ப, தம்மை மாற்றிக் கொள்ளாத நாடுகள், வளர்ச்சியின் விளிம்பினைக்கூடத் தொட இயலாமல் தேங்கி நிற்பதையும்; காலத்தின் மாற்றத்திற்கு ஈடு கொடுத்திடும் வகையில், பல நாடுகளின் கல்வி, தகவல் தொழில் நுட்பம், உள்கட்டமைப்பு வசதிகள், ஆராய்ச்சிகள், புதுமைகளைக் கையாளும் யுக்தி இவற்றில் மாற்றம்கண்டு, நடை முறைப்படுத்திய நாடுகள், வளர்ச்சியின் சிகரத்தை நோக்கிச் செல்வதையும் நம்மால் காண முடிகின்றது; காரணத்தைக் கணப் பொழுதில் கணித்திடவும் முடிகின்றது.

கல்விமுறையில் மாற்றம், ஆராய்ச்சி, புதுமையான முயற்சிகள், தொழில் நுட்பம் இவற்றின் வளர்ச்சியில் பல்கலைக்கழகங்கள் மிகமுக்கிய பங்காற்றுகின்றன.

1947இல் இந்தியத் திருநாடு, விடுதலை அடைந்ததற்குப் பின்னர், உயர்கல்வி மிகப்பெரிய வளர்ச்சியைப் பெற்றிருக்கிறது. 1947இல் இருபதுக்கும் குறைவான பல்கலைக் கழகங்களே இருந்தன என்பதற்கு மாறாக,

இன்றைக்கு 450க்கும் மேல் பல்கலைக்கழகங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 1947இல் 500 கல்லூரிகளே என்பது, இன்று 24 ஆயிரத்துக்கும் மேல் என உயர்ந்துள்ளது. ஐ.ஐ.டி., ஐ.ஐ.எம்., போன்ற உலகத்தர வரிசையில் இடம்பெற்றுள்ள கல்வி நிறுவனங்கள் 1947க்குப் பிறகுதான் உருவாக்கப்பட்டன. பசுமைப்புரட்சியும், வெண்மைப்புரட்சியும், விண்வெளி ஆய்வில் முதன்மையும், அணுசக்தி அறிவியலிலும், தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியிலும் நாம் புரிந்திருக்கிற சாதனையும் – என இவ்வனைத் திற்குமே இந்திய உயர்கல்வி ஆற்றியிருக்கும் பங்கு மகத்தானது; மறக்கவொண்ணாதது. சில நாட்களுக்கு முன்னர், இந்தியப் பிரதமர் டாக்டர். மன்மோகன்சிங் அவர்கள், நாட்டுக்கு அர்ப்பணித்த, மிக நவீனமான நீர்மூழ்கிக் கப்பலின் கட்டுமானத்திலும் உயர்கல்வியின் பங்களிப்பு அளவிடற்கரியது; அனைவரையும் வியப்பில் ஆழ்த்துவது.

அறிவு வளர்ச்சியும், உன்னதமும் (excellence), ஆராய்ச்சிக்கு நேரடியாகத் தொடர்புடையவை. அந்த வகையில், ஆராய்ச்சியும், கற்பித்தலும் பல்கலைக் கழகத்தின் இரு கண்களாகும். நமது அறிவியல் அறிஞர் டாக்டர். சி.ஆர்.என்.ராவ் அவர்கள் ஒரு நிகழ்ச்சியில் பேசியபோது குறிப்பிட்டதை இங்கே நான் கவனப்படுத்த விழைகிறேன். “12 வருடங்களுக்கு முன்புவரை, உலகத்தின் அறிவியல் ஆராய்ச்சியில் – அறிவியல் ஆய்விதழ்களில் வெளியிடப்பட்ட கட்டுரைகளில் – 10 சதவீதம் வரை இந்தியாவின் பங்களிப்பு இருந்தது; ஆனால், இன்றைக்கு பங்களிப்பு இரண்டரை சதவீதமாகக் குறைந்துள்ளது. அதேநேரத்தில், சீனாவின் பங்களிப்பு 5 சதவீதத்தில் இருந்து 15 சதவீதமாக உயர்ந்துள்ளது”.

**21ஆம் நூற்றாண்டு, அறிவுசார் நூற்றாண்டு என அடையாளங்கண்டு அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதனடிப்படையில், உலகப் பொருளாதாரமே அறிவுசார் பொருளாதாரம்தான் என உணரப்பட்டுள்ளது. தகவல் தொடர்பு மற்றும் தொழில் நுட்பங்களில் ஏற்பட்டிருக்கும் புதிய கண்டுபிடிப்புகளும், மாற்றங்களும் உலக அளவில் மிகப்பெரிய தாக்கங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன.**

### அண்ணா பல்கலைக்கழகத்தின் அரிய சாதனை

ஆராய்ச்சி என்றாலே, அது பல்கலைக் கழகங்களைத்தான் குறிக்கும். உலகத்தின் எல்லா நாடுகளிலும், பல்கலைக்கழகங்கள் ஆராய்ச்சிக்கு முதன்மை இடம் கொடுத்து, பல்வேறு கண்டுபிடிப்புகளுக்கும் காரணமாய் இருக்கின்றன. இந்தியாவில் மட்டும் ஆராய்ச்சி என்பது, ஒருசில ஆராய்ச்சி நிறுவனங்களில் மட்டுமே நடைபெறும், அரிய நிகழ்வுகளாக அமைந்திருக் கின்றன. உலகளாவிய பொருளா தாரத்தில், இந்தியா முதன்மை நிலையை

அடையவேண்டுமானால், பல்கலைக் கழகங்கள் ஆராய்ச்சிக்கு முக்கியத் துவம் கொடுத்து, ஆராய்ச்சி முயற்சியை வளர்த்துப் பண்படுத்திடல் வேண்டும்.

அண்ணா பல்கலைக்கழகம் கற்பித்தலுக்கும், ஆராய்ச்சிக்கும் முக்கியத்துவம் கொடுத்து, பல்வேறு ஆராய்ச்சிகளை நடத்திக் கொண்டு வருவதை அனைவரும் அறிவர். 'அனுசாட்' என்ற செயற்கைக் கோளினைச் செய்து முடித்து, விண்வெளியில் செலுத்தியிருப்பது, அண்ணா பல்கலைக்கழகத்தின் அரிய சாதனை என்பதில் ஐயப்பாடில்லை. இன்னும் பல்வேறு வகைப்பட்ட ஆராய்ச்சிகளிலே ஈடுபட்டு, மேன்மேலும் சாதனைகள் பலவற்றைக் குவித்து – அறிஞர் அண்ணா அவர்கள் அரசியலிலும், சமுதாயச் சீர்திருத்தத்திலும் புதிய வரலாறு படைத்ததைப்போல – புதுமைச் சரித்திரம் படைத்திட வேண்டுமென்று இந்த இனிமையான நேரத்திலே, எனது இதயமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"University stands for humanism, for tolerance, for reaction, for the adventure of ideas and for the search of truth. It stands for the onward march of the human race towards even higher objectives" என்று பண்டிதநேரு அவர்கள் சொன்னதையும் கோடிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

"தமிழ் உமது முரசமாகட்டும்; பண்பாடு உமது கவசமாகட்டும்; அறிவு உமது படைக்கலனாகட்டும்; அறநெறி உமது வழித்துணையாகட்டும்; உறுதியுடன் செல்வீர்! ஊக்கமுடன் பணிபுரிவீர்! ஏற்றமிகு

**"உலகளாவிய பொருளாதாரத்தில், இந்தியா முதன்மை நிலையைஅடைய வேண்டுமானால், பல்கலைக் கழகங்கள் ஆராய்ச்சிக்கு முக்கியத் துவம் கொடுத்து, ஆராய்ச்சி முயற்சியை வளர்த்துப் பண்படுத்திடல் வேண்டும். அண்ணா பல்கலைக்கழகம் கற்பித்தலுக்கும், ஆராய்ச்சிக்கும் முக்கியத்துவம் கொடுத்து, பல்வேறு ஆராய்ச்சிகளை நடத்திக் கொண்டு வருவதை அனைவரும் அறிவர்".**

வெற்றியினை ஈட்டிடுவீர்! பாட்டு மொழியுடைய நமது தாயகம் வாழ, தரணிக்குத் துணை நின்றிடும் தகுதிபெற, சென்றிடுவீர்! வென்றிடுவீர்!" என்று 1967இல் மதுரை பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் அறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய எழுச்சி உரையினையும், இந்த நேரத்தில் நினைவுபடுத்தி, இந்த உயர் சிறப்பினையும், வாய்ப்பினையும் வழங்கிய உங்கள் அனைவருக்கும், எனது நெஞ்சில் பூத்த நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி, நான் விடைபெறுகிறேன்!

அண்ணா வாழ்க! அண்ணாவின் புகழ் என்றும் தழைத்திடுக! ❖

# தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக பாடுபட்ட இரட்டைமலை சீனிவாசன் திருவுருவச்சிலை – மணிமண்டபம்


சென்னை, காந்தி மண்டபத்தில்.
இரட்டைமலை சீனிவாசன் மணிமண்டபம் –
திருவுருவச் சிலை மற்றும்
ஏர்செல் நிறுவனம் மூலம்
காந்தி மண்டப வளாகத்தில் அழகுப்படுத்தப்பட்ட
பூங்காவைத் திறந்துவைத்து
மாண்புமிகு துணை முதலமைச்சர்
திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள்
ஆற்றிய உரை **(7.7.2009)**

"இரட்டைமலை சீனிவாசன் மணிமண்டபம் – திருவுருவச் சிலை மற்றும் ஏர்செல் நிறுவனம் மூலம் காந்தி மண்டப வளாகத்தில் அழகுப்படுத்தப்பட்ட பூங்கா திறப்பு விழா ஆகிய ஒருங்கிணைந்த இந்த சிறப்பான நிகழ்ச்சியில் உங்களுடன், என் உணர்வுகளைப் பகிர்ந்துக் கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இரட்டைமலை சீனிவாசன் அவர்கள் தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக



பல்வேறு போராட்டங்களையும், தியாகங்களையும் செய்தவர். தீண்டாமைக் கொடுமை தலைவிரித்தாடிய, சமூகக் கொடுமைகள் மக்களை சீரழித்துக் கொண்டிருந்த 19ஆம் நூற்றாண்டில் 1859ஆம் ஆண்டு காஞ்சிபுரம் மாவட்டம்–சோழியம் என்ற சின்னஞ்சிறு கிராமத்தில் பிறந்தவர்தான் இரட்டைமலை சீனிவாசன். இவருடைய தந்தையின் பெயர் இரட்டைமலை ஆகும். எனவே, இரட்டைமலை சீனிவாசன் என்று அழைக்கின்றோம். பள்ளியில் படிக்கின்ற காலத்திலேயே தீண்டாமைக் கொடுமைக்கு ஆளாகியவர். தீண்டாமை என்னும் கொடிய நோயைப்பற்றி நன்கு அறிந்தவர், புரிந்தவர். எனவே, தீண்டாமையினை ஒழிக்க தன் வாழ்நாள் முழுவதும் பல வகையிலும் பாடுபட்டவர். இரட்டைமலை சீனிவாசன் அவர்கள், 1900ஆம் ஆண்டு தென் ஆப்பிரிக்கா சென்றார். நீண்ட காலம் அங்கு தங்கியிருந்தார். அங்கே, காந்தியடிகளைச் சந்திக்கும் வாய்ப்பினைப் பெற்றார். காந்தியடிகளுக்குத் தமிழைக் கற்றுக் கொடுக்கக் கூடிய





வாய்ப்பினைப் பெற்றவர் இரட்டைமலை சீனிவாசன். காந்தியடிகள் தமிழில் கையெழுத்திடும் அளவிற்குத், தமிழைக் கற்றுக் கொடுத்தவர் என்பது நாம் எல்லாம் பெருமைப்படக் கூடிய போற்றக் கூடியது ஆகும். அதுமட்டும் அல்ல, காந்தியடிகளுக்கு திருக்குறளையும் கற்றுக் கொடுத்தார் என்பது வரலாறு நமக்கு அளிக்கும் செய்தியாகும்.

1926ஆம் ஆண்டு ராவ்சாஹிப் பட்டமும், 1933இல் ராவ்பகதூர் பட்டமும், 1936இல் திவான்பகதூர் பட்டமும் பெற்ற பெருமைக்குரியவர் இரட்டைமலை சீனிவாசன். தாழ்த்தப்பட்ட மக்களுக்காக காலமெல்லாம் போராடிய இரட்டைமலை சீனிவாசன் அவர்கள் தனது 85ஆவது வயதில் 18.9.1945ஆம் ஆண்டு இயற்கை எய்தினார். தனது வாழ்நாள் முழுவதும் தாழ்த்தப்பட்டவர்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் தொண்டினைப் போற்றும் வகையில், தலைவர் கலைஞர் அவர்கள் காந்தி மண்டப வளாகத்தில் ரூ.21 இலட்சம் செலவில் மணிமண்டபத்தினை அமைத்திருக் கின்றார்கள். அவருடைய மணிமண்டபத்தில் அவரது திருவுருவச் சிலையினையும் அமைத்து இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் புகழுக்கு மேலும் பெருமை சேர்த்துள்ளார் தலைவர் கலைஞர். அது மட்டும் அல்ல தமிழகத்தில் எப்பொழுதெல்லாம் தலைவர் கலைஞர் அவர்களின் ஆட்சி அமைகின்றதோ, அப்போதெல்லாம் தமிழக வரலாற்றில் நின்று நிலைக்கக் கூடிய பல்வேறு நினைவகங்களை, மணிமண்டபங்களை அமைத்திருக்கின்றார்கள். தலைவர் கலைஞர் அவர்களால் தமிழகத்தில் விடுதலைப் போராட்டத் தியாகிகள் ஆனாலும், மொழிப்போர் தியாகிகள் ஆனாலும் அனைவருக்கும் நினைவகங்களையும், மணிமண்டபங்களையும் அமைத்த பெருமை தலைவர் கலைஞர் அவர்களுக்கே உண்டு.

கொடிகாத்த குமரனுக்கு திருப்பூரில் நினைவகம், ஈரோட்டில் பகுத்தறிவுத் தந்தை பெரியார்–பேரறிஞர் அண்ணா ஆகியோருக்கு நினைவகம், மூதறிஞர் இராஜாஜி பிறந்த இல்லம் நினைவகமாக்கப்பட்டது. கவியரசு கண்ணதாசன் மணிமண்டபம், மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர் மணிமண்டபம், விருதுநகரில் பெருந்தலைவர் காமராசர் நூற்றாண்டு மணிமண்டபம், எட்டயபுரத்தில் மகாகவி பாரதியார் மணிமண்டபம், கன்னியாகுமரியில் காந்தி நினைவு மண்டபம், கண்ணியமிக்க காயிதே மில்லத் அவர்களுக்கு மணிமண்டபம், டாக்டர் அம்பேத்கர் மணிமண்டபம், இப்படி சமுதாயத்திற்காகவும், இனத்திற்காகவும், மொழிக்காகவும், நாட்டிற்காகவும், போராடிய பெருமைக்குரியவர்களுக்கு எல்லாம் சிறப்பு செய்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். தொடர்ந்து தனது கடமையை நிறைவேற்றிவருபவர் கலைஞர் அவர்கள்.

ஆதிதிராவிடர் சமுதாய மக்களின் முன்னேற்றத்திற்காக தனது வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தவரும், அண்ணல் அம்பேத்கர் அவர்களுக்குத் துணை நின்று பெருமை சேர்த்தவருமான இரட்டைமலை சீனிவாசன் அவர்களுக்கு மேலும், பெருமை சேர்த்திடும் வகையில் இன்று இந்த மணிமண்டபமும், அவரது திருவுருவச் சிலையும் திறந்து வைக்கப்பட்டுள்ளது. எந்த உணர்வோடு அவர் போராடினாரோ, நாம் ஒவ்வொருவரும் அந்த உணர்வைப் பெற்றாக வேண்டும். அந்த உணர்வுடன் நாம் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட இந்த நாளில் உறுதி எடுக்க வேண்டும்.''

இந்நிகழ்ச்சிக்கு மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் தலைமை வகித்தார். நிகழ்ச்சியில் வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் திரு. மா. சுப்ரமணியன், சட்டமன்ற உறுப்பினர் திரு. து. ரவிக்குமார், இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் கொள்ளுப் பெயர்த்தி திருமதி. நிர்மலா அருள்பிரகாஷ், ஏர்செல் செயல் முறை இயக்குநர் திரு. பாஸ்கரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். செய்தித்துறைச் செயலர் திரு. க. முத்துசாமி, இ.ஆ.ப., வரவேற்புரை ஆற்றினார். நிறைவாக செய்தித்துறை இயக்குநர் திரு. சி. காமராஜ், இ.ஆ.ப., நன்றியுரை ஆற்றினார்.

★

# 30 தொழில் திட்டங்கள் மூலமாக 38,700 கோடி ரூபாய் முதலீட்டில் 2,07,000 பேருக்கு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படவுள்ளன



தொழில் கூட்டமைப்புகளின் ஆலோசனைக் கூட்டத்தில்
மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
13.6.2009 அன்று ஆற்றிய உரை :

கடந்த 29.5.2009 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தமிழகத்தின் துணை முதல்வர் பொறுப்பை எனக்கு அளித்து, தொழில் துறையை நிருவகிக்கும் பணியையும் இணைத்து வழங்கியுள்ளார்கள்.

கடந்த 5.5.2008ஆம் தேதியன்று 2008–2009 ஆம் ஆண்டிற்கான தொழில் துறை மானியக் கோரிக்கையைத் தயாரித்து, தொழில் வளர்ச்சி தொடர்பான தமிழக அரசின் கொள்கை விளக்கக் குறிப்பினை தமிழக சட்டமன்றத்தில் தாக்கல் செய்து, விளக்க உரையாற்றும் வாய்ப்பை தமிழக முதலமைச்சர் அவர்கள் எனக்கு வழங்கியதை இந்த நேரத்தில் நினைவு கூறுகிறேன்.

அது மட்டுமல்ல, இந்தியத் தொழில் கூட்டமைப்பின் தமிழ்நாடு மன்றத்தின் சார்பாக கடந்த 17.9.2007 அன்று சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில், கனெக்ட் 2007 என்ற தேசிய அளவிலான கருத்தரங்கம் நடைபெற்றது.

இந்தக் கருத்தரங்கில் பங்கேற்று, தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சிக்காக தமிழக அரசு மேற்கொண்டு வரும் திட்டங்களையும், தமிழகத்தின் வளர்ச்சியில் தொழில் நிறுவனங்களின் பொறுப்பு குறித்தும் உரையாற்றும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது.

தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், இந்நிகழ்ச்சியில் சிறப்புரை ஆற்றினார். இந்தியாவிலுள்ள தலைசிறந்த மென்பொருள் மற்றும் தகவல் தொடர்பு நிறுவனங்களின் தலைவர்கள் இம்மாநாட்டில் பங்கேற்றனர்.

**மண்டல அளவில் ஆலோசனைக் கூட்டங்கள்**

அதேபோல், 12.4.2008 அன்று சென்னையில் இந்தியத் தொழில் கூட்டமைப்பு சார்பாக ஏற்பாடு செய்யப்பட்ட தமிழ்நாடு விஷன் மாநாடு – 2008லும் கலந்து கொண்டு, தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சிக்காக மேற்கொள்ள வேண்டிய செயல் திட்டங்கள் தொடர்பாக தொழில் துறையினர் தெரிவித்த கருத்துக்களை அறிந்து, தொழில் துறையினர் மத்தியில் தமிழக அரசின் தொழிற் கொள்கை குறித்து உரையாற்றுகின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

தமிழக தொழில் துறை அமைச்சர் என்கின்ற பொறுப்பினை ஏற்றுக்கொண்டுள்ள நிலையில், தொழில் துறையில் தமிழ்நாடு முன்னணியில் இருப்பதற்கு பெரும் பங்காற்றி வரும் உங்களைச் சந்திப்பதும், தமிழகத்தில் தொழில் துறையில் தற்போதைய நிலை குறித்து உங்களிடமிருந்து அறிந்து கொள்வதும், தொழில் துறை மானிய கோரிக்கை தொடர்பாக தொழில் நிறுவனங்களின் தலைவர்கள், பிரதிநிதிகள் மற்றும் தொழில் கூட்டமைப்பின் நிருவாகிகள் ஆகிய உங்களது கருத்துக்களை பெறுவதும், தேவையான ஒன்று ஆகும் என்ற அடிப்படையில் இந்த ஆலோசனைக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இத்தகைய ஆலோசனைக் கூட்டங்கள் இனி மாநில அளவிலும், மண்டல அளவிலும் தொடர்ந்து நடைபெற ஆவன செய்யப்படும் என்பதையும் இங்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தொழில் துறை தொடர்பாக ஒரு சில முக்கியமான கருத்துக்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

அமெரிக்க நாட்டில் தொடங்கிய பொருளாதார வீழ்ச்சி தற்போது உலக அளவிலும் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

ஏறத்தாழ 1929 ஆம் ஆண்டு உலக அளவில் ஏற்பட்ட பெரிய பொருளாதார வீழ்ச்சியைப் போன்ற ஒரு நிலை தற்போது பல நாடுகளில்

தோன்றியுள்ளது என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

வளர்ச்சி அடைந்த நாடுகளான அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டுள்ள பொருளாதாரத் தேக்கநிலை காரணமாக அந்நாடுகளில் உள்ள மக்களின் வாங்கும் சக்தி பாதிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக, இந்நாடுகளுக்கு பெருமளவில் ஏற்றுமதி செய்கின்ற நமது நாடும் பாதிப்புக்கு ஆளாகியுள்ளது.

தமிழ்நாடு அதிக அளவில் ஏற்றுமதி வாய்ப்பினைக் கொண்ட மாநிலம் என்பது அனைவரும் அறிந்த ஒன்றாகும்.

**முதலீடுகளுக்கு உகந்த மாநிலம்**

உலகளாவிய பொருளாதார நெருக்கடியின் காரணத்தால் தமிழ்நாட்டின் முக்கிய ஏற்றுமதித் தொழில்களாகிய ஜவுளி, தோல், மோட்டார் வாகனங்கள், மோட்டார் வாகன உதிரிப் பொருட்கள் போன்ற தொழில்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பதை மறுக்க இயலாது.

தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் சீரிய தலைமையில் இயங்குகின்ற இந்த அரசு உலகப் பொருளாதார பின்னடைவால் ஏற்பட்டுள்ள சவாலை திறம்பட எதிர்கொண்டு வருகிறது.

உலகப் பொருளாதாரப் பின்னடைவு ஓரளவுக்கு நம்மை பாதித்துள்ள போதிலும், முதலீடுகளுக்கு உகந்த மாநிலமாக தமிழ்நாடு தொடர்ந்து இருந்து வருகிறது.

13ஆவது மத்திய நிதி ஆணையத்தின் தலைவர் டாக்டர். விஜய் கெல்கர் அவர்கள் கடந்த 4.6.2009 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்களை சந்தித்தபோது இந்திய நாட்டில் சிறந்த வளர்ச்சி மற்றும் செயல்திறன் மிக்க மாநிலங்களில் ஒன்றாக தமிழ்நாடு விளங்குகிறது என்றும், இந்த சிறந்த சாதனைக்காக தான் தமிழக அரசை பாராட்டுவதாகவும் தெரிவித்துள்ளார் என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

இம்மாநிலத்தில் தொழில் திட்டங்கள் அமைப்பதற்காக தமிழக அரசு கடந்த மூன்றாண்டுகளில் மட்டும் 22 புரிந்துணர்வு ஒப்பந்தங்களை ஏற்படுத்தி உள்ளது என்பதை தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இதுதவிர, தனியாக 8 தொழில் திட்டங்களுக்கு அமைப்பு முறையிலான தொகுப்புச் சலுகை வழங்கிடவும் அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த 30 தொழில் திட்டங்கள் மூலமாக தமிழகத்தில் சுமார் 38,700 கோடி ரூபாய் மொத்த முதலீடு செய்யப்படுவதுடன் 2,07,000 பேர்களுக்கும் மேலாக வேலைவாய்ப்புக்களும் உருவாக்கப்படவுள்ளன.

இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையம் (Centre for Monitoring Indian Economy) அளித்துள்ள தகவல்களின்படி, 2009ஆம் ஆண்டு மார்ச் திங்கள் முடிய இம்மாநிலத்தில் செய்யக் கருதப்பட்ட மொத்த முதலீடு சுமார் 1,68,000 கோடி ரூபாய் அளவிற்கு அதிகரித்ததுடன் கடந்த ஆண்டை ஒப்பிட்டுப் பார்க்கும்போது 41 சதவீதம் அதிகரித்துள்ளது.

தொழில் துறையினருடன் நீண்டகால உறவை ஏற்படுத்திக் கொள்ள அரசு விரும்புகிறது.

தொழில் திட்டங்கள் உருவாக்கப்பட்டு, செயலாக்கம் தொடங்கப்படுவதோடு அரசின் அக்கறை முடிவடைவதில்லை. தொழில்

திட்டங்களின் தொடர் செயல்பாடுகளுக்கு உறுதுணையாக நிற்கவும் அரசு விரும்புகிறது.

அங்கும் இங்குமாக சில நிறுவனங்களில் தொழில் அமைதிக்கு பாதகமான சூழ்நிலை ஏற்படலாம். இவற்றையெல்லாம் தமிழக அரசு நன்கு அறிந்துள்ளது.

இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்ய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

தமிழகத்தில் உள்ள தொழில்கள் எதிர்கொண்டு வரும் பல்வேறு பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டிய அவசியம் உள்ளது என்பதையும் நான் அறிவேன்.

இம்மாநிலத்தில் வர்த்தகம் செய்வதற்கான சாதகமான சூழ்நிலையை மேம்படுத்த வேண்டியுள்ளது.

2008 – 2009ஆம் ஆண்டுக்கான தொழில் துறை மானியக் கோரிக்கையின்போது ஒற்றைச் சாளர அடிப்படையில் அனுமதிகளை வழங்குவதற்காக ஒரு சட்டம் இயற்றப்படும் என அறிவிக்கப்பட்டது.

**ஒற்றைச் சாளர முறை அமைப்பை உருவாக்க சட்ட முன்வடிவு**

சட்டமன்றப் பேரவையின் வரும் கூட்டத் தொடரில் புதிய தொழிற்சாலைகள் தொடங்கிட தேவையான அனுமதிகளை விரைவாக வழங்கிட வகைசெய்யும் ஒற்றைச் சாளர முறை அமைப்பை உருவாக்கும் வகையில் சட்ட முன்வடிவு ஒன்று கொண்டுவரப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் இங்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

மின்சார வெட்டு இல்லாத மாநிலமாக தமிழ்நாட்டை மீண்டும் நிலைநாட்ட தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் தமிழக அரசு முனைப்போடு மேற்கொண்டு வருகிறது.

தன்பயன் மின் உற்பத்தி ஆலைகளிலிருந்து 135 மெகாவாட் மின்சாரத்தை நேரடியாக வாங்கியுள்ளதுடன், உடனடித் தேவைக்காக, 500 மெகாவாட் மின்சாரத்தை ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் வாங்குவதற்கான நடவடிக்கைகளை தமிழ்நாடு மின்சார வாரியம் எடுத்து வருகிறது.

கூடங்குளம் அணுமின் திட்டம், தேசிய அனல் மின் நிறுவனம் (National Thermal Power Corporation) மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் வள்ளூர் கூட்டுத்திட்டம், வடசென்னை அனல் மின் திட்டம் மற்றும் இதர திட்டங்கள் மூலமாக 2010–2011ஆம் ஆண்டுக்குள் 2,100 மெகாவாட் கூடுதல் மின்சாரம் கிடைக்கும்.

இதில், இந்த நிதியாண்டுக்குள் சுமார் 1,000 மெகாவாட் மின்சாரம் கிடைக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

செயலாக்கத்தில் உள்ள மின் திட்டங்களின் மூலம் கிடைக்கும் மின் உற்பத்தியை மேம்படுத்தும் திட்டங்கள் மூலமாக, அடுத்த ஐந்தாண்டு காலத்தில் 6,000 மெகாவாட் கூடுதல் மின்சாரம் கிடைக்கும்.

இடைப்பட்ட காலத்தில் ஏற்பட்டுள்ள தற்காலிக மின் பற்றாக்குறையைச் சமாளித்திட அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு நீங்கள் அளித்து வரும் ஒத்துழைப்பிற்கு எனது நன்றியை இத்தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

## பாரம்பரியத் தொழில்களுக்கு ஊக்கம்

தோல் தொழில் இம்மாநிலத்தின் பாரம்பரியமான தொழிலாகும். இத் தொழிலில், இந்தியாவின் உற்பத்தியில் தமிழகத்தின் பங்கு 60 சதவீதம் ஆகும். இந்திய ஏற்றுமதியில் தமிழகத்தின் பங்கு 36 சதவீதம் ஆகும். தோல் தொழில், இம்மாநிலத்தில் சுமார் ஐந்து இலட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பளித்துள்ளது.

அண்மைக் காலத்தில், மாசுக் கட்டுப்பாட்டு வாரிய விதிமுறைகளுக்கு ஏற்ப, பூஜ்ஜிய அளவில் தோல் கழிவுகளை சுத்திகரிக்க வேண்டிய பொறுப்பு இத்தொழிலுக்கு ஏற்பட்டுள்ளது. இதனால் பெரிய அளவிலான மூலதனச் செலவினை இத்தொழில்கள் ஏற்க வேண்டியுள்ளது.

மாநிலத்திலுள்ள தோல் தொழில்களின் தேவைகளுக்காக 6 பொது கழிவு சுத்திகரிப்பு ஆலைகளை அமைக்கும் பொருட்டு அவற்றுக்கான திட்டச் செலவில் 15 சதவீதத்தை 25 கோடி ரூபாய் உச்சவரம்புக்கு உட்பட்டு அளிக்க அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. இது தவிர, திட்டச் செலவில் 50 சதவீதத்தை இந்திய அரசு ஏற்பதற்கான ஒப்புதலையும் அரசு பெற்றுத் தந்துள்ளது.

மேலும், இந்திய அரசின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்ற காலணி வடிவமைப்பு மற்றும் வளர்ச்சி நிலையம் மூலமாக தோல் தொழில்நுட்பம், வடிவமைப்பு போன்றவற்றில் பயிற்சி அளிப்பதற்காக சென்னைக்கு அருகில் பயிற்சி மையம் ஒன்றினை அமைப்பதற்கு இவ்வரசு 15 ஏக்கர் நிலத்தை இலவசமாகக் கொடுத்துள்ளது.

இம்மாநிலத்தின் மற்றொரு பாரம்பரியம் மிக்க தொழில் ஜவுளித் தொழிலாகும். ஜவுளித் தொழில், 20 இலட்சம் பேர்களுக்கும் மேலாக வேலைவாய்ப்பு அளிக்கிறது.

இத்தொழிலில், இழைத் தயாரிப்பிலிருந்து உள்ளாடை மற்றும் ஆயத்த ஆடைகள் வரை தயாரிப்பதற்கு, சங்கிலித் தொடரான வசதிகளை ஒருங்கே பெற்றிருக்கும் மாநிலம் தமிழகமாகும்.

கழிவுப் பொருட்களை சுத்திகரிப்பதற்கான விதிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டியுள்ளதால் ஜவுளித் தொழில் கூடுதல் மூலதனச் செலவுகளை சந்தித்து வருகிறது.

தோல் தொழிலைப் போன்றே, இத்தொழிலுக்கும் பொது கழிவு சுத்திகரிப்பாலைகள் அமைத்துத் தருவதற்காக மொத்த மூலதனச் செலவாக 750 கோடி ரூபாய் நிதி உதவி அளிக்குமாறு இவ்வரசு மத்திய அரசுக்கு செயற்குறிப்பு ஒன்றினை அனுப்பியுள்ளது.

மேலும், கழிவுகளைக் கடலில் கலப்பதற்கான திட்டம் ஒன்றை 800 கோடி ரூபாய் மூலதனச் செலவில் செயல்படுத்த தேவையான அனைத்து உதவிகளையும் வழங்கிட அரசு தயாராக உள்ளது.

சுத்திகரிப்புத் திட்டங்களுக்கு தகுந்த நிதி உதவி அளிக்குமாறு இம்மாதம் 4 மற்றும் 5ஆம் தேதியில் சென்னைக்கு வருகை தந்த 13ஆவது மத்திய நிதி ஆணையத்திடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

தொழில் வளர்ச்சிக்காக தற்போதுள்ள உட்கட்டமைப்புகளைத் தொடர்ந்து மேம்படுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்பதை அரசு நன்கு உணர்ந்துள்ளது.

திருப்பெரும்புதூர் தொழில் பகுதியில் அமைந்துள்ள தொழில்களுக்கு சாலை இணைப்புகளை மேம்படுத்துவதற்காக, திருப்பெரும்புதூர் – சிங்கபெருமாள்கோவில் மற்றும் வண்டலூர் – வாலாஜாபாத் ஆகிய தொழில் பகுதிகளில் 58 கிலோ மீட்டர் தூரத்திற்கு 215 கோடி ரூபாய் செலவில் சாலை அகலப்படுத்தும் திட்டத்தை அரசு நிறைவேற்றி வருகிறது.

மத்திய கைலாஷ் முதல் சிறுசேரி வரை ஆறுவழி கொண்ட தகவல் தொழில்நுட்ப பெருவழிச்சாலை அமைக்கும் பணி நிறைவேற்றப்பட்டு, சிறுசேரி முதல் மாமல்லபுரம் வரையிலான சாலையை அகலப்படுத்தி ஆறு வழிச் சாலையாக அமைக்கும் பணியை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று, துறைமுகத் தொடர்புக்காக, சென்னையிலிருந்து எண்ணூர் துறைமுகம் வரை 30 கிலோ மீட்டர் சாலையை மேம்படுத்தும் திட்டத்தையும், திருநெல்வேலியிலிருந்து தூத்துக்குடி வரை உள்ள 47 கிலோ மீட்டர் சாலையை மேம்படுத்தும் திட்டத்தையும் செயல்படுத்த, தேசிய நெடுஞ்சாலை அதிகாரக் குழுமம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

**நம் மக்களுக்கு வேலைவாய்ப்பு**

மதுரவாயல் முதல் சென்னை துறைமுகம் வரை சரக்குப் போக்குவரத்துக்கான மேம்பாலச் சாலை அமைப்பதற்கான திட்டம், மாநில மற்றும் மத்திய அரசின் கூட்டுமுயற்சியில் செயலாக்கப் பட்டு வருகிறது.

இந்த வளர்ச்சிப்போக்கினைத் தொடர்ந்து தக்க வைத்துக் கொள்ள வேண்டியது நம் அனைவரின் தலையாய பொறுப்பாகும்.

இந்த வளர்ச்சி மேலும் தொடர்ந்து, இனி வரும் காலங்களிலும் நீடித்திட வேண்டும் என்பதே நம் அனைவரின் எதிர்பார்ப்பும், இலட்சியமும் ஆகும்.

அதற்காக தமிழக அரசு, தொழில் துறையின் நியாயமான கோரிக்கைகளை ஏற்று அனைத்து ஆதரவையும் தொடர்ந்து நல்கிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நம் மக்களுக்கு அதிக எண்ணிக்கையில் வேலைவாய்ப்பு அளித்தல் மற்றும் தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும், குறிப்பாக தென் மாவட்டங்களில் தொழில்களைப் பரவலாக அமைத்தல் போன்ற அரசின் முக்கிய குறிக்கோள்களை விரைவாக அடைவதற்கு உங்களுடைய ஆலோசனைகளைக் கோருகிறேன்.

தமிழ்நாட்டிலுள்ள சிறந்த மனித ஆற்றல், தொழில்நுட்பத் திறன், தொழிலாளர் நல்லுறவு, முதலீட்டாளர் நேயமிக்க தொழில் கொள்கை ஆகியவற்றை முழுவீச்சில் பயன்படுத்தி தொழில் முதலீடு மற்றும் தொழில் வளர்ச்சியில் தமிழகம் முதலிடத்தை அடைவதற்கு, மேற்கொண்டு என்னென்ன நடவடிக்கைகளை எடுக்கலாம் என்பது குறித்து ஆக்கபூர்வமான பரிந்துரைகளை அளித்திடுமாறு உங்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். ★

# 5ஆவது கட்டமாக ரூ.500 கோடி நிதி ஒதுக்கீட்டில் 25 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்படவுள்ளன

சென்னையில் 8.7.2009 அன்று நடைபெற்ற இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றியதாவது:

சென்னை நகரில் ஏறத்தாழ 60 ஆயிரம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்குகின்ற பணி 9.7.2009 அன்று முதல் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இந்த இனிய விழாவில் உங்களை சந்திப்பதில் பெருமகிழ்ச்சி யடைகிறேன். 2006ஆம் ஆண்டு நடைபெற்ற பொது தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வெளியிடப்பட்ட தேர்தல் அறிக்கையில் பல்வேறு வாக்குறுதிகள், உறுதிமொழிகள் மக்களுக்கு அளிக்கப்பட்டன. தேர்தலின் போது மக்களுக்கு வழங்கப்பட்ட பல்வேறு உறுதிமொழிகள் நிறைவேற்றப் பட்டுள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்ட ரூ.2க்கு ஒரு கிலோ அரிசி, 7 ஆயிரம் கோடி ரூபாய் விவசாயக் கடன் தள்ளுபடி, சத்துணவில் வாரத்திற்கு இரண்டு முறை முட்டை ஆகிய வாக்குறுதிகள் கலைஞர் அவர்களால் பதவி ஏற்ற அன்றே கோட்டைக்குக் கூட செல்லாமல், விழா மேடையிலேயே நிறைவேற்றப்பட்டன. அது மட்டுமல்ல; 2 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி என்பதை தற்போது ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசியும், சத்துணவில் வாரத்திற்கு மூன்று முட்டைகளையும் வழங்கி வருகிறார் தலைவர் கலைஞர்.

**அனைத்து உறுதிமொழிகளும் நிறைவேற்றப்பட்டுள்ளன**


அதுபோல ஏழைப் பெண்கள் திருமண உதவித் திட்டத்தின் கீழ் ரூ.20 ஆயிரம் நிதி உதவி, கர்ப்பிணிப் பெண்களுக்கு ரூ.6 ஆயிரம் நிதி உதவி என்று அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றித் தந்துள்ளார் தலைவர் கலைஞர். தேர்தல் நேரத்தில் தலைவர் கலைஞர் இலவச வண்ணத் தொலைக்காட்சி இல்லாத அனைவருக்கும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்படும் என்று அறிவித்தார். ஆனால் எதிர்க்கட்சியினர்



வழங்கமுடியாது, தரமுடியாது, சாத்தியப்படாது, கலைஞர் மக்களை ஏமாற்றுகிறார் என்று கூறினார்கள். ஆனால், தலைவர் கலைஞர் அவர்கள் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்குகின்ற இந்தத் திட்டத்தினை படிப்படியாக நிறைவேற்றி வருகிறார். இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் இல்லாத அனைவருக்கும் தொலைக்காட்சிப் பெட்டிகள் நிச்சயமாக வழங்கப்படும். இலவச டி.வி.க்கள் வழங்குவதில் நிதி ஒரு பிரச்சினை இல்லை. வேறு எந்த இடையூறும் இல்லை. நமக்கு தேவைப்படும் அளவிற்கு டி.வி. உடனடியாக கிடைப்பதில் தான் தாமதம். ஒரே நேரத்தில் நமக்குத் தேவைப்படும் ஒரு கோடி அல்லது இரண்டு கோடி டி.வி.க்களை பெறமுடியவில்லை. கலர் டி.வி.க்களை நாம் பல்வேறு மாநிலங்கள் மற்றும் நாடுகளிலிருந்து டெண்டர் முறையில் கொள்முதல் செய்து வருகிறோம். டி.வி. தயாரிப்பு நிறுவனங்களால் ஒரே நேரத்தில் நமக்குத் தேவைப்படும் அளவிற்கான டி.வி.க்களை தயாரித்து வழங்க முடியவில்லை. அவர்கள் படிப்படியாக வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். தயாரிக்கப்பட்ட டி.வி.க்கள் கிடைக்க, கிடைக்க அதனை மக்களுக்குப் பகிர்ந்து வழங்கி வருகிறோம். ஏறத்தாழ 60 முதல் 65 சதவீத பேர்களுக்கு இலவச டி.வி.க்கள் வழங்கப்பட்டுள்ளன.

2006ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் முதல் கட்டமாக 30 ஆயிரம் கலர் டி.வி.க்கள் ரூ.9 கோடி செலவில் வழங்கப்பட்டன. 2007ஆம் ஆண்டு 25 இலட்சம் கலர் டி.வி.க்கள் ரூ.685 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளன. மூன்றாம் கட்டமாக 2007–2008ஆம் ஆண்டில் 37.50 இலட்சம் கலர் டி.வி.க்கள் ரூ.823 கோடியே 87 இலட்சத்து 50 ஆயிரம் செலவில் வழங்கப்பட்டன. நான்காம் கட்டமாக ரூ.750 கோடி செலவில் 41 இலட்சத்து 62 ஆயிரத்து 500 கலர் டி.வி.க்கள் வழங்கத் திட்டமிடப்பட்டு, 5.7.2009 தேதிவரை 5 இலட்சத்து 60 ஆயிரத்து 855 கலர் டி.வி.க்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆக மொத்தம் இலவச டி.விக்கள் வழங்குவதற்காக இதுவரை ரூ.2,267 கோடியே 87 இலட்சத்து 50 ஆயிரம் செலவிடப்பட்டுள்ளது. ஒரு கோடியே 4 இலட்சத்து 42 ஆயிரத்து 500 இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்க திட்டமிடப்பட்டு அதில், இதுவரை 66 இலட்சத்து 73 ஆயிரத்து 89 கலர் டி.வி.க்கள் பொது மக்களுக்காக வழங்கப்பட்டுள்ளன. 5ஆம் கட்டமாக வழங்குவதற்காக 25 இலட்சம் கலர் டி.வி.க்களை கொள்முதல் செய்வதற்காக ரூ.500 கோடி நிதியையும் தலைவர் கலைஞர் அவர்கள் ஒதுக்கீடு செய்துள்ளார். தற்போது, பல மாநிலங்களில் நடைபெற்ற தேர்தல்களில் பல்வேறு அரசியல் கட்சியினரும், தங்கள் தேர்தல் வாக்குறுதியாக இலவச கலர் டி.வி. வழங்குவோம் என்று தலைவர் கலைஞரை பின்பற்றி தேர்தல் அறிக்கையினை வெளியிட்டிருந்தனர்.

நிச்சயமாக கலர் டி.வி. வழங்குகின்ற இத்திட்டம் படிப்படியாகத் தொடர்ந்து கலர் டி.வி இல்லாத அனைவருக்கும் கிடைக்கும் வரை நிறைவேற்றப்படும். தேர்தல் நேரத்தில் கலைஞர் கொடுத்த வாக்குறுதியை நிச்சயமாக நிறைவேற்றுவார். யாரோ தந்த வாக்குறுதியல்ல



இது, தலைவர் கலைஞரால் வழங்கப்பட்ட வாக்குறுதி. தலைவர் கலைஞர் அவர்களால் அளிக்கப்பட்ட வாக்குறுதி என்பதால் மக்களும் நம்பிக்கையுடன் இருக்கிறார்கள்.

சென்னையில் ஒவ்வொரு வட்டமாக, ஒவ்வொரு பகுதியாக தொடர்ந்து இலவச கலர் டி.வி.க்கள் வழங்கப்படும். ஏழை, எளிய பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக பாடுபடும் தலைவர் கலைஞர் அரசை தொடர்ந்து நீங்கள் எல்லாம் ஆதரிக்க வேண்டும். தலைவர் கலைஞர் கரத்தை பலப்படுத்த வேண்டும். சொன்னதை எல்லாம் நிறைவேற்றும் கலைஞர் ஆட்சிக்கு என்றென்றும் நீங்கள் எல்லாம் துணை நிற்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்" என்று குறிப்பிட்டார்.

மேலும், 78ஆவது வட்டம் சென்னை கிருத்துவக் கல்லூரி மேல்நிலைப்பள்ளியில் கலர் டி.வி. வழங்கி மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் பேசும்போது, "இந்தப் பள்ளியில் தான் நான் படித்தேன். மறைந்த முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலிமாறன் அவர்கள் தான் என்னை இப்பள்ளியில் சேர்த்தார். முதலில் இடம் கொடுக்க மறுத்துவிட்டார்கள். அப்போதைய சென்னை மேயர் மரியாதைக்குரிய குசேலர் எனக்கு இந்தப் பள்ளியில் சேர சிபாரிசு செய்தார். இதே பள்ளியில் நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு சென்னை மாநகரத்தின் மேயராக, உள்ளாட்சித்துறை அமைச்சராக, தற்போது துணை முதலமைச்சர் என்ற பொறுப்புடன் நான் படித்த இப்பள்ளிக்கு வந்திருப்பதில் நான் பெரும் மகிழ்ச்சியடைகிறேன்." என்று குறிப்பிட்டார்.

நிகழ்ச்சிக்கு, வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் திரு. மா. சுப்ரமணியன் தலைமை வகித்தார். சென்னை மாநகராட்சி ஆணையாளர் திரு. ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., வரவேற்புரையாற்றினார். மாநகராட்சி ஆளுங்கட்சித் தலைவர் திரு. ந. இராமலிங்கம், எதிர்கட்சித் தலைவர் சைதை திரு. ரவி, மண்டலக்குழுத் தலைவர்கள் திரு. கே. ஏழுமலை, திரு. மா.ப. அன்புதுரை, திரு. எஸ். சுரேஷ்பாபு ஆகியோர் கலந்துகொண்டனர்.

---



## அய்யன் திருவள்ளுவர் சிலைத் திறப்பு விழாவிற்காக பெங்களூரு தமிழ்ச்சங்கத்திற்கு ரூ.10 இலட்சம் சிறப்பு மானியம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள் வழங்கினார்

கருநாடக மாநிலம் பெங்களூருவில், பெங்களூரு தமிழ்ச்சங்கத்தினால் அமைக்கப்பட்டு 9.8.2009 அன்று திறக்கப்பட்ட அய்யன் திருவள்ளுவர் திருவுருவச் சிலை திறப்பு விழா செலவுகளுக்காக நிதியுதவி வழங்குமாறு பெங்களூரு தமிழ்ச் சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் திரு. மு. மீனாட்சி சுந்தரம், செயலாளர் திரு. ஜி. தாமோதரன் ஆகியோர் அளித்துள்ள கோரிக்கையை ஏற்று, தமிழக அரசின் சார்பில் சிறப்பு மானியமாக 10 இலட்சம் ரூபாய் நிதியுதவிக்கான காசோலையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 30.7.2009 அன்று பெங்களூரு தமிழ்ச் சங்கத்தின் நிருவாகிகளிடம் வழங்கினார்.

❖ ❖ ❖

# சென்னையில் ரூ.14,600 கோடி மதிப்பீட்டில் மெட்ரோ இரயில் திட்டப் பணிகள்

மாண்புமிகு துணை முதலமைச்சர்

திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள் தொடங்கி வைத்தார்.



**செ**ன்னையில் நாளுக்கு நாள் அதிகமாகி வரும் வாகனப் போக்குவரத்து நெரிசலை கருத்தில் கொண்டு தரைக்கு அடியில் செல்லும் வகையில் மெட்ரோ இரயில் திட்டத்தைச் செயல்படுத்த தமிழக அரசு முடிவு செய்தது. அதன்படி வண்ணாரப்பேட்டையில் இருந்து விமான நிலையம் வரையிலும்; சென்ட்ரலில் இருந்து பரங்கிமலை வரையிலும் என 2 வழித்தடங்கள் அமைக்கப்படுகின்றன. மெட்ரோ இரயில் சில இடங்களில் தரைக்கு மேல் பாலத்திலும் சில இடங்களில் பாதாளத்திலும் செல்லும்.

இத்திட்டம் ரூ.14,600 கோடியில் செயல் படுத்தப்பட உள்ளது. இரு வழித் தடங்களிலும் மொத்தம் 45 கி.மீ. தூரத்துக்கு ரயில் பாதை அமைக்கப்படுகிறது. 24 கி.மீ. தூரத்துக்கு சுரங்கப்பாதையும் மீதி 21 கி.மீ. தூரத்துக்கு மேம்பாலமும் அமைக்கப்படும்.

முதல் வழித்தடம் வண்ணாரப்பேட்டையில் இருந்து பிராட்வே, சென்ட்ரல், ரிப்பன் மாளிகை, அண்ணா சாலையில் உள்ள தாராபூர் டவர்ஸ், ஸ்பென்சர், அண்ணா மேம்பாலம், சைதாப்பேட்டை, கிண்டி வழியாக விமான நிலையம் வரை அமைக்கப்படுகின்றது. 23.1 கி.மீ. தூரம் வண்ணாரப்பேட்டையில் இருந்து சைதாப்பேட்டை வரை சுரங்கப்பாதையிலும் மற்ற இடத்தில் மேம்பாலத்திலும் இரயில் செல்லும். 2ஆவது வழித்தடம் சென்ட்ரலில் இருந்து அண்ணா நகர், கோயம்பேடு வழியாக பரங்கிமலை வரை 22 கி.மீ. தூரம் அமைக்கப் படுகிறது. அண்ணாநகர் வரை சுரங்கப் பாதையும் மற்ற இடத்தில் மேம்பாலமும் அமைக்கப்படுகிறது.

மெட்ரோ இரயில் திட்டத்தின் முதல் கட்டமாக கோயம்பேட்டில் இருந்து அசோக்நகர் வரை 4.5 கி.மீ. தூரத்துக்கு உயர்த்தப்பட்ட வழித்தடம் (பாலம்) கட்டுவதற்கான பணி 10.6.2009 அன்று தொடங்கியது. கோயம்பேடு பேருந்து நிலையம் எதிரே நடந்த துவக்க விழாவில் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் கொடியசைத்து வைத்துப் பணிகளைத் தொடங்கி வைத்தார். ★

தாய்கோ வங்கி

TAICO BANK

# தமிழ்நாடு
# தொழிற் கூட்டுறவு வங்கி லிட்.

தாளமுத்து நடராசன் மாளிகை, நெ.1, காந்தி இர்வின் சாலை,
எழும்பூர், சென்னை – 600 008.
தொலைபேசி எண் : 044–28411643 / 28547952 தொலை நகல் : 044 –28416456
மின்னஞ்சல் : taico@dataone.in taico@vsnl.net இணையதளம் : www.taicobank.com

தாய்கோ வங்கி – 46 ஆண்டுகளாக மக்கள் சேவையில்

சேமிப்பு திட்டங்களுக்கு இதர வணிக வங்கிகளை விட அதிக வட்டி வழங்குகிறது

- சேமிப்பு / நடப்பு கணக்கு
- வைப்புகளுக்கு காப்பீடு வசதி
- குறுகிய கால வைப்பு
- பாதுகாப்பு பெட்டக வசதி
- கணக்கு தொடர் வைப்பு
- ரொக்கச் சான்றிதழ்
- நீண்ட கால வைப்பு

மூத்த குடிமக்களுக்கு மேலும் 1%அதிக வட்டி

## தாய்கோ வங்கியின் கடன் திட்டங்கள்

### தொழிற் கூட்டுறவு சங்கங்களுக்கு

- காசுக்கடன்
- காலக்கடன்
- சரக்கீட்டுக்கடன்
- வங்கி உத்திரவாதம்
- நலிந்தோர்க்கு டாப்செட்கோ மற்றும் டாம்கோ மூலம் கடன்

### பண்ணை சாராக் கடன் திட்டங்கள்

- சிறுபோக்குவரத்து வாகனங்கள் வாங்க கடன்
- வீடு அடமானக்கடன்
- சிறுதொழில் மற்றும் குறுந்தொழில் முனைவோர்க்கு
- அதிக பற்றுக்கடன்
- காலக்கடன் மற்றும் நடைமுறை மூலதனக்கடன்
- நகைக்கடன்
- வீடுகட்டக் கடன்
- தேசிய சேமிப்பு பத்திரங்கள் / கிசான் விகாஸ் பத்திரங்கள் மீது கடன்

விரைவில் அறிமுகப்படுத்தவுள்ள புதிய கடன் திட்டங்கள் :
எஸ்.எம்.இ. ஸ்மார்ட் (SME Smart Scheme) மற்றும் எஸ்.எம்.இ.ஸ்மார்ட் பிளஸ் திட்டம்(SME Smart Plus Scheme) மூலமாக குறு மற்றும் குடிசைத் தொழில் நிறுவனங்களுக்கு வழங்கும் கடன் வசதிகள்

புதியதாக திறக்கப்பட உள்ள கிளைகள் :
விழுப்புரம், இராமநாதபுரம், பெரம்பலூர், நாகப்பட்டினம், ஒட்டன்சத்திரம் மற்றும் தூத்துக்குடி

நிறைவான பாதுகாப்பும், உத்திரவாதமும் பெற **தாய்கோ வங்கியில்** முதலீடு செய்வீர்!

தமிழரசு

R.N.I. No.21446/70-Regn.No.TN/ARD/48/09-11
&WPP No.TN/PMG(CCR)518 / 09-11



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் பெங்களூருவில் அய்யன் திருவள்ளுவர் சிலையினை திறந்துவைத்தார். மாண்புமிகு கருநாடக முதலமைச்சர் திரு. **பி.எஸ்.எடியூரப்பா** அவர்கள் மற்றும் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. **பரிதி இளம்வழுதி** ஆகியோர் உடன் உள்ளனர். (9–8–2009)



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்களின் தலைமையில், சென்னை–அயனாவரம், இரயில்வே பாதுகாப்புப் படை அணிவகுப்புத் திடலில் நடைபெற்ற விழாவில், மாண்புமிகு கருநாடக முதலமைச்சர் திரு. **பி.எஸ்.எடியூரப்பா** அவர்கள், கன்னடக் கவிஞர் சர்வக்ஞர் சிலையை மின் ஊடகத் தொலைத் தொடர்பு வாயிலாக திறந்துவைத்தார். உடன் மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி, மாண்புமிகு கருநாடக அமைச்சர் பெருமக்கள் மற்றும் இரு மாநில அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர். (13–8–2009)